

கல்கி
KALKI
5.2.1967
40 காசு



BENSONS2/NGB-104C-TAM

மகனே நீடுழி வாழ்க!

அவன் இப்பொழுது தினந்தோறும் நாகரீகமாக உடை மற்றும் 'டை' அணிந்து கொள்கிறான். அவனை சிறு வயதில் பார்த்தால் அரைக்கால் சட்டையுடன் அலைந்து திரிவான்! இப்பொழுது அவன் ஒரு படித்த மேதை. எம்.ஏ. பாஸ் செய்துவிட்டு காலேஜில் லெக்சரராக இருக்கிறான். சில நாட்களுக்குமுன் அவன் எனது பழைய மூக்குக் கண்ணாடிக்குபுதிய பிரேம் ஒன்றைவாங்கி வந்தான். வெகுநாட்களாகவே அதை வாங்க வேண்டுமென்கிற ஆசை எனக்கு. அவனால் அதை எப்படி வாங்கமுடிந்தது என்று நினைக்கிறீர்களா? நேஷனல் அண்ட் கிரிண்ட்லேஸில் வழக்கமாக அவன் சேமித்து வந்ததால்தான். என் மகனைப்போல் எல்லா பையன்களும் இருக்க வேண்டுமென்பது தான் எனது விருப்பம். பிள்ளைகள் நன்றாக இருந்தால் பெற்ற தாய்களின் இன்பத்திற்கு கேட்கவா வேண்டும்.

நீங்களும் நேஷனல் அண்ட் கிரிண்ட்லேஸ் பாங்கும் உற்ற நண்பர்களாகி விடுவீர்கள்!

நேஷனல் அண்ட் கிரிண்ட்லேஸ் பாங்க் லிமிடெட்

பிரிட்டனில் இணைக்கப் பெற்றது . அங்கத்தினர்களின் பொறுப்பு அளவிடப்பட்டது.
அசோஸியேட்டட் பாங்குகள் : லாயிட்ஸ் பாங்க் லிமிடெட். நேஷனல் புரோவின்ஷியல் பாங்க் லிமிடெட்

கிளைகள் : சென்னை : 3, நார்த் பீச் ரோடு; 378, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ரோடு. (லாயிட்ஸ் கிளை); 6, அரமனைக்காரத் தெரு; 158, மவுண்ட் ரோடு,
தூத்துக்குடி : 44, பீச் ரோடு; ஹைதராபாத் : அபித் ரோட்

கல்கி

பொருளடக்கம்

பராபவ தை 23 :: பிப்ரவரி 5

நினைவுத் திரையில்...

ஓம். எம். ஐ. ஏ. காப்பி என்றால் சென்னையில் வெகு பிரசித்தம். பொது ஜனங்களுக்கு நல்ல சிற்றுண்டி வழங்குவதிலே புகழ்பெற்ற இந்த ஸ்தாபனத்தை ஏற்படுத்திய பெருமை, காலஞ்சென்ற ஸ்ரீமதி அனிபெஸண்ட் அம்மையாரைச் சேரும்.

ஸ்ரீமதி அனிபெஸண்ட் தம்முடைய வாழ்நாளில் இந்தியாவுக்காக எவ்வளவோ பாடுபட்டிருக்கிறார். ஆனால் ஓம். எம். ஐ. ஏ. காப்பியைச் சாப்பிட்டவர்களுக்கு ஸ்ரீமதி பெஸண்ட் செய்த தொண்டுகள் எல்லாவற்றையும் காட்டிலும் இந்த அருமையான காப்பித் தொண்டு தான் ரொம்ப முக்கியமானதாகத் தோன்றும். அவ்வளவு அருமையான காப்பி, சாப்பாடு, டிபன்!


கல்கி, ஜூலை 6, 1947

("என்ன சேதி"யிலிருந்து ஒரு பகுதி")



''கல்கி''யில் வெளிவரும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே

முறை தவறு


தயக்கமில்லாமல் ஊசி போட வேண்டியது தான். இல்லா விட்டால் தோல்வி நிச்சயம்
பண பலம்
அதிகார வர்க்கம்
காங்கிரஸ்
குதிரைக்கு ஊசி போட்டு வெறியேற்றிப் பந்தயத்தில் ஜயிக்க வைக்க முயலுவது உண்டு
PK

தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 26 □ இதழ் 27



வாக்காளர்களுக்கு

ராஜாஜியின் வேண்டுகோள்

எல்லா அரசியல் கட்சிகளும் தத்தம் தேர்தல் அறிக்கையை வெளியிட்டிருக்கின்றன. சுதந்திரக்கட்சியின் அறிக்கை சுதந்திரக் கட்சியின் நோக்கங்களை மிகத் தெளிவாக எடுத்துக்காட்டியிருக்கிறது. அந்த அந்தக் கட்சி, தான் அதிகாரத்துக்கு வந்தாலோ, அல்லது சட்டமன்றங்களில் எதிர்க்கட்சியாக உட்கார்ந்தாலோ எந்தக் கருத்துக்களை வற்புறுத்தும் என்பதை இந்த அறிக்கைகள் விளக்கி யிருக்கின்றன.

ஆனால் தற்போது மக்கள் கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்றே. காங்கிரஸ் கட்சி மறுபடியும் ஐந்து வருஷங்கள் மக்களிடம் பட்டா பெற்று அதிகாரஸ்தானத்துக்கு வந்தால் தேசம் கடன் பட்டுப் பாழாகி, ஏழை மக்கள் துயரத்தில் சிக்கித் தத்தளிப்பார்கள். இந்த முடிவுக்கு எதிர்க்கட்சிகள் அனைத்தும் வந்திருக்கின்றன. ஒவ்வொரு வாக்காளரும் ஆணும் பெண்ணும் தற்போது கவனிக்க வேண்டிய விஷயம் இதுதான். ஆனபடியால், காங்கிரஸுக்கு வோட்டு முத்திரை வைக்காதீர்கள். இரட்டை மாட்டுச் சின்னத்துக்கு முத்திரை கொடுக்காதீர்கள்.

தமிழ் நாட்டில் கூட்டணி எதிர்க் கட்சிகள் ஒன்றுபட்டு நிறுத்தியிருக்கும் அபேட்சகருக்குக் கட்டாயம் வோட்டு செய்யுங்கள். உதாரணமாகச் சொல்லுகிறேன்: சுதந்திரக்கட்சி அபிமானிகள் அனைவரும் கூட்டணி வேட்பாளர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவராயின் அவருக்கே வாக்கு அளித்து உதயசூரியன் சின்னத்துக்கு முத்திரை போட வேண்டும். தம்முடைய கட்சியாளர் அல்லவே என்று வருத்தப்பட வேண்டாம். கூட்டணி வேட்பாளர் அனைவரும் நம்முடைய வேட்பாளரே.

நான் விடுத்திருக்கும் இந்த வேண்டுகோளை மதித்து நாட்டினுடைய நன்மையைக் காப்பீர்களாக. காங்கிரஸுக்குத் தோல்வி கொடுத்தால்தான் நாட்டில் நல்ல ஆட்சி தோன்றும். லஞ்சமும் மோசமும் தீர்ந்து, மலை உச்சி ஏறியிருக்கும் விலைவாசிகள் கீழ் இறங்கி, பாரத நாடு தான் இழந்துவிட்ட மதிப்பை மறுபடியும் சம்பாதிக்க வழி ஏற்படும். இருபது ஆண்டு நிருவாகத்தில் காங்கிரஸ் செய்திருக்கும் பணி, நாட்டை அன்னிய அரசாங்கங்களுக்குத் தீர்க்க முடியாத 4000 கோடி ரூபாய்க்கு மேல் கடன்களுக்கு அடகு வைத்திருப்பது ஒன்றே. அதிகார பலத்தைக் கொண்டு, நாட்டில் மக்கள் சேமித்து வைத்திருக்கும் பணத்தைச் சுரண்டித் தன் அதிகாரம் நீடித்திருக்கச் செய்து வருகிறது காங்கிரஸ். இந்தத் தேர்தலில் மக்கள் தைரியமாகக் கடவுளையும் தருமத்தையும் நம்பி எதிர்க்கட்சிகளின் கூட்டணி வேட்பாளர்களுக்கு முழு ஆதரவு தரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

'காங்கிரஸுக்குத் தோல்வி கொடுத்தால் நாட்டில் அராஜகம் ஏற்படும்; நிருவாகம் ஒழுங்காக நடக்காது' என்று காங்கிரஸைச் சேர்ந்த யார் சொன்னாலும் நம்பாதீர்கள். அராஜகம் ஒரு நாளும் ஏற்படாது. நியாயமான நிருவாகம் நடைபெறும்.

சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரி

என்ன சேதி?

- ☐ மன்னிக்கலாமா?
- ☐ ஏமாற்றுவித்தை பலிக்காது
- ☐ சாது மிரண்டால்...
- ☐ தேர்தல் செலவுகள்

''காங்கிரசை மன்னித்து வோட்டளியுங்கள்'' என்று யூனியன் தொழில் மந்திரி திரு சஞ்சீவய்யா கேட்டுக் கொண்டிருக்கிறார். காங்கிரஸ் மன்னிக்க முடியாத அளவுக்குப் பெருந் தவறுகளைச் செய்திருக்கிறது என்று ஆட்சி பீடத்திலிருக்கும் மந்திரியே ஒப்புக் கொள்வதாக இதன் உட்பொருள். தமிழ் நாட்டில், ''காங்கிரஸை விட்டால் வேறு வழியில்லை!'' என்ற நிலையிருந்தால் காங்கிரஸை மன்னிப்பது பற்றிப் பேசலாம். காங்கிரஸை விடப் பலமாகக் கூட்டணி இருக்கையில் காங்கிரஸை எதிர்க் கட்சியில் இருத்த வேண்டுமே தவிர அதை மன்னித்து ஆட்சி பீடத்தில் அமர்த்தக் கூடாது. மூன்று முறை மன்னித்தது போதாதா?

காங்கிரஸ்காரர்கள் என்றும் ஏகவது சுதந்திரக் கட்சியை. ஆனால் 'ஆபத்து' என்று வந்து விட்டால் சுதந்திரக் கட்சியின் கொள்கைகளைக் கடைப்பிடிப்பதே அவர்கள் தொழிலாகி விட்டது.

தேர்தல் நெருங்க நெருங்க காங்கிரஸ் கட்சிக்கு ஜுர வேகம் எவ்வளவு அதிகமாகி வருகிறது என்பதை அக்கட்சியின் அன்றாட நடவடிக்கையிலிருந்து புரிந்து கொள்ளலாம். ரேஷன் அரிசிக்காகத் தவம் கிடக்கும் மக்களும், 'அரிசி இல்லை' என்ற ஏமாற்றுப் பாட்டைக் கேட்டுக் கேட்டுத் திரும்பிச் செல்லும் வாக்காளர்களும் காங்கிரஸுக்கு வோட்டளிப்பார்களா? சந்தேகந்தானே? உடனே காங்கிரஸ் 'செக் போஸ்ட்' கட்டுப்பாடுகளை யெல்லாம் தளர்த்தி விட்டது. செங்கல்பட்டிலிருந்து சென்னை நகருக்கு ஒரு தலைச் சுமை அரிசி கொண்டு வரலாம், அதற்குக் கட்டுப்பாடுகிடையாது என்று விதியைத் தளர்த்தியது. இதனால் மக்களிடையே உற்சாகம் ஒன்றும் கணிசமாகப் பெருகவில்லை என்று கண்டவுடன் செங்கல்பட்டு என்ன, தென்னார்க்காட்டிலிருந்தே கூட ஒவ்வொருவரும் அரிசி கொண்டு வந்து கொள்ளலாம் என்று உத்தரவைத் தளர்த்தி யிருக்கிறது.

''தேர்தல் முடிகிறவரைக்கும் காலைப் பிடி; அதற்குப் பிறகு கழுத்தைப் பிடி'' என்ற தந்திரத்தைக் காங்கிரஸ் கையாள்கிறது. இதற்கு வாக்காளர்கள் ஏமாந்து விடப் போவதில்லை!

ஒருசிலரை எப்போதும் ஏமாற்றலாம்; அனைவரையும் சிலகாலம் ஏமாற்றலாம். ஆயின் அனைவரையும் எல்லாக் காலமும் ஏமாற்றிக் கொண்டிருக்க முடியுமா? காங்கிரஸின் ஏமாற்றுத் தந்திரங்களுக்கு ஒரு முடிவு காலம் வந்துவிட்டது என்றே நம்புகிறோம்.

பெங்களூரிலிருந்து வெளியாகும் ''மைஸிந்தியா'' என்ற பத்திரிகை தனது தலையங்கத்தில், 'டாக்டர் தர்மதேஜா அவர்களின் கப்பல் கம்பெனி விஷயத்தில் ஆளும் மந்திரிகள் ஏமாந்தது ஒன்று போதும், இந்தக் காங்கிரஸ் கட்சியினரை அப்புறப் படுத்துவதற்கு' என்கிறது. பிரிட்டனிலோ, அமெரிக்காவிலோ இத்தகைய ஒரு சம்பவம் நிகழ்ந்திருப்பதாக வெளிப்பட்டிருந்தால், அந்தக் கணமே ஆட்சி அப்புறப்படுத்தப் பட்டிருக்கும் என்கிறது. ஆனால் நம் நாட்டில் டாக்டர் தர்மதேஜா விஷயம் ஒன்றுதானா? எத்தனை எத்தனையோ ஊழல்கள்! எனினும் வாக்காளர்கள் இதுவரை சாதுவாக இருந்திருக்கிறார்கள். இப்பொழுது மிரண்டு பார்க்க ஆரம்பித்திருக்கிறார்கள். சாது மிரண்டால் காடு கொள்ளாது என்பது பழமொழியல்லவா?

லோபோ பிரபு 'இன்லைட்'டில் எழுதுவது சிந்தனைக்குரியது. அவர் கூறுவதாவது:

> 1967 தேர்தலில் அரசாங்கச் செலவு குறைந்தபட்சம் பன்னிரண்டு கோடி ஆகும். காங்கிரஸ் கட்சியும், எதிர்க் கட்சிகளும், அபேட்சகர்களும் செய்யும் செலவு மொத்தத்தில் 50 கோடி ரூபாய் ஆகலாம். (இந்த நேரடிச் செலவு தவிர) கடந்த ஓராண்டாகவே, வோட்டுகள் பெறும் நோக்கத்துடன் பல வர்க்கங்களுக்கும் தொகுதிகளுக்கும் மறைமுகமாகப் பல விதங்களில் செலவிடப்பட்டிருக்கிறது....
>
> இம்மாதிரிச் செலவழித்ததையும், கணக்கில் கொண்டால் தேர்தலின் மொத்தச் செலவு 250 கோடி ரூபாயாகி விடும்....
>
> தேர்தலை உத்தேசித்தே செய்த இந்தச் செலவுகள் இதோடு நிற்குமா? இப்போது செய்யப்பட்ட விலை உயர்வும், ஊதிய உயர்வும் குறைக்கப்பட வாய்ப்பில்லை. இது மட்டுமின்றி, ஐந்தாண்டுக்கொரு முறை அரசியலுக்காகப் பொருளாதாரத்தைப் பலியிடுவதால் மக்களுக்கு ஜனநாயகமே வெறுத்துவிடும்.

சங்கீத ரத்னாகர பிரம்மஸ்ரீ அரியக்குடி ராமானுஜ ஐயங்கார் அவர்களின் மறைவையொட்டி, அன்னாருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், நெய்வேலி டவுன்ஷிப் அமராவதி தியேட்டரில் 29-1-67 அன்று நடக்கவிருந்த ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களின் கச்சேரி 12-2-67க்கு ஒத்திப் போடப்பட்டிருக்கிறது.

— நெய்வேலி சங்கீத சபா, நெய்வேலி

நெடுமரம் சாய்ந்தது

சீப்பும் இசையுமாக வளர்ந்து வஜ்ரம் பாய்ந்த தேவதாரு விருட்சம் சாய்ந்தது போல், அரியக்குடி ஸ்ரீ ராமானுஜ அய்யங்கார் அவர்கள் நிறைந்த புகழுடனும் நீங்காத இசையுடனும் பெரு வாழ்வு வாழ்ந்து விட்டு நாதப் பிரம்மத்தில் இரண்டறக் கலந்து விட்டார்.

ஸத்குரு தியாகையரின் சிஷ்ய பரம்பரை என்ற பெருமை படைத்த அய்யங்கார் அவர்கள் ஒரு பொன்னூண்டுக் காலத்துக்கு மேலாகக் கர்நாடக சங்கீதத்தின் சக்கரவர்த்தியாக இருந்திருக்கிறார். இப்பேர்ப்பட்ட ஒரு பெருங் ஜோதி வாய்ந்த இசை வாழ்வு சங்கீத சரித்திரத்திலேயே ஈடிணையற்றது எனலாம். தேர்ந்த ரஸிகர்களுக்காக, தமது மனோபாவப்படியே கலைஞர்கள் இசைத்த காலம் மாறி, பண்டிதரோடு பாமரரும் சேர்ந்து மகிழுமாறு சங்கீத சபைகளில் 'வித்வான்கள் கச்சேரி செய்ய வேண்டிய புத்தமைப்பு ஏற்படத் தொடங்கியபோது, அய்யங்கார் அவர்களின் பிரவேசம் நிகழ்ந்தது. புத்தமைப்புக்கு ஏற்றபடி, சங்கீதக் கச்சேரியின் பாணியைப் புதுப்பித்துத் தரும் அவசியமான பணியை அற்புதமான முறையில் சாதித்து விட்டார் அந்தப் பெரியவர். பண்டிதர்கள் குற்றங்காணாத வகையிலேயே — பாமரரும் ரஸித்து மகிழும்படி கச்சேரி முறையை அமைத்த பெருமை அரியக்குடி அவர்களுக்கு விசேஷமாக உரியது.

ஸ்ரீ அய்யங்கார் அவர்களின் சங்கீதச் செப்பில் இரண்டு அம்சங்களை முக்கியமாகச் சொல்ல வேண்டும். வாய்ப்பாட்டை வாய்ப்பாட்டாகவே வைத்திருந்தது இவற்றில் முதலாவது. 'இது பெரிய விஷயமா?' என்று தோன்றும். ஆயின், நாதசுரம் போலவும் தாள வாத்தியம் போலவும் சங்கீதத்தை ஆக்கிவிடுகிற சபலம் எவ்வளவு உக்கிரமானது என்பதையும் பார்க்குமிடத்து வாய்ப்பாட்டை வாய்ப்பாட்டாக வைத்துக் காப்பதன் பெருமை புலனாகும். இரண்டாவதாக அளவு அறிந்து பாடுவதில் மன்னர் ஸ்ரீ அய்யங்கார். ஆலாபனையாயினும், நிரவலாயினும், ஸ்வரப்பிரஸ்தாரமாயினும் எதிலும் மிகை இராது. ரஞ்சகம் சிறிதும் குன்றக் கூடாது என்பதில் அவ்வளவு கண்ணும் கருத்துமாக இருந்தவர் அவர். பலதரப்பட்டவரும் கேட்டு மகிழும்படி மத்திமகால 'டெம்போ'வில் அவர் பெற்றிருந்த அநாயாச வன்மையைப் போற்றும் ரசிகர்கள் பலர். திருப்பாவைக்கு வர்ணமெட்டமைத்துத் தமிழுக்கும் பக்திக்கும் அவர் செய்துள்ள தொண்டினை மறக்க முடியாது.

பாரத புண்ணிய பூமியில் சரித்திரம் தோன்றிய நாளாக, எல்லாத் துறைகளிலும் வாழையடி வாழையாக மகனீயர்கள் தோன்றிக் கொண்டேதான் இருக்கிறார்கள். எனினும் பீஷ்மரும், துரோணரும், ஜாம்பவானும் அமர்ந்திருந்த பீடங்கள் இன்னமும் காலியாகவேதான் இருக்கின்றன. அரியக்குடி அவர்கள் அமர்ந்திருந்த அரியாசனமும் அப்படித்தான் வெறிச்சோடி விட்டது.



படம் உதவி : என். ஆர். பூவராகன்

ராஜாஜியின் கருத்துக்கள்



ஜனநாயக அடிப்படையில் அமைந்த அரசாங்கங்கள் பொதுமக்கள் கருத்தை முன்கூட்டியே அறிந்து, அவர்கள் கிளர்ச்சியும் பலாத்காரமும் செய்யு முன்பே காரியம் எடுக்க வேண்டும். அச்சுறுத்தலுக்கு அரசாங்கம் அடிபணிந்தால் சட்ட சபை ஜனநாயகம் கேலியாக வேண்டியதுதான். தேசத்தின் பொதுவான கருத்து அரசாங்கத்துக்குச் சாதகமாக இருந்து, ஒருசில தீவிர கோஷ்டிகள் மட்டுமே அச்சுறுத்தியும், பலாத்காரமிழைத்தும் வருமாயின் அப்போது அரசாங்கம் உறுதியாகத்தான் இருக்க வேண்டும். பயமுறுத்தலுக்குக் கீழ்ப்படிந்து விடக் கூடாது. ஆனால் தேர்தலுக்காக ஏராளமாகச் செலவழித்துப் பிரதிநிதிகளை அனுப்பி வைத்த பிறகும், சட்ட சபை விவாதத்தின் மூலம் தங்கள் கருத்துக்கு வெற்றி காண முடியவில்லை என்பதால் மக்கள் பலாத்காரத்தை ஒரு சுலபமான சாதனமாகக் கையாளத் தொடங்கினால் அது வேறு விஷயம். இதன் விளைவாகச் சட்ட சபை முறையே போய், அராஜக வழியிலேயே அரசியல் அமைந்துவிடும்.

❀❀❀

அரசியல் சாஸனப்படி சமஸ்தான மன்னர்கள் அதிகாரம் இழந்த பின்னும் அவர்களுக்கும், பழைய ராஜ குடும்பத்தினருக்கும் மக்களிடத்தில் பெரும் பிடிப்பு இருக்கிறது. இதனால் காங்கிரஸ் ஆட்சி அவர்களின் உதவியைத் தேர்தலில் நாட வேண்டியிருக்கிறது. அவர்களைத் தமது கட்சியின் வேட்பாளராக நிறுத்த விரும்புகிறது. அல்லது அவர்களிடம் வேறு வித ஆதரவை எதிர்பார்க்கிறது. பழைய மன்னராட்சி பெற்றிருந்த ஆதரவைக் காங்கிரஸ் நிருவாகம் எவ்வளவு தூரம் இழந்து விட்டது என்பதை இது வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. மன்னர்களுக்குப் பெருந்தன்மையும் கௌரவமும் ஒரு மரபாக அமைந்திருந்தன. இதனாலேயே மக்களின் அன்பைப் பெற்றனர். காங்கிரஸ் கட்சியால் ஆட்சி பீடத்தில் ஏற்றி வைக்கப்பட்டுள்ள சிறிய மனிதர்களுக்கு இந்தக் குண நலன்கள் கிடையா. அவற்றைப் பெற அவர்கள் முயலவும் மாட்டார்கள். பழைய மன்னர்களின் மீது வசை மாரி பொழிந்த போதிலும், அவர்கள் ஆட்சி நடத்தியபோது அளித்த நல்ல நிருவாகத்தின் நினைவை அழிக்க முடியவில்லை; புதிய ஆட்சியாளரின் தவறுகளை மறக்கச் செய்யவும் முடியவில்லை.

பழைய மன்னர்களின் உத்தரவுகள் முடிவானவையா யிருப்பினும், அவற்றில் ஒரு மென்மையும் கலந்திருக்கும். கௌரவத்துக்கும் இறுமாப்புக்கும் இடையே உள்ள வித்தியாசத்தையும், உறுதிக்கும் அடக்குமுறைக்கும் இடையே உள்ள வித்தியாசத்தையும் உணர முடிந்தது. அந்தரங்கமான முறையில் நிருவாகத் துறையில் அநுபவஸ்தரானவர்களின் ஆலோசனையைப் பெற்ற பின்பே மன்னர்கள் உத்தரவு பிறப்பித்தனர். அந்தரங்கமான முறையில் இது நடந்ததால் நிருவாகத் திறமை பெற்றவர்கள் மக்களின் ஆதரவைப் பெறப் பரஸ்பரம் போட்டி யிடவோ, அல்லது மன்னரை எதிர்த்துப் போட்டியிடவோ இடமில்லாமலிருந்தது. அதற்கெல்லாம் இரையாக இன்றைய முறையில் எதுவும் இல்லை. இப்படியெல்லாம் சொல்வதால் ஜனநாயகத்தை விட முடியாட்சியை ஆதரித்து வாதிப்பதாக எண்ணலாகாது. தான்தோன்றித்தனமாக இன்று கிளம்பியுள்ள யதேச்சாதிகாரத்தின் தீய அம்சங்களைக் கண்டிக்கவே எழுதுகிறேன்.

❀❀❀

டாக்டர் ஸ்க்வைஸைமர் எழுதுகிறார்:

புதிய ஸையன்ஸ் ஆராய்ச்சியின்படி, சிரிப்பு என்பது நுரையீரலிலிருந்து குடல் வரை உடலின் எல்லாப் பாகங்களின் மீதும் விளைவுகளை உண்டாக்குகிறது. நோய் குணமாவதைச் சிரிப்பு விரைவு படுத்துகிறது. மனிதன் உயரவாக்காக வளர்ந்திருப்பதால் அவனது உடலவைவுகளும் உறுப்புக்களின் அழுத்தமும் பாதிக்கப்படுகின்றன. இதை ஈடுகட்டுவதற்காக இயற்கை கண்டு பிடித்த வஸ்துவே சிரிப்பு என்று கருதுவாருண்டு. முதலில், நுரையீரலை முக்கியமாகச் சொல்ல வேண்டும். சிரிப்பதனால் அதன் தசைச் சுவர் மேலும் கீழும் இயங்குகிறது; காற்று நுரையீரலுக்குள் இழுக்கப்படுகிறது. பின்னர் நுரையீரலின் சகல பகுதிகளும் சுவாசத்தால் சுத்தமான பின் இக் காற்று பலவந்தமாக வெளித் தள்ளப் படுகிறது. சிரிக்கும்போது உயிர்ச் சக்தியூட்டும் பிராண வாயு நிறைந்த காற்று பெருமளவில் நுரையீரலுக்குள் உறிஞ்சப் படுகிறது. இந்த அம்சத்தில் மனமாரச் சிரிப்பதற்கு ஈடாகத் தீர்க்கமாக சுவாசப் பயிற்சி செய்வதைக் கூடச் சொல்ல முடியாது. வயிற்றுக்கும் நுரையீரலுக்குமிடையே உள்ள தசைச் சுவர் சிரிப்பினால் கீழ் மேலாக இயக்கமுறுவதால் ஈரலைப் பிடித்துக் கொடுத்து சுவஸ்தம் செய்வது போலாகிறது. இதனால் ஈரல் அதிகப் பித்த நீரைச் சுரக்கிறது. அதிருப்தியுடனும் விசனத்துடனும் உண்பவர்களைவிட, உண்ணும்போது சிரிப்பவர்களால் நன்றாக உணவைச் சீரணித்துக் கொள்ள முடிகிறது. சிரிப்பு எல்லாச் சுரப்பிகளையுமே இதமாக அழுத்திச் சுரக்கச் செய்கிறது. தேக வளர்ச்சிக்குக் காரணமான பிட்யூடரி சுரப்பியையும் சிரிப்பு தூண்டி விடுகிறது.

நல்லாட்சி வேண்டும்

இரா. நெடுஞ்செழியன்

ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
போஒம் அளவும் ஓர்நோய்

என்பது வள்ளுவப் பெருந்தகையாரின் வாய்மொழி. 'சான்றோர்கள் கூறுகின்ற அறிவுரைகளைக் கேட்டு அவற்றின்படியும் செய்ய மாட்டான்; தானே அறிவுத் தெளிவு பெற்று அதன்படியும் செய்ய மாட்டான்; அப்படிப்பட்டவனின் உயிர் நீங்கும்வரை அவன் சமூகத்துக்கு ஒரு நோயாகவே இருந்து வருவான்' என்பது கருத்து. வள்ளுவரின் கூற்றுக்கு இணங்கச் சென்ற இருபது ஆண்டு காலமாக ஆளும் கட்சியாக விளங்கும் காங்கிரஸ் கட்சி, அரசியல் — பொருளியல் — சமூகவியல் வல்லுநர்கள் கூறுகின்ற அறிவுரைகளையும், பரிந்துரைகளையும் கேட்டுச் செய்யவும் மறுக்கிறது; தானே அவ்வியல்களில் தெளிவு பெற்றுச் செயலாற்றவும் மறுக்கிறது; இந்தக் கட்சி ஆட்சி மணையை விட்டு அகலும் வரையில் இது நாட்டுக்குச் சொல்ல முடியாத துன்பங்கள் தரும் ஒரு நோயாகவே இருந்து வரும். அந்த நோயைப் போக்கி நாட்டைக் காப்பாற்றி, நாட்டின் நலத்தைப் பெருக்க வேண்டியது சனநாயகத்திலே நம்பிக்கையுள்ள ஒவ்வொருவரின் நீங்காக் கடமையாகி விட்டது.

அந்தக் கடமையுணர்ச்சியின் அடிப்படையில் பொறுப்புணர்ந்த எதிர்க் கட்சிகள்தான், இன்று தொகுதி உடன்பாட்டில் எதிர்ப்பு அணியினை உருவாக்கி ஆளும் கட்சியான யதேச்சாதிகார காங்கிரஸ் ஆட்சியை அகற்றி, சனநாயகத்தை நிலைநாட்ட முயன்றுள்ளன. சனநாயகத்தை நிலைநாட்டுவதுதான் இன்று எதிர்ப்பு அணியில் இணைந்துள்ள கட்சிகளின் தலையாய கடமையாக விளங்குகிறது.




இன்று ஆண்டுகொண்டிருக்கும் காங்கிரஸ் கட்சி அரசுக்கும் கட்சிக்கும் வேறுபாடு இல்லாமல் செய்து விட்டது. மக்களால் — மக்களுடைய — மக்களுக்கான ஆட்சி என்ற சனநாயக இலக்கணத்தைக் காங்கிரஸ்காரர்களால் — காங்கிரஸ்காரர்களுடைய காங்கிரஸ்காரர்களுக்கான ஆட்சி என்று மாற்றி அமைத்து விட்டது.

அரசாங்கத்தின் வாய்ப்பு வசதிகள் அனைத்தும் காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சிக்கே பயன்படுத்தப் படுகின்றன.

காங்கிரஸ் ஆட்சியில் வரி உயர்ந்து கொண்டே போகிறது; வரியைப் பார்த்து விலை ஏறுகிறது; விலையைப் பார்த்து வறுமை வளர்கிறது; வறுமையைப் பார்த்துப் பீடை வளர்கிறது; பீடையைப் பார்த்துப் பிணிகள் வளர்கின்றன; பிணிகளைப் பார்த்துப் பிணங்கள் வளர்கின்றன.

நாட்டின் நலிவைப் போக்க, நன்மையைப் பெருக்க, வறுமையைப் போக்க, வாட்டத்தை நீக்க, நீதியை நிலைநாட்ட, நேர்மையைக் கடைப்பிடிக்க, வரிச்சுமையைக் குறைக்க, விலை ஏற்றத்தைத் தடுக்க, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க, வசதிகளைப் பெருக்க இன்றைய காங்கிரஸ் ஆட்சி தவறி விட்டது.


நாட்டின் இயற்கைச் செல்வங்கள் மீட்கப்பட வேண்டும்; உற்பத்தி பெருக வேண்டும்; ஏற்றுமதி மிக வேண்டும்; இறக்குமதி குறைய வேண்டும்; நாட்டின் பொது வருமானமும், தனியார் வருமானமும் உயர வேண்டும்; வாழ்க்கைத் தரம் உயர வேண்டும்; வயிறார உண்ண உணவு வேண்டும்; அதுவும் மூன்று வேளை உணவாக வேண்டும்; அதுவும் முழு வயிறு உணவாக வேண்டும்; மானமார உடுக்க உடை வேண்டும்; தேவையார இருக்க இடம் வேண்டும்; அறிவாரக் கல்வி வேண்டும்; வேலை வாய்ப்பு வேண்டும்; ஓய்வு வேண்டும்; உல்லாச வசதிகள் வேண்டும்; இந்த அடிப்படை வசதிகளை இயற்றித் தரத் தக்க தகுதி பெற்ற அரசு வேண்டும்; அரசை நடத்த நல்லாட்சி வேண்டும்; நல்லாட்சியை நடத்த நல்லவர்கள் வேண்டும்; அந்த நல்லவர்களும் வல்லவர்களாக இருக்க வேண்டும். இதனைச் செய்து முடிக்கவே இன்று எதிர்ப்பணி உருவாகியிருக்கிறது.



பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னுல் டிராம்பேயில் அணுசக்தி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டபோது, அது இந்துணை குறுகிய காலத்தில் உலகின் கவனத்தையே கவரக் கூடிய ஒரு முக்கிய விஞ்ஞான ஸ்தாபனமாக வளர்ந்துவிடும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. ஆனல், அவ்வாறு நிகழத்தான் செய்தது. இந்தப் பெருமைக்கு முக்கிய காரணம் அதன் தலைவராகப் பணியாற்றிய ஹோமி பாபாவையே சேரும்.

அணுமுதல் அரிசிவரை

ஓர் ஆராய்ச்சி நிலையத்தைத் தொடங்க முக்கிய தேவைகள் என்னவென்று கேட்டால் நுணுக்கமான விலை உயர்ந்த கருவிகள், அவற்றைப் பாதுகாப்பாக வைத்திருக்க நல்லதொரு கட்டிடம் என்றுதான் பலரும் சொல்லத் தொடங்குவர். ஆனல் பாபா இவற்றுக்கெல்லாம் முன்னதாக ஆராய்ச்சிகளை வெற்றிகரமாகச் செய்து முடிக்கக் கூடிய அறிவாளிகளைத் தான் முதலில் தேடுவார்.



இந்நாட்டில் விஞ்ஞானத் துறைக்குத் தலைவர் என்றே பாபாவைக் கருதுபவர்கள் பலர் உண்டு. ஏனெனில் அவரது ஆர்வம் அணுசக்தித் துறையில் மட்டுமின்றி விஞ்ஞானத்தின் வேறு பல கிளைகளிலும் படர்ந்து பரவியிருந்தது. இந்தியாவில் ரேடியோ வான சாஸ்திரம், விண்வெளி ஆராய்ச்சி, கதிர் வீச்சு மருத்துவம், உணவுத் துறை விஞ்ஞானம், பொறி இயல் விஞ்ஞானம் போன்ற பல துறைகளில் மகத்தான முன்னேற்றங்கள் ஏற்படக் காரண புருஷராகத் திகழ்ந்தவர் பாபா. இதே மனப்பான்மை காரணமாகத்தான் டிராம்பே அணுசக்தி நிறுவனம் அந்த ஒரு துறையில் மட்டுமல்லாமல் நாட்டுக்குப் பயனளிக்கும் வகையில் பல விதங்களில் — எலெக்ட்ரானிக் சாதனங்கள் முதல் புது ரக நெல் உற்பத்தி வரை — செயலாற்ற வேண்டும் என்று முடிவு கட்டி அதற்கேற்ப உழைத்தார்.

தேவையற்ற சில்லறை விஷயங்களில் கவனம் செலுத்தித் தமது நேரத்தைப் பாழாக்க மாட்டார் பாபா என்றாலும் கூர்ந்த மதியும் கலை உள்ளமும் கொண்ட அவரது பார்வைக்கு அவசியமான எந்த விஷயமும் தப்பாது. தோட்டத்தில் எந்த இடத்தில் எந்தக் காலத்தில் எந்தப் புஷ்பச் செடியைப் பயிராக்கலாம் என்று யோசனை கூறுவார்; கட்டிடத்துக்குத் தருவிக்கப்படும் செங்களின் தரம் எத்தகையதாக இருக்க வேண்டும் என்று சொல்லுவார். சிக்கலான விஞ்ஞானப் புதிரையும் விடுவிப்பார்.



இத்தகைய மேதை மறைந்து ஜனவரி 24ந் தேதியுடன் ஓராண்டு காலம் ஆகியது. அந்த நினைவு நாளையொட்டிப் பாரதப் பிரதமர் டிராம்பே அணுசக்தி நிறுவனத்தின் பெயரை ''பாபா அணு ஆராய்ச்சிக் கேந்திரம்'' என்பதாக மாற்றியிருக்கிருர்.

பாபாவின் புகழ் உள்ளளவும் பாபா அணு ஆராய்ச்சிக் கேந்திரம் நாட்டுக்கு நலன் பயக்கும் பல காரியங்களைச் செய்து வர வாழ்த்துகிறேம்.



தேர்தலோ தேர்தல்!



"வணக்கம்."

"வணக்கம். எங்கே இப்படி?"

"தேர்தலில் நிற்பதாக இருக்கிறேன். உங்கள் உதவியைத்தான் நம்பியிருக்கிறேன்."

"நீங்களா? தேர்தலுக்கா? சௌக்கியந்தானே?"

"இருக்கிறேன். உங்கள் புண்ணியத்தில்!"

"இதைவிட ஏதாவது உபயோகமான காரியத்தில் இறங்குவதுதானே?"

"இதைவிட நாட்டுக்குச் செய்யக்கூடிய தொண்டு வேறென்ன இருக்கிறது?"

"புரிந்தது."

"என்ன புரிந்து கொண்டீர்கள்?"

"கொஞ்சம் போதாத வேளை. அதனால் புத்தி கொஞ்சம் பாதிக்கப்பட்டிருக்கிறதென்று. என்னால் என்ன ஆக வேண்டும்? சொல்லுங்கள்."

"உடனடியாக நன்றாகச் சமைக்கத் தெரிந்த இருபத்தைந்து பரிசாரகர்கள் தேவை. அதற்கு ஏற்பாடு செய்யுங்கள்!"

"இருபத்தைந்து பரிசாரகர்களா? அம்மாடி! பட்டணத்திலுள்ள பாதிப் பேர்களுக்குச் சாப்பாடு போடுவதாக உத்தேசமா?"

"நீங்கள் என்ன நினைத்தீர்கள்? வோட்டுப் போடுபவர்கள் வெறும் வயிற்றோடு போவார்களா? ஐம்பது சிற்றாள்களும் தேவை!"

"சிற்றாள்கள் எதற்கு?"

"நன்றாகக் கேட்டீர்கள். பாத்திரம் தேய்க்க, இடம் சுத்தம் செய்ய, கூப்பிட்ட குரலுக்கு ஏனென்று கேட்க. வேலையாட்கள் இல்லாமல் வேறு யார் இதெல்லாம் செய்வார்கள்?"

"கல்யாணம் கெட்டது, போங்கள். இன்னும் ஏதாவது?"

"முப்பது டிரைவர்கள் தேவை. மோட்டார் தவிர டிரக்கு, ஜீப்பு, அவசியம் ஏற்பட்டால் ஜட்கா, மாட்டு வண்டியும் ஓட்டத் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும். தூக்கம் வராதவர்களாகவும், சீக்காய்ப் படுக்காதவர்களாகவும் பார்த்துத் தேர்ந்தெடுக்கவும்!"

"திடீரென்று ஜுரம் வந்து விட்டால்....?"

"காய்ச்சல் அடித்தாலும் வண்டி ஓட்டக் கூடியவர்களாக இருந்தாக வேண்டும்."

"பேஷ். இன்னும் ஏதாவது?"

"நான் இன்னும் பாதி கூடச் சொல்லி முடிக்கவில்லை. கூட்டங்களில் பேசக்கூடியவர்கள் இருபத்தைந்து பேர்கள் தேவை."

"அவர்களின் யோக்கியதாம்சங்கள்?"

"சரியான கேள்வி! இதோ சொல்லுகிறேன். 'மைக்'கின் உதவியில்லாமல் பேசக் கூடியவர்களாகவும் வசவு மாரி, முட்டை வீச்சு, கல் மழை இத்தியாதிகளைக் கொஞ்சமும் பொருட்படுத்தாமலும் கூட்டத்தில் யாருமே இல்லாவிட்டாலும் வீராவேசத்துடன் பேசக் கூடியவர்களாகவும் இருக்கவேண்டும்.."

"நல்லது. மேலே சொல்லுங்கள்."

"அரை டஜன் கவிராயர்கள், பஜனை கோஷ்டியினர், கவர்ச்சியும் அழகும் சகஜ குணமுள்ள பெண்கள்

ஆகியோர் அவசியம் வேண்டியவர்கள்.''

'' சபாஷ். இன்னும் ஏதாவது உண்டா?''

'' இனிமேல்தான் மிக முக்கியமான கட்டம் வருகிறது. ஒற்றர்களும், வதந்தி கிளப்புபவர்களும் எதிரிகளின் கூட்டங்களைக் கலைப்பவர்களும் ஓர் ஐம்பது பேர் கட்டாயம் தேவை. கவனித்துக் கொள்ளுங்கள்.''

''எதிர்க்கட்சிக் கூட்டங்களை எப்படிக் கலைப்பது ?''

''இது தெரியாதா ? வெகு சுலபம். கூட்டம் நடந்து கொண்டிருக்கும் போது ஒரு பாம்பு அல்லது ஒரு காளையை எப்படியாவது புகுத்தி விட வேண்டியது. எல்லா ஏற்பாடுகளும் கச்சிதமாகச் செய்து கொண்ட பிறகுதான் யுத்த பூமியில் அடி யெடுத்து வைக்க வேண்டும். இன்னும் இரண்டொரு விஷயங்கள் நினைவுக்கு வருகின்றன.''

''சொல்லித் தொலையுங்கள்.''


''கைத்தடி, கத்தி, கைத் துப்பாக்கியுடன் என்னுடன் சில முரடர்கள் சதா இருந்தால் தேவலை. குறைந்தபட்சம் ஒரு நூறு பேராவது கூலிக்கு என் பிரசாரங்களைக் கேட்க அமர்த்தியாக வேண்டும். அவ்வளவுதான் என்று நினைக்கிறேன்.''

''ஒரு விஷயம் மறந்து விட்டீர்கள். சொல்லட்டுமா ?''

''தாராளமாக!''

''உங்கள் பிரசாரங்களை யார் தயார் செய்யப் போகிறீர்கள்?''

''நீங்கள் இருக்கும் போது எனக்கு அந்தக் கவலை ஏன்?''





ஹிந்தி: ஸ்ரீ கோபால் பிரசாத் வியாஸ்
தமிழாக்கம்: ஸ்ரீமதி லக்ஷ்மி தேவதாஸ் காந்தி





'சேவை'க்கு ஒரு ராமலிங்கம்



காஞ்சீபுரத்திலிருந்து பட்டினம் வரும் நபருக்கு இங்கு வீட்டு நினைவு ஏக்கம் வந்து விட்டால், அவர் சட்டென்று இரண்டு ரூபாய் செலவில் மீண்டும் ஊர் திரும்பிப் போய் அந்த ஏக்கத்தைச் சுலபமாக நிவர்த்தி செய்து கொள்ளலாம்! ஆனால் எத்தனையோ கட்டுப்பாடுகளுக்கும் சிரமங்களுக்கும் உட்படுத்திக் கொண்டு, பாரதத்திலிருந்து போய் லண்டன் நகரில் காலடி எடுத்து வைப்பவர்கள், கண்ணைக் கட்டிக் காட்டில் விடப்பட்ட உணர்ச்சிக்குப் பாத்திரமாகி உடனே ஊருக்குத் திரும்பி விடுவதே உசிதம் என்று நினைத்தால் அது நடக்கக் கூடிய காரியமா?

அப்படித் தோன்றும் உணர்ச்சிகளை உடனடியாக விரட்டி, நம் ஊரிலேயே, நம்முடைய தெரு முனையிலேயே, அடுத்த வீட்டு அன்பருடன் பேசிக் கொண்டிருக்கிறோமோ என்ற பிரமையைத் தோற்றுவிக்க உதவும் உத்தம நண்பர் தான் லண்டன் நகரில் உள்ள இந்தியா கிளப் ராமலிங்கம்!

''ஏமண்டி!'' என்று நெல்லூர்க்காரருடனே, 'அங்கண்ணதன்னே' என்று ஆலப்புழை அன்பருடனே, 'ஏனு ஹேளரி நீரே' என்று பங்களூர்வாசியுடனே, 'நம்ம பக்கத்திலே இது எம்பளத்தி அஞ்சு ரூபாய்தான்' என்று தஞ்சாவூர்த் தம்பியுடனே, 'பஹுத் அச்சா ஹை' என்று பரவசமாய் பம்பாய்க்காரருடனே சரளமாகப் பேசி, பாரத மணத்தை லண்டன் மாநகரில் எவ்வித சுங்கவரியுமின்றி இறக்குமதி செய்யும் திரு ராமலிங்கம் எல்லோருக்கும் உற்ற 'வீட்டு வாசனை' நண்பராகப் பரிமளிப்பதில் வியப்பொன்றுமில்லை!

அந்தப் பரிமளிப்பு பேச்சோடு நிற்காமல் அவர் அளிக்கும் இட்டிலி, தோசை, பொங்கல், வடை போன்ற அசல் இந்தியச் சிற்றுண்டிகளிலும் ஊடுருவி நின்று லண்டன் நகரில் கடந்த பல ஆண்டுகளாக மணக்கின்றது!

1951ம் ஆண்டின் ஆரம்பத்தில் அப்போது லண்டனிலிருந்த வி. கே. கிருஷ்ண மேனன் பாரத உணவு வகைகள், அங்கு வருபவர்களுக்குக் கிடைக்கும் வகையில் 'இந்தியா கிளப்'பின் ஒரு பகுதியைச் சிறு உணவு விடுதியாக மாற்ற வழிகோலினார். அந்த ஆண்டு இறுதியிலேயே யதேச்சையாக அங்கு போயிருந்த ராமலிங்கம் அந்த உணவு விடுதியின் உற்ற மேற்பார்வையாளராக உட்கார்ந்து விட்டார். இன்று அவருக்கு அங்கே நான்கு சிப்பந்திகள். நளபாகத்தில் தங்கள் தலைவருக்குத் துணை புரியும் அவர்கள் நாவுக்கு மதிப்புக் கொடுக்கத் தெரிந்தவர்கள்!

''இந்தக் கறிகாய் கிடைக்குமா? அந்தக் கறிகாய் கிடைக்குமா என்று தவிக்க வேண்டிய அவசியமே இல்லை! கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளிலிருந்து முதல் தரமான முருங்கைக் காய்களும் வாழைக்காய்களும் அன்றாடம் விமானம் மூலம் லண்டன் நகரக் காய்கறிச் சந்தைக்கு வருகின்றன. சைப்ரஸிலிருந்து தளதளவென்று கொத்தமல்லிக் கட்டுக்கள் வருகின்றன. பச்சையாகப் பார்க்கும்போதே நாக்கில் ஜலம் ஊறும்!

''அரிசியா? ஏ. ஒன். 'சயாம் பாட்னா' என்ற ரகம் அமெரிக்காவின் தென் பகுதிகளிலிருந்தும், 'பாசுமதி' ரகம் பாகிஸ்தானிலிருந்தும் வருகின்றன. சாதத்தை வடித்து வைத்தால் தும்பைப் பூப் போல் இருக்கும்! ஒரு கல்லோ நெல்லோ கலரோ இருக்க வேண்டுமே! பேசக் கூடாது! மணி மணியாக இருக்கும்.

''கடலை மாவு எவ்வளவு நன்றாக இருக்கும் தெரியுமா? பேஸ் பௌடர் கெட்டது-போங்கள்!... அவ்வளவு நைஸ்! சுத்தம் சென்ட் பர்சென்ட். எதையுமே நாம் எடுத்துப் போய்த் திரித்துக் கொண்டு வரவேண்டுமென்ற அவசியமில்லை! எல்லாம் ஸெலபோன் பேப்பர் பாக்கெட்டுகள்!

''சரக்குகள் இவ்வளவு சுத்தமாக இருந்தும் விலையெல்லாம் மலிவுதான். வாழ்க்கைத் தரம் நம் நாட்டைவிட அங்கு உயர்ந்திருக்கிறது என்பது மாத்திரமில்லை. இங்குவிட அங்கு வாழ்க்கையே 'சீப்' என்றுதான் நான் சொல்லுவேன்.

''நானூற்றி ஐம்பது பேர் அன்றாடம் இந்த இந்தியா கிளப் சிற்றுண்டிச்சாலையைப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள்! நம்மவர்கள் மாத்திரம்தான் வருகிறார்கள் என்பதில்லை. உப்புமாவுக்கும் தோசைக்கும் ஆசைப்பட்டு எத்தனையோ வெள்ளையர்களும் நாக்கைச் சப்பிட்டுக் கொண்டு வருகிறார்கள். வெள்ளிக்கிழமை ஸ்பெஷல் அயிட்டங்கள் என்ன தெரியுமா? இட்டிலியும் தயிர் வடையும்! இட்டிலிக்கு அன்று 'டிமாண்டு' ரொம்ப அதிகமாக இருக்கும்.

''மாதத்தின் கடைசி வெள்ளிக் கிழமைகளில் விசேஷ விருந்து! சுமார் இருபது அயிட்டங்கள் தயாராகும். இது தவிர தீபாவளி, கிறிஸ்துமஸ் தின விருந்து பிரமாதமாக இருக்கும்! எனக்கு முன்கூட்டியே வாழ்த்துக்கள் தெரிவிக்கும் பாணியில் தெரிந்தவர்கள் எல்லாருமே தங்கள் சாப்பாடுகளை இந்த நாட்களில் ரிசர்வ் செய்து கொண்டுவிடுவார்கள். ஒவ்வொருவர் முகத்தையும் சாப்பாடு முடிந்து போகும்போது பார்ப்பேன். அவர்கள் முகத்தில் ததும்பும் மகிழ்ச்சிதான் அவர்கள் எனக்கு அளிக்கும் ஆத்ம திருப்தி!''

இவைகள்தான் திரு ராமலிங்கத்தின் அனுபவங்கள். பாலக்காட்டுப் பரம்பரையுடன் தஞ்சாவூரில் வளர்ந்து சென்னையில் வசிக்கத் தொடங்கிய இவர், தம் தொழிற் கல்வியை முடித்துக் கொண்ட இடம் பல்லாவரத்தில் இவர் தந்தை நடத்தி வந்த ஹோட்டலில் தான்! இன்று அந்தத் தொழிற் கல்வி பரிமளிக்கும் இடம் லண்டன் நகரில் ஸ்ட்ராண்ட் பகுதி 143வது இலக்குள்ள இந்தியா கிளப்.

ஒரு தடவை ராமலிங்கத்துக்கு அறிமுகமானவர்கள் மறுமுறை சந்தர்ப்பம் கிடைக்கும்போது அவருடன் அளவளாவாது போக மாட்டார்கள். லண்டன் விமான நிலையத்தின் வழியாக வேறு நாடுகளுக்குப் போகிறவர்கள் விமான நிலையத்தில் விமானங்கள் மாற இரண்டு மணி அவகாசம் இருக்கும் என்றால் ஓர் ஓட்டம் ஓடி இந்தியா கிளப் வந்து ராமலிங்கத்தைப் பார்த்து அவர் கையால் கொடுக்கும் தோசையையோ இட்டிலியையோ சாப்பிடாமல் போக மாட்டார்கள்.

நள்ளிரவானாலும் இந்த உரிமையை விடாமல் பயன்படுத்திக் கொள்பவர் மாஜி பாதுகாப்பு மந்திரி திரு வி. கே. கிருஷ்ண மேனன். அவருக்குப் பிடித்தது மசால் தோசை. அந்த மசால் தோசையும் ராமலிங்கம் கையால் கொடுத்து வாங்கிச் சாப்பிடுவதில் அவருக்கு அபார திருப்தி.

பிரிட்டிஷ் பிரஜாஉரிமை பெற்று இன்னும் பிரம்மச்சாரியாகவே வாழும் ராமலிங்கம், தனக்கு வாழ்வளித்த இந்தியா கிளப்புக்கு நன்றி செலுத்தும் வகையில் அங்கேயே இன்னும் வாரத்துக்கு இருபது பவுன் ஊதியம் பெறும் உழைப்பாளராகவே இருக்கிறார்! இவருடைய சிப்பந்தியாக வந்து சில காலம் வேலை பயின்ற ஒருவர் தனியாகத் தொழில் ஆரம்பித்துப் பெரும் பணம் சம்பாதித்திருப்பது இவர் மனத்தைக் கொஞ்சம்கூடப் பாதித்ததில்லை!

'' 'ராமலிங்கம்! சௌக்கியமா?' என்ற நம்மவர்களின் அன்பு நிறைந்த குரல் ஒலியே எனக்குப் பெரும் நிதி!... என் மதிப்பில் உயர்ந்த விருந்தாளிகள் சிலர் லண்டனுக்குச் சமீபத்தில் வந்திருந்தார்கள்! காலையில் பொங்கலும் வடையும் தயார் செய்து கொடுத்தேன். மாலை டிபனுக்குப் புதிதாக என்ன செய்து கொடுக்கலாம் என்று யோசித்தேன். அவர்களுக்கு சேவை மிகவும் பிடிக்கும் என்ற நினைவு வந்தது! உடனே பண்டிகளாசாகத் தேங்காய் சேவையும், எலுமிச்சம் பழம் பிழிந்த சேவையும் தயார் செய்து கொடுத்தேன். அவர்களுக்கு இந்தத் தயாரிப்பு ரொம்பப் பிடித்திருந்தது. நம்ப ஊர் மாதிரி மாவை அரைக்கவோ, சேவை நாழியில் போட்டுப் பிழிந்து நீராவியில் வேக வைக்கவோ இங்கெல்லாம் நேரம் ஏது? முதல் தரமான சைனு அரிசிச் சேமியா சன்னமான ரகத்தில் பாக்கெட் பாக்கெட்டாகக் கிடைக்கிறது. கொதிக்கிற வெந்நீரில் இரண்டு பாக்கெட்டுகளைப் பிரித்துக் கொட்டிச் சில நிமிடங்கள் மூடி வைத்திருந்து பிறகு பார்த்தால் வெள்ளிக் கம்பி போல் சேவை தயாராக இருக்கும். தேங்காய்க்கும் இங்கே பஞ்சமில்லை. துருவிப் பக்குவப்படுத்தப் பட்ட தேங்காய் கிடைக்கிறது. வறுத்துக் கொட்ட வேண்டியதுதான்!'' என்று உற்சாகமாகத் தம் தொழிற் பெருமை தொனிக்கப் பேசும் ராமலிங்கத்தை 'சேவைக்கொரு ராமலிங்கம்' என்று அன்று அந்தச் சேவையை ருசித்த அன்பர்கள் பாராட்டமாட்டார்களா என்ன? — கோமதி ஸ்வாமிநாதன்




ஊர் வம்பு

☐ சுரங்கப் பாதை

☐ கிராமக் கலை விழா

● சென்னையிலேயே போக்குவரத்து மிகுதி யான மவுண்ட்ரோட் ஜெமினி ரவுண்ட் டானா வில் பாதசாரிகள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு இனி பாதையைக் கடக்க ஓட வேண்டாம். அவர்களுக்காகச் சுரங்க வழிப் பாதை அமைந்துள்ளது. ஒரு மணி நேரத்தில் ஆறாயிரத்துக்கு மேற்பட்ட வேகமான வண்டிகள் செல்லும் சாலையில் பாதசாரிகள் பயமின்றிக் கடக்க மூன்று சுரங்கப் பாதைகள் ஒத்தாசை செய்கின்றன. 13.75 லட்சம் ரூபா யில் கட்டப்பட்டுள்ள சுரங்க வழிப் பாதையில் பிரகாச விளக்குகள் அமைக்கப்பட்டு ஏதோ ஒரு புதிய உலகில் நடப்பது போன்ற பிரமை யைத் தோற்றுவிக்கின்றன. இந்தப் புதிய சுரங்கவழிப் பாதையைச் சென்னை முதன் மந்திரி திரு எம். பக்தவத்஥லம் அவர்கள் திறந்து வைத்து, சுரங்கப் பாதையில் முதல் பாதசாரியாக நடந்து சென்றார். விழாவில் பேசிய மந்திரி திரு ராமையா, ''போலீஸ் இலாகாவுக்கு ஹைவேஸ் இலாகா அளிக்கும் புது வருஷப் பரிசு இந்தச் சுரங்க வழிப் பாதை!'' என்று குறிப்பிட்டார். இந்தச் சுரங்கப் பாதைகளில் எப்பொழுதும், போலீஸ் பாதுகாப்பு இருக்க வேண்டியது அவசியம். பெண்களும், குழந்தைகளும் நிர்ப்பயமாக நடக்க வசதி இருக்க வேண்டு மல்லவா? மேலும் இப்பொழுதுள்ள அழகு கெடாமல் கண்காணிக்கவேண்டியது அத்தியா வசியம். சுரங்கப் பாதை இலவசக் குடியிருப்பு வசதியாக மாறிவிட இடமளிக்கலாகாது.

● உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை புரியும் திருநாளான பொங்கல் புது நாளை யொட்டி, சென்னையில் கடந்த மாதம் மூன்று நாட்கள் (ஜன. 14, 15, 16) கிராமக் கலை விழா நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள், தமிழ் நாடு சங்கீத நாடக சங்கத்தினர். ராஜாஜி ஹாலின் முன்னுள்ள பரந்த வெளி யில் கூத்துக்குப் பந்தலிட்டு உட்கார்ந்து பார்க் கத் திறந்தவெளி அரங்காக்கி யிருந்தார்கள்.




இந்தியாவின் இதயம் — அதன் ஆத்மா கிராமங்களில்தான் இருக்கிறது என்பது அண்ணல் மகாத்மாவின் அருள் வாக்கு. கிராமங்களிலிருந்து உயிர் வாழ்வதற்கான உணவு மட்டும் வரவில்லை. உற்சாகமூட்டும் கலைகளுக்கும் பிறப்பிடமும் அதுதான். தமிழ் நாட்டின் பண்பாட்டை விளக்கும் கலை நிகழ்ச்சிகள் இந்த விழாவில் இடம் பெற் றிருந்தன. பொம்மலாட்டம், கைச்சிலம் பாட்டம், லாவணிப் பாட்டு, வில்லுப் பாட்டு, ஒயில், கும்மி, காளையாட்டம், காவடியாட் டம், கரகாட்டம், பொய்க்கால் குதிரை யாட்டம், தெருக் கூத்து, கிராம மக்களின் நடனம் என்று இப்படிக் கிராமக் கலைகளை இந்த மூன்று நாட்களிலும் பல கலைஞர்கள் வழங்கினார்கள். இவைகளைக் கிராமக் கலை என்பதைவிடத் தமிழ்க் கலை என்றே கூறலாம்.

நிகழ்ச்சிகளைக் கண்டபோது நம் தொன்மை யான கலைகளின் தரத்தை இன்னும் உயர்த் திக்கொள்ளாத குறை பளிச்சென்று தெரிய வந்தது. பார்வையாளர்கள் விரும்பி ரசிக்கும் வகையில் நிகழ்ச்சிகள் எதுவும் இக் கலை விழா வில் அமையாதது துரதிர்ஷ்டம்தான்— காவடியாட்டத்தைத் தவிர. சிறந்த பொருளையுமே கூட நல்ல முறையில் அளித் தால்தான் விலை போகும்.

நம் கிராமக் கலைகளை நகரங்களுக்குக் கொண்டு வந்து காட்டும்போது, அரங்க அமைப்பு, ஒளியமைப்பு, ஆடையணி, அந் தந்த ஆட்டத்தின் பின்னணி இசை இவை களில் ஒரு கவர்ச்சியையும், கட்டுக்கோப்பை யும் புகுத்த வேண்டும்.

இக் கலை விழாவுக்குப் பத்து நாட்களுக்கு முன்பாகத்தான் நகரில் உஸ்பெக் நடன நிகழ்ச்சி நடைபெற்றது. அதையும் இதே தமிழ் நாடு சங்கீத நாடக சங்கத்தினர்தான் ஏற் பாடு செய்திருந்தார்கள். உஸ்பெக் நடனங் களும் அந்த நாட்டுக் கிராம நடனங்கள் தான். ஆனால் அதைக் கண்டு களித்த கண்களால் நம் நிகழ்ச்சி களைப் பார்க்கும்போது, 'ஐயோ! அந்த ஏற்றம் நமக்கு எப்போது வரும்?' என்று உள்ளம் ஏங்கத் தான் செய்தது.

நமது கலைகளில் குறை இல்லை. அதை அமைத்துக் கொடுக்கும் முறையில்தான் குறைபாடு. தன்மை மாற வேண்டாம், தரம் உயர வேண்டும். இம்மாதிரி யான கலைநிகழ்ச்சிகளைப் பல நாட்டவரும் வந்து பார்த்து வியக்கும்படி கவர்ச்சிகரமாக அமைக்கும் விஷயத்தில் இன்னும் நாம் வெகுதூரம் முன்னேறியாக வேண்டும் என்று சொல்லத் தான் வேண்டியிருக்கிறது.


ஜிம்மி
வால்ட் டிஸ்னி
ஐயோ! வெளியிலே ஒரே பனி
டேய், ஜிம்மி! விளையாடலாம் வரியா?
நான்... வ.. வ. வல்..லே
சரித்தான் வாடா!
யோ, எனக்கு ரொம்பக் குளிர் ருக்குது.
ம்..என்ன ஆகும்? இதை விட்டுட்டு..
ஹா! என்ன சொகுசாத் தூங்கிறான் பார்
2-28
வள்.. வள்... வள்
ஹாம்! கண்ணாடியிலே ஆவிபடிஞ்சு பார்வையை மறைச்சுட்டதே...!
ஸ் ஸ் ஸ் ஸ்

பெண்ணே, நீ வாழ்க!

சில ஆங்கிலப் படங்களில் 'படத்தின் முடிவைச் சொல்லாதீர்கள்!' என்று எச்சரித்து ஆவலை வளர்ப்பார்கள் இல்லையா? அது போல இந்தப் படத்தின் கதையிலும் 'சஸ் பென்ஸ்' உள்ளது. அதை நாம் கெடுப்பானேன்? படம் பார்க்கும் நமக்கு அது புரிந்து போனாலும்கூட அதை நல்ல முறையில் வளர்த்து விறுவிறுப்பாகக் கொண்டு போய் இருக்கிறார்கள் கதையை. கதையே இல்லாத படங்கள் வெளிவரும் இக்காலத்தில் 'பெண்ணே நீ வாழ்க!' நல்லதொரு கதைப் படம். அதுவும் ஜனரஞ்சகமான கதை. கல்லூரி மாணவி ஒருத்தி ஒரு காளையிடம் சபதமிட்டு அதை நிறைவேற்றுகிறாள்.

விஜயாவின் நடிப்பிலே படத்துக்குப் படம் மெருகேறிக் கொண்டு போகிறது. இந்தப் படத்தில் அவரது நடிப்பு மனத்தைத் தொடும்படியாக இருக்கிறது. தங்கவேலு வெளுத்துக் கட்டியிருக்கிறார் தமது சிறப்பான நடிப்பினால். தங்கவேலுவோடு நாகேஷும் சேர்ந்து படத்தின் மகிழ்ச்சி அம்சத்தைப் பூர்த்தி செய்திருக்கிறார்.

கலியாணத்தில் மாப்பிள்ளைக்குப் பிடித்தமானது என்று சில விசேஷ அயிட்டங்களைச் சேர்ப்பார்கள். அது போல ஜெயசங்கரைக் கதாநாயகனைப் போட்டு விட்டுச் சண்டைக் காட்சிகளுக்கு இடம் அளிக்காதிருக்க முடியுமா? எகிறிக் குதித்து அடிக்கும் ஸ்டண்டுகளும் படத்தில் உண்டு — கதைக்குத் தேவையில்லாது போனாலும். ஜெயசங்கர் குறை சொல்லாத வகையில் நடித்திருக்கிறார்.

கல்லூரி, வகுப்பறை, ஹாஸ்டல் சம்பந்தப்பட்ட காட்சிகளில் கவனம் போதவில்லை.

மொத்தத்தில் புதுமையான கதையைக் கொண்ட இந்தப் 'பெண்'ணுக்கு நிச்சயம் நல்ல வாழ்வு உண்டு.





தாய்க்குத் தலைமகன்

தலைப்புக்கேற்பக் கதையைப் பின்னியிருப்பவர் தேவர். கதைக் கேற்ப நடிப்பில் பங்கு பெற்றிருப்பவர்கள் எஸ். வி. ரங்கா ராவ், எஸ். என். லட்சுமி, அசோகன், எம். ஜி. ராமச்சந்திரன், சௌகார் ஜானகி, ஜெயலலிதா, பேபி கீதா, நாகேஷ், மனோரமா, ராஜ்ஸ்ரீ, மனோகர் ஆகியோர்.

தாய் என்று ஒருத்தி ஆவதென்றால், அவளுக்குத் தலைமகனோ, தலைமகளோ கட்டாயம் உண்டு என்பது உறுதி. உலகத்தின் இயல்பே 'முதலு'க்கு ஒரு முதலிடம் கொடுப்பதாகும். எந்த 'முதல்' பொருளிடமும் பற்றும் பாசமும் ஏற்படுவது இயற்கை. தாய்க்குத் தலைமகன் விதிவிலக்கல்லவே! அவனைச் சுற்றிப் படரும் இக்கதை சோகத்தை முடிவாகக் கொண்டது. தாயும் தலை மகனும் கதை முடிவில் கண்ணை மூடுகிறார்கள்.

இந்தக் கதையில் காதல், வீரம், சோகம் போன்ற பல்சுவைகள் தாக்கி நிற்கின்றன. 'எச்சுவை பெறினும் இந்த நகைச்சுவை மட்டும் வேண்டேன்' என்று சொல்லுமளவுக்கு நகைச்சுவை தொங்கி நிற்கிறது.

இந்தக் கதையில் 'சல்லடைக் கண்கள்' அதிகம். அத்தனை பொத்தல்களையும் பார்த்துப் பார்த்து அடைத்திருந்தால் கதை மனத்தில் நின்றிருக்கக் கூடும். கதை மனத்தில் நின்றாலும் நிற்கா விட்டாலும் கடப்பாறைச் சண்டை கண்ணுக்கு விருந்தாக இருக்கிறது. 'அன்னையென்று ஆரு முன்னே ஆராரோ பாட வந்தேன்' என்ற பாடல் செவிக்கு விருந்தாக ஒலிக்கிறது. அதோடு காமிராவும் தன் பணியைத் திறம்படச் செய்திருக்கிறது என்பதைச் சொல்லாதிருக்க முடியாது.



■ பாரதத்தின் நதிகளையும், மலைகளையும், பழம் பெரும் தேவாலயங்களையும் எத்தனை முறை பார்த்தாலும் அலுப்புத் தோன்றுவதில்லை. அதே போல் புராண, இதிகாச நிகழ்ச்சிகளை எத்தனை தடவை கதைகளாகக் கேட்டாலும் அலுப்புத் தோன்றுவதில்லை; படம் பார்ப்பவர்களுக்கும் புராணப் படங்கள் அலுப்பு உண்டாக்குவதில்லை. தமிழ் பேசும் படம் தோன்றியது முதல் ராமாயணம், மகாபாரதம், ஸ்காந்தம் ஆகியவற்றிலிருந்து எத்தனையோ படங்கள் வெளிவந்து விட்டன.

ஏ. எல். எஸ். புரொடக்ஷன்ஸாரின் ''கந்தன் கருணை'' கண்ணுக்கினிக்கும் வண்ணப் படமாக வெளிவந்திருக்கிறது. இது மாபெரும் தயாரிப்பு என்பதற்கு அடையாளமாகக் காட்சி ஜோடனைகளோடு பதினைந்து பாடல்களும் இருக்கின்றன! அவற்றுள் நான்கு பாடல்கள் ஔவையார் இயற்றியவை. கே. பி. சுந்தராம்பாள் ஔவையாராகத் தோன்றிக் கந்தன் கருணையை ஆரம்பித்து வைத்துக் கணீரென்று பாடுகிறார்.

உமா தேவியின் கால் சிலம்பின் நவரத்தினங்களினின்றும் தோன்றிய நவ வீரர்களுள் ஒருவரான வீரபாகுவின் பாகத்தைச் சிவாஜி கணேசன் ஏற்றிருக்கிறார். சில காட்சிகளில் மட்டும்தான் வந்து போகிறார்; ஆனால் அவர் நடிப்பு மனத்தில் நன்றாய்ப் பதிந்து விடுகிறது.

மாஸ்டர் ஸ்ரீதர் பால முருகன்; அருமையாக நடித்திருக்கிறான். சிவகுமார் முருகப் பெருமான். இவருக்கு நல்ல வேஷப் பொருத்தம் இருக்கிறது. ஒல்கி, ஒசிந்து, நடந்து அழகு மொழி பேசி, முருகனுக்குத் தகுந்த தெய்வயானையாகத் தோன்றுகிறார் கே. ஆர். விஜயா. ஜயலலிதாவுக்கு வள்ளியின் பாத்திரத்தைவிடக் குறி சொல்லும் குறத்தியின் வேஷம் பொருத்தமாயிருக்கிறது: அப்பொழுது அவர் நடிப்பும் களைகட்டுகிறது.

காட்சி ஜோடனைகள் எல்லாம் நன்றாயிருக்கின்றன. ஆனால் போர்க்களமும் சூரசம்ஹாரக் காட்சியும் மிக மிகச் சாதாரணமாகப் போய்விட்டனவே!

பழைய புராணக் கதையைப் புதுமையாகத் தோன்றச் செய்திருக்கும் டைரக்டர் ஏ. பி. நாகராஜனைப் பாராட்ட வேண்டியதுதான்.

மனம் ஒரு குரங்கு

■ பொங்கல் புது நாளில் சிரித்து மகிழ்வதற்கொரு சிறப்பான படத்தை சஷ்டி பிலிம்ஸார் சிருஷ்டித்திருக்கிறார்கள். உலக இலக்கியத்திலே ஒப்பற்றதொரு கதை. மேனாட்டு நாடக மேடைகளிலே ஆண்டுக் கணக்கிலே தொடர்ந்து நடைபெற்றதொரு நல்ல நாடகம். ஆங்கிலப் படமாகி அபாரமான வெற்றியைக் கண்ட திரைக் காவியம். தமிழிலும் கதை உருவிலே வந்து ரசிகர்களின் கருத்தில் இடம் பெற்றிருக்கிறது. அத்தனைக்கும் போவானேன்? இதே கதை நாடக மேடையிலும் 'சோ'வினால் நடிக்கப் பெற்றும் பாராட்டைப் பெற்றதுதானே? 'சோ' அப்போதும் சரி, இப்போது திரைப் படத்திலும் சரி, இந்தக் கதைக்குக் கரு 'பெர்னார்ட் ஷாவின் 'பிக்மாலியன்' என்பதை மறுக்கவில்லை; மறைக்கவும் இல்லை. ராமாயணத்தை வால்மீகி முதலில் உருவாக்கினாலும் அதன் பிறகு 'ராம காதை' எத்தனையோ மொழிகளில் எத்தனையோ ஆசிரியர்களால் எழுதப்படவில்லையா? அதேபோல் 'சோ'வின் 'மனம் ஒரு குரங்கு'ம் ஜனரஞ்சகமாக விளங்குவதில் வியப்பில்லை.

நாடக அமைப்பிலும் நடிப்பிலும் தமக்கெனத் தனியான ஒரு பாணியை வகுத்துக் கொண்டுள்ள 'சோ' தம் வசனங்களாலும் நடிப்பாலும் நம்மைக் குலுங்கச் சிரிக்க வைத்து சபாஷ் என்ற பாராட்டுதலையும் பெற்று விடுகிறார். 'ஹை சொஸைட்டி' என்று குறிப்பிடப்படும் நாகரிக நாரீமணிகளின் குடும்பத்தினரின் போலிக் கௌரவத்தை அப்படி அப்படியே பிட்டுப் பிட்டு வைத்து விடுகிறார். ரொம்பத் துணிச்சல்காரரான 'சோ'வின் வசனங்கள் ஏ, ஒன்! நடிப்பிலே ஜம்புலிங்கமாக வரும் ருணச்சித்திர நடிகர் பாலையா ஜம்மென்று முதலிடம் பெறும் போது சோவும் ராஜனும் விஜயாவும் முத்துராமனும் நாங்களும் சளைத்தவர்களில்லை என்பதை நிரூபிக்கின்றனர். ஒளி, ஒலிப் பதிவுகள் திருப்திகரமாக இருக்கின்றன.



கவலைகளை மறந்து சில மணி நேரங்கள் களிப்புடனிருக்க நல்லதொரு படம் மனம் ஒரு குரங்கு.

நாடகத்துக்குள் நாடகம்

"'காரணம் கேட்டு வாடி' நாடகத்தில் ரசிகர்கள் சிரிப்பது எத்தனை நடவைகள் தெரியுமா?" நகைச்சுவை நட்சத்திரம் மனோரமா கேட்ட கேள்வி இது.



"**வா**ங்க, வாங்க! பேட்டிக்குத் தானே வந்திருக்கீங்க. உக்காருங்க!"

சிறு பையன் ஒருவன் எங்களுக்கு இருக்கை காட்டிவிட்டுத் தானும் அமர்ந்து கொண்டான்.

"கேளுங்க, என்ன கேக்கணும்?"

அவனே கேள்வியைத் தொடுக்கவே, பேட்டி காணச் சென்ற நாங்கள் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டோம். முகத்தில் கேள்விக் குறியைத் தேக்கிக் கொண்டு விழித்தோம்.

பையன் எங்களைக் குறும்புச் சிரிப்போடு பார்த்தான். "என்னங்க விழிக்கிறீங்க? அமெச்சூர் நாடகக்காரங்களைப் போல 'டயலாக்' மறந்து போச்சா?" என்று கேட்டுப் 'ப்ராம்ப்டர்' வேலையை மேற்கொண்டு விடுவானோ என்று பயந்தோம்.

நல்ல வேளையாகப் பையன் எங்களைத் தர்ம சங்கடத்தில் ஆழ்த்தவில்லை. "நீங்க பார்க்க வந்திருக்கிறவங்க சாப்பிட்டுக்கிட்டிருக்காங்க. இதோ வந்திடுவாங்க. அவங்க பேட்டி கொடுத்துப் பேட்டி கொடுத்து நான் பார்த்திருக்கேனு, அதனாலே எனக்கு எல்லாம் அத்துபடி. சும்மா நீங்க கேளுங்க. அவங்க என்ன பதில் சொல்லுவாங்கங்கிறதை நான் சொல்றேன்!" என்றான்

பயல் படு சூடிகை. புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? — இப்படி நாங்கள் நினைத்துக் கொண்டிருந்த வேளையில் மனோரமா வந்தார், "வாங்க, வாங்க!" என்று கூறிக் கொண்டே.

"பையன்...."

"பலே குறும்புக்காரன். எலே, என்னடா இவங்ககிட்டே நாடகமாடினே?" என்று கேட்டார் மனோரமா.

"ஒண்ணுமில்லே நீங்க வரதுக்குள்ளே இவங்க கிட்டே ஒரு குட்டி நாடகம் போட்டேன். பேட்டிக்கு நீங்க கொடுக்கிற பதிலே நாமே கொடுத்தால் என்னுன்னு..."

"போடா! ஆத்தா கூப்பிடுது போ! ஆமாம், நீங்க வந்த விசயம்...?"

"அவங்க சொல்லித்தான் தெரியணுமாக்கும். என்ன அம்மா இது!"

"போக்கிரி! சும்மா இருக்க மாட்டே?— ஆமாங்க. அவன் சொல்லுறதும் சரிதானுங்களே! சும்மா நாடகத்துக்குள்ளே நாடகம் போடுவானேன்?"

அவரே கூறிய பதில் எங்களை திகைப்பில் ஆழ்த்தி விட்டது!



''அப்படி வாங்க வழிக்கு! எங்களுக்கும் எதனுச்சும் மறந்து போனுல், அடி எடுத்துத் தர நான் இருக்கேன். கவலைப்படாதீங்க!'' அபயம் கொடுத்தான் சிறுவன். சிரித்துக் கொண்டே தொடர்ந்தார் மனோரமா:

''நான் பிறந்தது ராஜமன்னார்குடி; தஞ்சை மாவட்டம். வளர்ந்தது பள்ளத்தூர்; செட்டி நாடு. சின்னக் குழந்தையா யிருக்கும்போதே ஆடுவேன்; பாடுவேன்; ஆனந்தமாகப் பொழுதைப் போக்குவேன்...''

''படிப்பு...?''

''அதுதான் சொல்லிட்டாங்களே! அப்புறம் எதுக்காக அந்த இடத்திலேயே போய் திரவல் பண்றீங்க?''

''உங்களிடம் சொல்றதுக்கு என்னங்க? ஆறுவதுக்கு மேல் படிக்கலீங்க...!''

''அதுக்கு மேலே எத்தனையோ பேர் என்னவெல்லாமோ படிச்சிருக்காங்களே, அவங்க எல்லாம் உங்களைக் காட்டிலும் என்ன அதிகமாகத் தெரிஞ்சுக்கிட்டிருக்காங்க? 'எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாமல் வேறொன்றும் அறியேன்' என்ற கொள்கை உங்களுக்கு! இந்த ஒரு விசயத்தை உங்க கிட்டே படிச்சுக்கிட்டாங்கன்னு உலகம் எவ்வளவோ உருப்பட்டிருக்குமே!''

உருவம் சிறிதானுலும் பருவத்துக்கு மீறிய பேச்சு! திருஷ்டிப் படாமல் இருக்கணுமே என்று மனத்துக்குள் எண்ணிக் கொண்டே, ''சர்க்கரை போடணும் இந்த வாய்க்கு! படிப்பு என்ருல் பள்ளிக்கூடத்துப் படிப்புத் தானு? பையன் சொல்றது ரொம்பக் கரெக்ட்! ஆமாம், இந்த நாடக உலகம் உங்களை எப்படிப் பிடித்துக் கொண்டது?'' என்று கேட்டோம்.

''அதுவா? நான் நல்லாப் பாடுவேன்னு சொன்னேனில்லே? செட்டி நாட்டிலே வருசத்துக்கொரு தரம் இரண்டு தரம் நாடகம் போடுவாங்க. சின்னப் பொண்ணு, நல்லாப் பாடுது; ஆடவும் ஆடுதுன்னு என்னை மேடை ஏத்தினுங்க. நானும் சிறு கன்று பயமறியாதுங்கறுப் போல ஜமாய்ச்சுக் கட்டிப்பிட்டேன்! அமெச்சூர் நடிகையா மேடையேறினவ, ராம பால கான சபை, வைரம் நாடக சபை, பிரண்ட் ராமஸ்வாமி நாடகக் குழு — இதிலெல்லாம் நடிகையாகப் பணியாற்றியிருக்கேனுங்க!''

''ஆமாம், நீங்க நடித்த முதல் நாடகம்?''

''அந்தமான் கைதி!''

''இவங்க நடிச்ச இன்னொரு நாடகம் ஐந்நூறு தடவைக்கு மேலே மேடை ஏறியிருக்குங்க!'' — புள்ளி விவரத்தில் இறங்கி விட்டான் பையன்.

''என்ன நாடகமுங்க அது?''

''எஸ். எஸ். ஆரின் 'மணி மகுடம்.' ''

''நாடகத் துறையிலிருந்து சினிமாத் துறைக்கு எப்படி வந்தீங்க?''

''கவிஞர் கண்ணதாசன் 'மாலையிட்ட மங்கை'யில் நடிக்க ஒரு வாய்ப்புத் தந்தாருங்க. அப்போ பிடிச்சுக்கிட்டது படத் துறை. இதுவரைக்கும்...''

''அறுபது படங்களுக்கு மேலே நடிச்சிருக்காங்க!'' குழந்தைக் குரல் முடித்தது.

''அநேகமாக எல்லாவற்றிலேயும் நகைச் சுவைப் பாத்திரம்தான் ஏற்றிருக்கீங்க போல் இருக்கிறது!''

''ஆமாங்க! 'பெரிய மனிதன்'ங்கிற படத்திலே ஹீரோயினுகவும் நடிச்சிருக்கேன். இருந்தாலும்....''

''நகைச் சுவைக்கு மனோரமாங்கற பேரு தான் நிலைச்சு நிக்குது!... ஆனு இவங்களுக்கு நகைச் சுவையே பிடிக்காதுங்க!'' — ஒரு போடு போட்டான் பையன்.

நாங்கள் புரியாமல் விழித்தோம்; பேச்சை மேலே தொடர முடியாமல் திகைத்தோம்.

''என்ன விழிக்கிறீங்க? கையை, காதைப் பாருங்க. நகை நட்டு அதிகமாகப் போட்டுக் கிட்டிருக்காங்களா?'' சிரித்தான் பையன்.

''எலே குறும்பு! பேசாமல் இருக்க மாட்டே!'' என்று அதட்டிய மனோரமா, ''ஜனங்க என்னிடம் எத்தகைய நடிப்பை விரும்பி எதிர்பார்க்கிறுங்களோ, அந்தப் பாத்திரத்தை ஏற்றுத்தானே நடிக்க வேண்டியிருக்கிறது!'' என்ருர்.

''மெய்தான். நீங்க நாடகத்திலேயும் நடிக்கிறீங்க. சினிமாவிலேயும் நடிக்கிறீங்க! எதிலே நடிக்கிறது உங்களுக்குப் பிடிச்சிருக்கு?''

''என்னங்க கேள்வி இது? பணத்துக்காகப் படம்; கலைக்காக நாடகம்! இரண்டிலேயும் மக்களை மகிழ்விப்பதுதான் வேலை என்ருலும், நடிகர்களுக்கு நாடகத்திலே பங்கெடுத்துக் கொள்கிற ஆனந்தம் சினிமாவிலே ஏற்பட முடியாதுங்க. ஏனென்ருல், காட்சிக்குக் காட்சி மக்களின் ரசனையை மேடையிலிருந்து கண்கூடாகப் பார்க்கலாம். அவங்க பாராட்டி அப்ளாஸ் கொடுக்கிறபோது ஏற்படுகிற ஆனந்தம் இருக்கே, அதை நான் சொல்லால் சொல்ல முடியாது. நீங்களும் எழுத்தால் எழுத முடியாது. அந்தப் பெருமை உணர்வை நேரில் உணரும் வசதி சினிமாவில் ஏதுங்க?''

''ஆமாங்க. அதனுலேதாங்க இவங்க மீண்டும் நாடகத்திலே நடிக்கிறுங்க!''

''இந்தக் காலத்திலே நாடகக் கலை வளர்ந்திருக்கிறதா?''

''சந்தேகமில்லாமல் வளர்ந்திருக்குதுங்க. அதுவும் நகைச்சுவை நாடகத்துக்கு நல்ல மவுசுங்க. ஆமாம், நீங்க 'காரணம் கேட்டு வாடி' நாடகம் பார்த்திருக்கீங்களா?''

''இந்தக் கேள்வியை இவங்க எதுக்காகக் கேட்கிறுங்கன்னு, ஜனங்க எத்தனை தடவை சிரிக்கிறுங்கன்னு ஒரு ஆளை உட்கார வைச்சுக் கணக்கெடுக்கச் சொன்னுங்க.''

''நீங்க சொல்லுங்க பார்க்கலாம்!'' என்று போட்டி காணச் சென்ற எங்களையே பதில் கூறச் செய்தார் மனோரமா. அவர் கண்களில் இலேசான விஷமத்தனம் எட்டிப் பார்த்தது. ஆர்வம் பளபளத்தது. இதழ்க் கோடியில் ஒரு புன்முறுவல்.

''நாங்கள் என்னவா செய்தோம்? ஏதோ இருபது இருபத்தைந்து தடவைகள் ரசிகர்கள் சிரித்திருக்கலாம்'' என்றேன்.

''தப்பு! சரியாக நானூற்று இருபத்தைந்து தடவைகள்!'' என்ருன் வாண்டு.

நீங்கள் எப்படியோ, திகைப்பிலிருந்து நாங்கள் இன்னமும் மீளவில்லை! — ரா. வீ.

கல்லுக்குள் ஈரம்

ர.சு.நல்லபெருமாள்


நான்காம் அத்தியாயம்

சந்திப்பு

ரயில் வண்டியில் வழக்கத்துக்கு மாருக அன்று கூட்டமேயில்லை. பொழுது போவதற்காக ஏதாவது புத்தகத்தை எடுக்கப் பெட்டியைத் திறந்தான். பெட்டிக்குள்ளிருந்த இயேசுவின் தந்தச் சிலை, பார்வையில் பட்டது. சிறிது நேரம் சிலுவையையே முறைத்துப் பார்த்தான்.

''அப்பாவி! பொறுமையோடு உயிரை விட்டிருக்கிருர். அஹிம்ஸையாம், அஹிம்ஸை! இவரைப்போல் இருந்தால் இப்படிச் சாக வேண்டியது தான்'' என்று முனகிக் கொண்டே பெட்டிக்குள்ளிருந்து ஒரு புத்தகத்தை எடுத்துக் கொண்டு பெட்டியை மூடினன்.

வண்டி நிதானமாக ஓடிக் கொண்டிருந்தது. தண்டவாளத்தில் சக்கரம் உருளும் ஓசை தாலாட்டுவது போல் இருந்தது. வண்டிக்குள் பெஞ்சியில் சாய்ந்து படுத்துக் கொண்டு புத்தகத்தைப் பிரித்தான் ரங்கமணி. இரண்டு பெஞ்சுகளுக்கு அப்பால் இருந்தவர்கள் சளசளவென்று பேசிக் கொண்டிருந்தார்கள். புத்தகத்தை மூடிவிட்டு அந்தப் பேச்சைக் கேட்டான். யாரோ ஒரு கிறிஸ்தவப் பாதிரியார் பேசிக் கொண்டிருந்தார். மற்ற சகப் பிரயாணிகள், அவரோடு காரசாரமாகத் தர்க்கம் செய்து கொண்டிருந்தார்கள். அவர்களையெல்லாம் அஞ்ஞானிகள் என்று விவரித்துக் கூறிக் கொண்டிருந்தார் பாதிரியார். பைபிள் புத்தகத்திலிருந்து உருப் போட்டிருந்த வாசகங்களை உணர்ச்சியில்லாமல் ஒப்பித்துக் கொண்டிருந்த பாதிரியாரை ரங்கமணி இரக்கத்தோடு பார்த்தான். பாதிரியார், ஏதோ ஒரு வீண் முயற்சியில் தீவிரமாக இறங்கியிருப்பது போல்



இருந்தது. சிறிது நேரம் அவரைக் கவனித்தான். பிறகு சலிப்புத் தட்டி விடவே புத்தகம் படிப்பதில் ஈடுபட்டான்.

திடீரென்று விலாப் பக்கத்தில் ஏதோ கடித்தது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. கடிபட்ட இடத்தை விரலினால் அழுத்தினான். பிறகு சட்டைக்குள் கைவிட்டு அந்த இடத்தைத் தடவிய போது, ஒரு மூட்டைப் பூச்சி நசுங்கிய நிலையில் அவன் கையில் ஒட்டிக் கொண்டது. அதைப் பார்த்ததும் ரங்கமணிக்குச் சிரிப்பு வந்தது. "எவ்வளவு பெரிய கொலை நடந்து விட்டது! இதை அஹிம்ஸாவாதிகள் கண்டால்...." என்று முனகினான். பிறகு, சிரித்துக் கொண்டான். அவனுடைய நினைவில் ஒரு மனித உருவம் நிழலாடியது. நசுங்கிய மூட்டைப் பூச்சியைச் சன்னல் வழியாக வெளியே எறிந்தான்.

"அந்த மனிதர் இப்போது இருந்தால், இந்த மூட்டைப் பூச்சிக்காகவும், நடந்து விட்ட ஹிம்சைக்காகவும் ஒரு நிமிஷம் ஆழ்ந்த துக்கம் அநுஷ்டிப்பாரோ?" என்ற கேள்வி அவன் மனத்தில் எழுந்ததும் சிரிப்பு வந்தது. நினைவில் பழைய சம்பவம் பின்ன விட்டது—

ஃ ஃ ஃ

அப்போது ரங்கமணிக்குப் பதினான்கு அல்லது பதினைந்து வயதிருக்கும். படிப்பில் கவனம் செல்லவில்லை. சங்கராம தீக்ஷிதருடன் ஊர்வலங்களுக்கும், பொதுக்கூட்டங்களுக்கும் போய்க் கொண்டிருந்தான். அப்போது ரங்கமணியின் தீவிரமான ஆசை யெல்லாம், தன் கையால் ஒரு வெள்ளைக்காரனையாவது கொல்ல வேண்டும் என்பதுதான்.

தீக்ஷிதர் அவன் மனத்தை மாற்ற முயன்று பார்த்தார். "தம்பி! இந்த நினைவே வரக் கூடாது" என்றார் தீக்ஷிதர்.

"பழிக்குப் பழி வாங்க வேண்டும்" என்றான் ரங்கமணி ஆவேசத்துடன்.

"நடந்ததை மறந்து விடப்பா. மனத்தில் வைத்துக் கொண்டு நீ ஏதாவது செய்து விட்டால், பிறகு உனக்குத்தான் ஆபத்து. உன் தாத்தா எவ்வளவு வருந்துவார்."

"யார் வருந்தினாலும் சரி, எப்படியும் ஒரு வெள்ளைக்



காரணையாவது கொல்லாமல் நான் விடப் போவதில்லை. எனக்கு மட்டும் ஒரு துப்பாக்கி கிடைத்தால்......'' என்று கூறிவிட்டு, கட்டு விரலைத் துப்பாக்கி மாதிரி நீட்டி, தீக்ஷிதரின் நெஞ்சுக்கு நேராகக் குறி பார்த்தான் ரங்கமணி. அந்தப் பிஞ்சு உள்ளத்தில் எவ்வளவு வெறுப்பும், பழி உணர்ச்சியும் புகுந்து விட்டன என்ற வியப்பில் பிரமிப் படைந்தார் தீக்ஷிதர்.

ஒரு நாள் மாலை தீக்ஷிதர் வந்தார். முன் அறையில் அவருக்கும் நெல்லையப்ப பிள்ளைக்கும் தர்க்கம் நடந்தது. அந்தச் சமயத்தில் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பிய ரங்கமணிக்கு அவர்களுடைய பேச்சு சரியாகப் புரியவில்லை. கடைசியில் தீக்ஷிதர் கூறியது மட்டும் தெளிவாகக் கேட்டது.

''பிள்ளைவாள்! ரங்கமணியின் நன்மைக்காகத்தான் அழைத்துப் போகிறேன். அவன் மனசு மாறினாலும் மாறலாம். பயப்படாமல் என்னை நம்பி அனுப்பி வையுங்கள்'' என்றார் தீக்ஷிதர்.



வெளியூர் போகும் உற்சாகத்தில், தீக்ஷிதருடன் புறப்பட்டு விட்டான் ரங்கமணி. திருநெல்வேலிக்கு யாரோ ஒரு பெரிய மனிதர் வருகிறார் என்றும், அவரைப் பார்க்கத்தான் தன்னை தீக்ஷிதர் அழைத்துச் செல்கிறார் என்பதையும் தெரிந்து கொண்டான். அம்பாசமுத்திரத்திலிருந்து திருநெல்வேலி வரும் வரை தீக்ஷிதரைக் கேள்விகள் கேட்டுத் துளைத்து விட்டான். ஆனால் தீக்ஷிதரிடமிருந்து அவனுக்குக் கிடைத்த ஒரே பதில், ''அவசரப்படாதே. எல்லாம் அங்கு வந்து பார்'' என்பதுதான்.

இரவு எட்டு மணிக்குத் திருநெல்வேலிக்குப் போய்ச் சேர்ந்தார்கள். ஒரு வீட்டுக்கு அவர்கள் வந்தபோது, வாசலில் ஒரு பெரிய பந்தல் போட்டிருந்ததையும், பல இடங்களில் பெட்ரோமாக்ஸ் விளக்குகள் எரிந்து கொண்டிருந்ததையும் கண்ட ரங்கமணி, அந்த வீட்டில் கலியாணம் நடக்கப் போகிறது என்று எண்ணிக் கொண்டான். ஆனால், வீட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் கதர்க் குல்லாய் அணிந்த பலர், கூடி இருந்ததைப் பார்த்ததும் அவனுக்குச் சந்தேகம் தோன்றியது. தீக்ஷிதர் அவனை ஓர் அறைக்குள் அழைத்துச் சென்று அங்கு உட்கார வைத்து விட்டு வெளியே சென்று விட்டார். நேரம் ஆக ஆக ரங்கமணிக்கு அலுப்புத் தட்டியது. ஓர் ஓரத்தில் கிடந்த பெஞ்சியில் அவன் முடங்கிக் கொண்டான்.

மணி பத்து இருக்கும். திடீரென்று வீட்டில் இருந்தவர்களிடையே பரபரப்புத் தோன்றியது. ''வந்து விட்டார், வந்துவிட்டார்!'' என்று கூக்குரல் எழுந்தது. ரங்கமணி பெஞ்சியிலிருந்து எழுந்து சன்னல் வழியாகத் தெருவைப் பார்த்தான். வாசலில் ஒரு கார் வந்து நின்றது. உடனே, ''வந்தே மாதரம்.....! பாரத மாதாவுக்கு.... ஜே! மகாத்மா காந்திக்கு ..... ஜே....!'' என்ற கோஷங்கள் கிளம்பி, ஊரையே அதிர வைத்தன. ரங்கமணி பரபரப்படைந்தான். யாரோ ஒரு முக்கியமான மனிதர் வருகிறார் என்பதை உணர்ந்து கொண்டான். வருபவரைப் பார்க்கச் சன்னல் வழியாக எட்டிப் பார்த்தான். ஆனால் கூட்டம் காரைச் சூழ்ந்து கொண்டு மொய்க்கவே, ரங்கமணிக்கு ஒன்றும் தெரியவில்லை. வீட்டுக்குள் வந்த பிறகு தன்னை தீக்ஷிதர் வந்திருப்பவரிடம் அழைத்துக்கொண்டு போவார் என்ற நம்பிக்கையில் மீண்டும் பெஞ்சியில் உட்கார்ந்து கொண்டான்.

சிறிது நேரத்துக்குப் பிறகு கூட்டம் கலையத் தொடங்கியது. கடைசியில் பத்துப் பதினைந்து கதர்ச் சட்டைக்காரர்கள் மட்டுந்தான் இருந்தார்கள். ரங்கமணி பொறுமையின்றித் தவித்துக் கொண்டிருந்தான். பதினொரு மணியிருக்கும். தீக்ஷிதர் அவ்விடத்துக்கு வந்து சேர்ந்தார்.

''யார் அது?'' என்று ரங்கமணி ஆவலோடு கேட்டான்.

''வா, அவரைப் பார்க்கப் போகலாம்'' என்று கூறி அவனை அழைத்துச் சென்றார் தீக்ஷிதர்.

பெரிய விசாலமான அறையில் பலர் அமர்ந்திருந்தனர். தீக்ஷிதர் அனைவரையும் கடந்து சென்றார். ரங்கமணி சிறிது கூச்சத்துடன் பரக்கப் பரக்கப் பார்த்துக் கொண்டே அவரைத் தொடர்ந்து சென்றான். அங்கிருந்தவர்கள் அனைவரும் அவனைப் பார்த்த போது அவனுக்குக் கூச்சமாயிருந்தது. அறையின் ஒரு கோடிக்கு வந்ததும் தீக்ஷிதர், மரியாதையாகக் குனிந்து நின்று யாரிடமோ மெதுவாக இந்தியில் பேசினார். தீக்ஷிதருக்குப் பின்னால் ரங்கமணி நின்றதால் கீழே உட்கார்ந்திருப்பவரை அவனால் பார்க்க முடியவில்லை.

''அந்தப் பையன் வந்திருக்கிறான்'' என்று கூறிவிட்டு ரங்கமணியை முன்னால் கொண்டு வந்து நிறுத்தினார் தீக்ஷிதர்.

தன் எதிரே உட்கார்ந்திருந்த ஓர் ஒல்லியான மனிதரைக் கண்டு திகைத்தான் ரங்கமணி. படங்களின் மூலமாகத் தெரிந்து வைத்திருந்த உருவம் தன் கண் முன் சிரித்துக் கொண்டே உட்கார்ந்திருப்பதைப் பிரமிப்புடன் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஒல்லியான உடல்; தூய வெள்ளை நிறத்தில் கதர் ஆடை இடுப்பில் இருந்தது. மேல் உடலில் துணி இல்லை. பல் விழுந்து பொக்கையாகிவிட்ட வாயில் குழந்தை சிரிக்கும் போது தோன்றுமே அந்த அழகும், தூய்மையும் நிறைந்த கவர்ச்சியான சிரிப்புத் தவழ்ந்தது. மூக்குக் கண்ணாடிக்குள் தெரிந்த கண்களில்தான் எத்தனை ஒளி! நீண்ட கால்களை மடக்கி ஒரு கையைத் தரையில் ஊன்றியிருந்தார், அந்த அதிசய மனிதர். தம்மைப் பிரமை பிடித்தவனைப் போல் ரங்கமணி பார்ப்பதைக் கண்டு அவர் சிரித்தார். அந்த மோகனச் சிரிப்புக்குத்தான் எவ்வளவு கவர்ச்சியிருக்கிறது! ரங்கமணியின் கையைப் பற்றி இழுத்து, ''உட்கார்!'' என்று கூறித் தம் பக்கத்தில் இருத்திக் கொண்டார். அவருடைய மென்மையான ஸ்பரிசம் ரங்கமணியின் உடலைச் சிலிர்க்க வைத்தது.

''உனக்கு ஹிந்தி தெரியுமா?'' என்று ஹிந்தியில் கேட்டார்.

''தெரியும்!'' என்று தலையை அசைத்தான் ரங்கமணி.

''பையனைப் பார்த்தால் சாதுவாக இருக்கிறான்! இவனையா பயங்கரவாதி என்கிறீர்கள்?'' என்று தீக்ஷிதரைப் பார்த்துக் கேட்டார். தீக்ஷிதர் பதில் சொல்லாமல் அடக்கமாகச் சிரித்துக் கொண்டார்.

''என்னை உனக்குத் தெரியுமா?'' என்று ரங்கமணியிடம் கேட்டார்.

''தெரியுமே..... மகாத்மா காந்தி....'' என்றான் ரங்கமணி.

''ஓ.... அப்படியா?'' என்று சிரித்தார். பிறகு, ''மகாத்மா எதற்கு? வெறும் காந்தி தான்'' என்றார். அவரையே ஆவலோடு பார்த்தான் ரங்கமணி.

''தீக்ஷிதர் உன்னைப் பற்றி நிறைய சொல்லியிருக்கிறார். வெள்ளைக்காரர்களைக் கொல்ல வேண்டும் என்கிறாயாமே, அப்படியா?'' என்று கேட்டார் மகாத்மா.

''எங்கப்பாவைக் கொன்றது வெள்ளைக்காரன்தான்'' என்றான் ரங்கமணி வெடுக்கென்று. மகாத்மா சிரித்துக் கொண்டே, அவன் தோள் மீது கையை வைத்தார்.


''இன்னும் கோபத்தோடுதான் இருக்கிறாய்!'' என்றார்.

''இவன் அப்பாவும் சிதம்பரம்பிள்ளையும் நண்பர்கள்'' என்றார் தீக்ஷிதர்.

''இருக்கட்டுமே. ஆனால் சிதம்பரம்பிள்ளை தீவிரவாதியே தவிர, பயங்கரவாதியில்லையே. இளம் உள்ளத்தில் இப்படி ஒரு வேகம் எப்படித்தான் புகுந்ததோ!'' என்று ரங்கமணியை உற்றுப் பார்த்தார் மகாத்மா. கண்ணாடிகளுக்கு ஊடே தெரிந்த மகாத்மாவின் கருணை ததும்பிய பார்வையை எதிர் நோக்க முடியாமல் தலைகுனிந்து உட்கார்ந்திருந்தான் ரங்கமணி.

''கோபத்தால் எதையும் சாதிக்க முடியாது. வெள்ளையர்களை விரட்டுவதற்கு என்னிடம் புது ஆயுதம் இருக்கிறதே. துப்பாக்கி, கத்தி இவற்றைவிடச் சிறந்த கருவியாயிற்றே அது. அதனால் சாதிக்க முடியாதது ஏதுமில்லை, நம்பிக்கையுடன் செயலாற்றினால்!'' என்றார் மகாத்மா.

ரங்கமணிக்கு ஒன்றும் புரியவில்லை. மகாத்மாவின் அருகில் இருக்கிறோமே என்ற மரியாதை உணர்வு அவனைச் சிறைப்படுத்தியிருப்பது போல் உணர்ந்தான். அந்த இடத்தை விட்டு விலகிச் சென்றுவிடத் துடித்தான். வெள்ளைக்காரனைக் கொல்லக் கூடாது என்று மகாத்மா கட்டளையிட்டு விடுவாரோ என்ற பயம் வேறு சூழ்ந்து கொண்டது. அந்தச் சமயத்தில் அவனுடைய



மறதியால் விளையும் தொல்லை

உங்கள் ஆயுள் இன்சூரன்சுப் பாலிசி சரியாக உள்ளதா என நீங்கள் அண்மைக் காலத்தில் கவனித்துப் பார்த்ததுண்டா? உங்கள் பாலிசியில்,

- சரியான வயது
- முகவரியில் மாற்றமிருப்பின் அதன் விவரம்
- வாரிசு நியமனம்

ஆகியவை குறிக்கப்பட்டிருக்க வேண்டும். இத்தகைய விவரங்களை பாலிசிதாரர்கள் தரத் தவறுவதால் ஆண்டுதோறும் எத்தனையோ பாலிசிகளின் உரிமைப் பணத்தை உரிய காலத்தில் தீர்க்க இயலாமற் போய்விடுகிறது.

எனவே, உங்கள் பாலிசியை இன்றே சரிபார்த்து தேவையான விவரம் இதுவரை தராதிருப்பின் ஆவன செய்க. மேலும், உங்களுடைய பிரீமியத்தை இம்மாதமும் இனிவரும் மாதங்களிலும் குறித்த அலுவலகத்தில், குறித்த காலத்தில் தவறாமல் செலுத்த உங்கள் நினைவேட்டில் குறித்து வைத்துக் கொள்ளுங்கள்.

ஆயுள் இன்சூரன்சு போல

ஆதரவு தருவது எதுவுமே இல்லை.

EP-LIC-SZ 48.

கவனம் மகாத்மாவின் பக்கத்தில் இருந்த சிறு பலகையின் மீது கிடந்த ஒரு தந்தச் சிலுவையின் மீது சென்றது. இயேசுநாதர் சிலுவையில் மாட்டப்பட்டிருப்பது போல் இருந்த அந்தச் சிறு பொம்மையை எடுத்துப் பார்த்தான்.

''இயேசுநாதர் கதை தெரியுமா உனக்கு?'' என்று மகாத்மா கேட்டார்.

''தெரியும்!'' என்று தலையை அசைத்தான் ரங்கமணி.

''இந்த மகாத்மா தம்மைக் கொன்ற வர்கள் மீதுகூடக் கோபம் கொள்ளவில்லை. உண்மையில் இவர்தான் மகாத்மா'' என்றார் காந்தியடிகள். சிலுவையை மீண்டும் பலகையின் மீது வைத்தான் ரங்கமணி.

''இதை நீயே எடுத்துக் கொள். கன்னியாகுமரியில் ஒரு நண்பர் இதைக் கொடுத்தார். இது என்னிடம் இருப்பதைவிட உன்னிடம் இருந்தால் பயன்படும். உனக்குக் கோபமும் பழிவாங்கும் எண்ணமும் வரும்போதெல்லாம் சிலுவையிலிருக்கும் இந்த மகானைப் பார்த்துக் கொள். சாந்தி கிடைத்து விடும்'' என்று கூறி, தந்தப் பொம்மையை எடுத்து ரங்கமணியிடம் கொடுத்தார். ரங்கமணி அதை வாங்கித் தன் சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டான்.

''நீங்கள் வடக்கே வரும்போது இவனையும் அழைத்து வாருங்கள்!'' என்று தீக்ஷிதரைப் பார்த்துக் கூறினார் மகாத்மா.

அன்று இரவே ரங்கமணியும் தீக்ஷிதரும் தாங்கள் தங்கியிருந்த ஹோட்டலுக்கு வந்து விட்டார்கள். இரவு வெகு நேரம் வரை தூங்கவேயில்லை. நினைவில் காந்தியடிகளின் உருவம் தோன்றிக் கொண்டேயிருந்தது. இடையிடையே சட்டைப் பையைத் தொட்டுச் சிலுவைப் பொம்மை பத்திரமாயிருக்கிறதா என்று பார்த்துக் கொண்டான். மிஷன் பள்ளிக்கூடத்துப் பாதிரியார், ஒரு சமயம் அவனுக்குக் கொடுத்த பைபிள் கதைப் புத்தகத்தின் ஞாபகம் வந்தது. அதிலிருந்த இயேசுவின் படமும் நினைவில் தோன்றியது. மகாத்மா காந்திக்குத் தாடியிருந்தால் இயேசுநாதர் போலவேயிருப்பார் என்று கற்பனை செய்து கொண்டான். அசதி அவனுடைய கண் இமைகளை அழுத்தியது. எதை யெல்லாமோ எண்ணிக் கொண்டு படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான்.

திடீரென்று தீக்ஷிதர் அங்கு வந்து அவனைக் கூட்டிக் கொண்டு ஒரு பெரிய மைதானத்தின் வழியாக நடந்தார்! மைதானத்தின் நடுவே ஒரு பெரிய கூட்டம் கூடியிருந்தது. இவர்களும் கூட்டத்தோடு போய் நின்றார்கள். கூட்டத்தின் நடுவே ஒரு பெரிய சிலுவையிருந்தது. யாரோ ஒரு மனிதனை இரண்டு பேர்களாகச் சேர்ந்து அந்தச் சிலுவையில் ஏற்றி, ஆணி கொண்டு அடித்தார்கள். கூட்டம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. ரங்கமணிக்கு ஆத்திரம் தாங்கவில்லை. தன் சட்டைப் பைக்குள் கைவிட்டான். அதிலிருந்து ஒரு சிறு துப்பாக்கியை எடுத்து ஆணி கொண்டு அடித்தவர்களைச் சுட்டு வீழ்த்திவிட்டுச் சிலுவையில் தொங்கியவரை உற்றுப் பார்த்தான். சந்தேகமேயில்லை. மகாத்மா காந்திதான் சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்தார்! ஆனால், என்ன இது? மகாத்மாவுக்கு எப்போது தாடி வளர்ந்தது? சிலுவையில் அறையப்பட்டால் தாடியும் வளர்ந்து விடுமோ......?

''ஐயோ பாபுஜி!'' என்று அலறினான் ரங்கமணி. அவன் தோள் மீது யாரோ கைவைத்து அழுத்துவது போலிருந்தது.

திடுக்கிட்டு விழித்தான். பரக்கப் பரக்கப் பார்த்துத் திகைத்தான். தீக்ஷிதர் அவனைத் தொட்டு எழுப்பிக் கொண்டிருந்தார். விடிந்து வெகுநேரமாகியிருந்தது! ரங்கமணி பரபரப்புடன் தன் சட்டைப் பையிலிருந்த சிலுவையை எடுத்துப் பார்த்தான். அதில் இயேசுநாதர்தான் இருந்தார். ''என்ன ரங்கமணி, கனவு கண்டாயா?'' என்று கேட்டார் தீக்ஷிதர். கண்டது கனவுதான் என்று தெரிந்ததும் ரங்கமணிக்கு மனம் அமைதி அடைந்தது.

''ஏதோ ஒரு கனவு'' என்று முனகிக் கொண்டே படுக்கையிலிருந்து எழுந்தான்.

ஃ ஃ ஃ

பழைய நினைவின் ஆதிக்கத்தில் தன்னை மறந்து ரயில் வண்டிக்குள் சாய்ந்திருந்த ரங்கமணி ஏதோ ஓர் அதிர்ச்சியில் சுய நினைவை அடைந்தான். அப்போது ரயில் வண்டி சேர்மாதேவி ஆற்றுப் பாலத்தைக் கடந்து கொண்டிருந்தது. பாலத்தைக் கடக்கும் போது ஏற்பட்ட இரைச்சலின் அதிர்ச்சியில்தான் ரங்கமணியின் சிந்தனை கலைந்து விட்டது.

''அஹிம்சையைக் கையாண்டு என்ன பயன்? பாவம் இந்த இயேசுநாதர், வீணாக உயிரை இப்படி விட்டிருக்க வேண்டாம். எதிரிகளை எதிர்த்துத் தாக்கி அழித்திருக்க வேண்டும். அந்தப் பணியில் வீர மரணம் கிடைத்திருந்தாலாவது நன்றாயிருந்திருக்கும். இப்படி ஓர் அப்பாவியைப் போல் உயிரை விட்டதால்தான் இயேசுநாதர் மகான் ஆனாரா? அப்படி எதிரிகளுக்குப் பணிந்து உயிரை விட்டு மகானாவதைவிட அவர்களை எதிர்த்து மாவீரன் என்று போராடுவதே மேல்'' என்று தனக்குள்ளேயே முனகிக் கொண்டான்.

'மனிதன் தன் இயற்கை சுபாவத்துக்கு ஏற்பத்தான் வாழ முடியும். வெறும் தத்துவம் வாழ்க்கைக்கு உதவுமா? காந்தியடிகளின் புத்தி, ஏன்தான் இப்படி ஆகிவிட்டதோ!' — தனக்குள்ளேயே கூறிச் சலித்துக் கொண்டான் ரங்கமணி.

''சார்....!'' என்ற குரலைக் கேட்டுத் திரும்பினான். இரண்டு பெஞ்சுகளுக்கு அப்பால் சற்று முன் தர்க்கத்தில் ஈடுபட்டிருந்த பாதிரியார்தான் நின்று கொண்டிருந்தார். ரங்கமணி எழுந்து இடம் கொடுத்ததும் பாதிரியார் உட்கார்ந்து கொண்டார். ரங்கமணியிடம் அச்சடித்த ஒரு காகிதத்தைக் கொடுத்தார். மேலோட்டமாக அதைப் பார்த்தான் ரங்கமணி. ''அஞ்ஞானிகளே!'' என்று ஆரம்பமாகியிருந்தது. அந்தக் காகிதத்தைக் கசக்கிச் சன்னலுக்கு வெளியே எறிந்தான். அதைக் கண்டு பாதிரியார் திடுக்கிட்டார்.

''என்ன இப்படி?'' என்று ஆத்திரத்தோடு கேட்டார்.

''உங்கள் மீது வீசி எறியவில்லையே என்கிறீர்களா ?''

''என்ன இருந்தாலும் அதை வீசி எறிந்தது தவறு சார் !'' என்றார் பாதிரியார் கோபத்துடன்.

''நீங்கள் செய்த தவற்றைவிடவா?''

''நான் என்ன தவறு செய்துவிட்டேன்?'– திகைப்புடன் கேட்டார் பாதிரியார்.

''நான் ஓர் இந்து என்று தெரிந்தும் என்னிடம் அந்தத் தாளை ஏன் கொடுத்தீர்கள்?'' என்று ரங்கமணி சற்றுக் கோபத்துடன் கேட்டான்.

''இது எங்கள் கடமை.''

''அது உண்மைதான்.... நல்ல வேளை, உரிமை என்று சொல்லாமல் போனீர்களே!'' என்றான் ரங்கமணி சிரித்துக் கொண்டே.

இதைக் கேட்டுப் பாதிரியார் முகத்தைச் சுளித்துக் கொண்டார். இந்தச் சமயத்தில் ரயில் வண்டி திருநெல்வேலி ஜங்ஷன் பிளாட்பாரத்தில் வந்து நின்றது.

பாதிரியார் கோபத்துடன் வண்டிக்குள் உட்கார்ந்திருந்தார். ரங்கமணி, மடியில் கிடந்த புத்தகத்தை எடுத்துப் பெட்டிக்குள் வைத்தான். பெட்டிக்குள் தந்தச் சிலுவை காட்சியளித்தது.

''மிகச் சிறந்த கிறிஸ்தவர் ஒருவரை எனக்குத் தெரியும்'' என்றான் ரங்கமணி.

''யார் அது?'' என்று ஆர்வத்தோடு கேட்டார் பாதிரியார்.

''பாவம், அவரைத்தான் சிலுவையில் அறைந்து விட்டார்களே!'' என்று கூறி, பெட்டியிலிருந்து இயேசுநாதரின் உருவத்தை எடுத்துக் காட்டிவிட்டு மீண்டும் அதைப் பெட்டிக்குள் போட்டுப் பூட்டி, பெட்டியையும் படுக்கையையும் எடுத்துக் கொண்டு மௌனமாக வண்டியை விட்டு இறங்கி நடக்கலானான் ரங்கமணி.

பாதிரியார் வாயடைத்துப் போய்ப் பிரமிப்புடன் அவன் போவதையே வண்டிக்குள் உட்கார்ந்திருந்தவாறு பார்த்துக் கொண்டிருந்தார்.

ஃ ஃ ஃ

ரயில் வண்டி, திருநெல்வேலியை அடைந்தபோது மாலை மூன்று மணி ஆகிவிட்டது. பிளாட்பாரத்தில் இறங்கியபோது ரங்கமணியின் கண்களில் முதலில் பட்டவன் வெங்குதான். ஒரு முறுக்கைக் கடித்துக் கொண்டு எங்கோ பார்த்துக் கொண்டிருந்தான். ரங்கமணியைக் கண்டதும், ''சார், என்னிடம் இங்கே வருவதாகச் சொல்லவேயில்லையே, சார் !'' என்று கூவினான் வெங்கு.

''இங்கே எங்கே வந்தாய் ?''

''போலீஸ் டெபுடி சூப்பிரண்டெண்ட் இந்த வண்டியில் வருகிறார்.''

''அவருக்கும் உனக்கும் என்ன?-உறவா?''

''ஆமாம்! நெருங்கிய உறவுதான். அவரோடுதான் இருக்கிறேன். முறுக்கு சாப்பிடுங்கள் சார். அம்பாசமுத்திரத்து முறுக்கு சார்!'' என்று கூறிச் சட்டைப் பைக்குள்ளிருந்து ஒரு முறுக்கை எடுத்து நீட்டினான். ரங்கமணி சிரித்தான்.

'வெள்ளையன் ஆட்சியில், இப்படி ஒவ்வோர் ஊரும் முறுக்குக்கும், போளிக்கும், வெள்ளிரிப் பிஞ்சுக்குமா பேர் வாங்க வேண்டும்?'

ரங்கமணியின் இதயம் ஓலமிட்டது. ''முறுக்கை நீயே நொறுக்கு. நான் வருகிறேன்'' என்று கூறி நகர்ந்தான்.

''அதோ, சூப்பிரிண்டெண்ட் வந்து விட்டார். உங்களைப் பிறகு சந்திக்கிறேன், சார்! '' என்று கூறிவிட்டுக் கையில் மீதம் இருந்த முறுக்கை வாயில் திணித்துக்கொண்டு ஓடினான் வெங்கு.

ஸ்டேஷனை விட்டு வெளியே வந்ததும் ஒரு கூலிப் பையனிடம் பெட்டியையும், படுக்கையையும் கொடுத்துவிட்டு அவன் பின்னால் நடந்தான் ரங்கமணி.

''எங்கே சார், போக வேண்டும்?'' என்று கேட்டான் கூலிப் பையன்.



அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ரூஸ்வெல்டுக்கு அருகில் உள்ள இந்த இளைஞர் யாரென்று உங்களால் சொல்ல முடியுமா? வாழ்க்கையின் சாதாரண நிலையிலிருந்து உன்னத பதவிக்கு உயர்ந்தவர் இவர். இவர் யாராக இருக்கும் என்று மண்டையைப் போட்டு உடைத்துக் கொள்வதை விட 40ம் பக்கம் புரட்டி விட்டால் சுலபமாக உங்கள் குழப்பம் தீர்ந்து விடும்!

''சிந்துபூந்துறை !''

''எந்த வீடு ?''

''சர்தார் சொக்கலிங்கம்பிள்ளை....''

''ஓ.... அவரா? தெரியும் சார் !'' என்று சொல்லிவிட்டு வெகு வேகமாக நடந்தான் கூலிப் பையன்.

''கடைத்தெரு வழியாகப் போ'' என்றான் ரங்கமணி.

கடைத்தெரு பக்கம் வந்ததும் அவன் கால்கள் தானாகவே சாலைக் குமாரசாமி கோயில் பக்கம் இழுத்தன. கோயிலை அடுத்திருந்த இந்து கல்லூரியில் அவன் படித்துக் கொண்டிருந்த போது, அவனுக்கும் அந்தக் கோயிலுக்கும் மிகுந்த தொடர்பு உண்டு.

திருநெல்வேலிக்குப் புதிதாக வருபவர்களின் கண்களில் அந்தக் கோயில் தென்படுவதில்லை ! கடைகளின் ஊடே மறைந்தவாறு அமைந்திருக்கும் அந்தக் கோயிலைத் தேடி வரும் பக்தர்களுக்கு அளவேது ! கடைத் தெருவில் அமைந்து விட்டதால், கடை முதலாளிகளின் அன்புக்குப் பாத்திரமான அந்தச் சுப்பிரமணிய சுவாமிக்கு வருமானத்துக்கும் குறைவில்லை.

கோயிலுக்கு எதிரே வந்ததும், தெருவில் நின்றவாறே கைகூப்பி வணங்கிவிட்டுத் தலை நிமிர்ந்த ரங்கமணியின் கண்களில் அவன் படித்த கல்லூரி தென்பட்டது. அதைக் கண்டதும் அவன் கை கூப்பாவிட்டாலும் உள்ளம் பணிந்து வணங்கியது.

திருநெல்வேலியிலிருந்த செல்வந்தர்களின் தர்மசிந்தனையைத் தூண்டுவதற்காக மதுரையிலிருந்த ஒரு தர்மாத்மா திருநெல்வேலியில் அந்த இடத்தில் திருநெல்வேலி மக்களுக்காக அந்தக் கல்லூரியை ஏற்படுத்திவிட்டு அமரராகி விட்டார். வேறு ஊர்க்காரர் கொடுத்த கல்லூரியைச் சிதையாமல் காப்பாற்றிய பெருமை நிச்சயம் திருநெல்வேலி செல்வந்தர்களுக்கு உண்டு.

திருநெல்வேலி செல்வந்தர்களிடம் ஒரு தனிச் சிறப்பு உண்டு. அதாவது, எதிலும் தாங்களாக முந்திக் கொண்டு இறங்கி ஒரு காரியத்தைச் செய்து முடித்துப் பெருமை அடைய வேண்டும் என்ற அவசரம் கிடையாது. அபரிமிதமான பொறுமையும், எதிலும் விறுவிறுப்புக் காட்டாத நிதானத் தன்மையும், கடந்த காலத்தை எண்ணத்தில் அசை போட்டுக் கொண்டு வருங்காலக் கற்பனையில் அமைதியாக வாழ்க்கையைக் கழித்து விடும் இறனும் நெல்லை மாவட்டத்துக்கே உரித்தான பாணியாகும். இவ்வளவு அமைதியான சூழ்நிலையில், வீறுகொண்டு எழுந்த சுப்பிரமணிய பாரதியாரும் சுதந்திர தாகம் கொண்ட சிதம்பரம்பிள்ளையும் எப்படி உருவானார்கள் என்று திகைக்கிறீர்களா ? சாம்பலுக்குள் நெருப்பு கனிவது தெரியவா செய்கிறது ? அது போலத்தான் —

பல சிறந்த தமிழர்களை உருவாக்கிய அந்தக் கல்லூரி ரங்கமணியையும் உருவாக்கியிருந்தது. பல ஆண்டுகளுக்குப் பிறகு தாயைச் சந்திப்பது போன்ற உணர்ச்சி தோன்றி அந்த உணர்வால் நெஞ்சம் நெகிழச் சிறிது நேரம் அங்கேயே நின்று அந்தக் கலைக் கோயிலைப் பாசத்துடன் பார்த்தான். பிறகு சிந்துபூந்துறையை நோக்கி நடக்கலானான்.

தாமிரபரணிக் கரையில் அமைந்திருக்கும் சிறு கிராமம் சிந்துபூந்துறை. அது திருநெல்வேலியின் பரபரப்புக்கும் நெரிசலுக்கும் அப்பாற்பட்டு ஆனால் திருநெல்வேலியை ஒட்டியேயிருக்கும் கிராமம். ரங்கமணி குறிப்பிட்ட தெருவுக்குள் நுழைந்ததும், ''அதோ, தெரிகிறது பாருங்கள், மஞ்சள் காவியடித்த மாடி வீடு ; அதுதான்'' என்றான் கூலிக்காரப் பையன்.

அவன் காட்டிய வீடு சிறிதாக இருந்தாலும் கவர்ச்சியாக இருந்தது. வீட்டு வாசலை அடைந்ததும் கூலியைக் கொடுத்துப் பையனை அனுப்பிவிட்டுக் கதவைத் தட்டினான் ரங்கமணி. சிறிது நேரத்தில் கதவு திறந்தது. நிமிர்ந்து பார்த்த ரங்கமணி திகைத்துச் சிலையாக நின்று விட்டான். மதுரை ரயில் நிலையத்தில் சந்தித்த பெண் அங்கு நின்று கொண்டிருந்தாள். அவளும் இவனைக் கண்டுவிட்டுத் திகைத்தாள். ஒரு சில விநாடிகள் ஒன்றுமே பேசாமல் விழித்தபடி நின்று கொண்டிருந்தார்கள். அந்தப் பெண்தான் முதலில் அதிர்ச்சியிலிருந்து விடுபட்டுப் பேசத் தொடங்கினாள். ''ஓ.... நீங்களா? உள்ளே வாருங்களேன்!'' என்று வரவேற்றாள். ரங்கமணி பெட்டி படுக்கையுடன் வீட்டுக்குள் நுழைந்தான். (தொடரும்)


எப்பொழுதும் புத்துணர்ச்சியுடன் இருங்கள்!

நாள்முழுவதும் சுறுசுறுப்பாக இயங்குவதற்கான புத்துணர்ச்சிக்கு

புதிய கால்கேட் லோர்னே டால்க்

புதிய கால்கேட் லோர்னே டால்க்கின் புதுப்பிக்கும் நறுமணம் உங்களைக் குளுமையுடனும் புத்துணர்ச்சியுடனும் வைத்திருக்கிறது.... நாள் முழுவதும் அந்தத் துடிப்பான சுறுசுறுப்பைத் தருகிறது. இளமைத் துடிப்பும், சுறுசுறுப்பும், விளையாட்டுகளில் பிரியமுள்ளவர்கள் குறிப்பாக கால்கேட் லோர்னே டால்க் வியர்வையைத் துரிதமாக கிரகித்துக்கொண்டு நாங்கள், நாள் முழுவதும் உற்சாகமாக இருக்க உதவுவதை நன்கு அறிவார்கள்!

இது சிக்கனமானதும்கூட! உங்கள் குடும்பத்தினருக்கு கால்கேட் லோர்னே டால்க்கை வாங்குங்கள்.—அது சுறுசுறுப்பான நாகரீக மக்களுக்கேற்ற புதியதொரு பரவசமூட்டும் நறுமணம் கொண்டது!







அத்தியாயம் 4

நாகம் சீறியது!

இரவு நேரத்தில் பள்ளியறையின் மங்கலான வெளிச்சத்தில் சுருக்காங் கண்ணிக்குள்ளே சிக்கிப் பிடித்த மானிட உடலை அத்தனை விரைவோடு தோளிலே சாத்திப் போட்டுக் கொண்டு அத்தனை வேகமாக நூலேணியிலே இறங்கிய அழலாடிக்கு இப்போது உடம்பெல்லாம் மின்னல் பாய்ந்தது! ஆகா! எத்தனை பெரிய தவறு நேர்ந்து விட்டது!

விண்மீன்களின் ஒளியிலே அந்த முகத்தைப் பார்த்தான். கண்கள் மயங்கி மூடி இருக்கின்றன. விண்ணிலே செல்கிற சந்திரன் இமைகளை மூடி உறங்கினால் எப்படி இருக்கும்! அப்படி இருந்தது அந்த மதிமுகம்!




வெண்ணிலவுப் பெண்ணரசி

சோமு

ஒரு விநாடி தயங்கினான் அழலாடி. மறுபடி மேலே ஏறிச் சென்றுவிடலாமா? மறுபடியும் அந்த அரசப் பள்ளியறைக்குச் சென்று மீண்டும் அந்தக் கட்டிலிலே அரச குமாரியை உறங்க வைத்துவிட்டு ஓசைப்படாமல் வெளியேறி விட்டால் என்ன?

பாவம், அந்த நச்சுப் புகை அரச குமாரியை இன்னும் என்னென்ன செய்யுமோ? மயக்கம் தெளியாமலே போய் விட்டால் என்ன நேரும்?

அழலாடி நூலேணியிலே நின்று சில விநாடிகள் குழம்பினான். பிறகு ஓர் உறுதி. துணிவான ஒரு முடிவுக்கு வந்தான் அழலாடி. தோளிலே சாத்தியிருந்த அரச குமாரியை மெதுவாகக் கைகளால் தாங்கிக் கொண்டே கால்களை 'மள மள' என்று நூலேணியிலே சறுக்கிக் கொண்டே கீழே இறங்கினான். 'விறு விறு' என்று கானக அரணின் எல்லைக்குப் படர்ந்தான் அழலாடி.



''வெற்றிதானே?'' என்று ஆவலோடு கேட்டான் கருங்குதிரைகளுக்கு அருகே நின்ற வீரர்களிலே ஒருவன்.

''வெற்றிதான். ஆனால் தவறான ஒரு வெற்றி!'' என்றான் அழலாடி.

''தவறா?'' என்று திகைப்போடு கேட்டான் அடுத்த வீரன்.

''இப்போது அதெல்லாம் பேச நேரமில்லை. குதிரையிலே ஏறிக் காற்றாகப் பறந்து சென்று இந்தப் பெண்ணுக்கு ஏற்பட்டுள்ள மயக்கத்தைத் தெளிய வைக்க வேண்டும். பாவம், எனக்கே பரிதாபமாக இருக்கிறது!''

இவ்வாறு சொல்லிக் கொண்டே தனக்காகக் காத்திருந்த கருங் குதிரையிலே அரச குமாரியைத் தோளிலே தாங்கியவாறு குதித்து ஏறினான் அழலாடி. மூன்று குதிரைகளும் அந்தக் கானக அரணிலிருந்து புறப்படுகிற தருணத்திலே எங்கோ மறைவிலிருந்த அவர்களுடைய துணைவர்கள் அங்கு வந்து சேர்ந்து கொண்டார்கள்.

''நீங்கள் எல்லாரும் பின்னாலே வாருங்கள். நேரே ஆசிரியருடைய கூடத்துக்குச் செல்லுகிறோம் நாங்கள்!'' என்று சொன்னான் அழலாடி. அடுத்த நொடியிலே மூன்று குதிரைகளும் சிட்டாகப் பறந்தன!

ஃ ஃ ஃ



''கவலை வேண்டாம்!'' என்றார் ஆதனார். வான முகில்களிலிருந்து ஒரு பேரிடியே கீழே பாய்ந்து வந்து தமக்கு எதிரில் விழுந்தாலும் அதைப் பொருட்படுத்தாத ஒரு பேரமைதி தவழ்கிற முகம்! நீண்டு வளர்ந்திருந்த தாடி. துறவி இல்லை. ஆனால் ஒரு சித்தரின் பாங்கிலே தலை முழுதும் அலட்சியமாக வளர்ந்து கிடந்த வெண் கேசம் இரு கூறாகத் தொங்கியது. கண்களிலே இருந்து வந்த ஒளி சுழற்சியும் கருணையும் ஒருங்கே இணைந்த ஒரு விந்தையான கலவை! அதிலே ஒரு குறுகுறுப்பு! இதழ்களின் கோடியிலே நிரந்தரமாக நின்று விளையாடும் ஒரு குறுநகை!

''கவலை வேண்டாம் அழலாடி! ஒரு முரட்டு மனிதனுக்குக் கொடுக்கவேண்டிய நச்சு மருந்தை ஒரு மென்மையான உடம்புக்குள்ளே செலுத்திவிட்டாய். மயக்கம் கடுமையாக இருக்கிறது. ஆனாலும் உயிருக்குக் கேடு இல்லை. கிறக்கம் தெளிவதற்குப் பத்துப் பதினைந்து நாழிகை ஆகும். தெளிந்த பிறகும் அறிவு நிலைப்பதற்காக ஏதாவது மருந்து கொடுத்தாக வேண்டும்!'' என்றார் ஆதனார்.

''அப்படியா?'' என்று கவலையோடு கேட்டான் அழலாடி.

''ஆமாம். கொடுப்போம். ஆனால் எதிர்பாராத ஒரு புதிய சிக்கல் இது!'' என்று சொல்லிக் குறுநகையிலே ஒரு முழு நகை செய்தார் ஆதனார்!

''ஐயனையே, ஆத்திரத்திலும் அவசரத்திலும் பெரிய தவறு செய்து விட்டேன்!'' என்றான் அழலாடி. ஆதனார் சிரித்தார்.

''தவறு உன்னுடையதில்லை. விதி செய்த தவறு இது. ஊழ்வினை செய்த சூழ்ச்சி இது! இதற்கு நீ உன்னை நொந்து கொள்ள வேண்டாம்!''

ஆதனார் இவ்வாறு சொல்லிக் கொண்டே அந்த அரச குமாரியின் முகத்தைப் பார்த்தார். மயக்கமுற்றுக் கிடக்கும் அந்த முகத்திலேதான் எத்தனைய எழில். அந்த உடம்பிலே தான் ஒளிமிக்க அழகு எத்தனை ஒயிலோடு உறங்குகிறது!

''அழலாடி! நம்முடைய மருந்துக் கூடத்தின் நிலவறையிருக்கிறதல்லவா, பூமிக்குக் கீழே, அங்கு கொண்டு சென்று இந்த அரச குமாரிக்குச் சற்றுச் சிகிச்சை செய்ய வேண்டும். இதயத்தின் துடிப்பை நச்சுப் பொடி என்ன செய்திருக்கிறது என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். எத்தனையோ அரச சுகங்களிலே வளர்ந்த ஒரு இளவரசி நம்முடைய பாதாள அறையிலே இந்த மருந்துக் கூடத்தின் எளிய சூழலிலே மயங்கிக் கிடக்க வேண்டும் என்று ஊழ்வினை விதித்திருக்கிறது! அதை யாரால் தடுத்து நிறுத்த முடியும்!''

இப்படி ஆதனார் சொன்ன போது அழலாடிக்கு இதயம் குமைந்தது. செய்யத் தகாத ஒரு பெருங்குற்றத்தைச் செய்துவிட்ட தவறுணர்ச்சி அழலாடியின் மனத்தைச் சாறு பிழிந்தது.

''ஐயனையே, நான் புகுந்தது அரசனுடைய துயில் மாடத்துக்குள்ளே தான்! அதில் பிசகில்லை. ஆனால் அந்த அரசக் கட்டிலிலே.....''

''அழலாடி! அதெல்லாம் ஏன் இப்போது விளக்கம் செய்கிறாய். நான் தான் சொல்லிவிட்டேனே, தவறு நம்முடையதில்லை. விதி செய்த தவறு. நன்னனுடைய வாழ்நாள் முடிகிற காலம் இன்னும் வரவில்லை. அது வரும்வரை இனி நாம் காத்திருக்க வேண்டியதுதான். ஆனால் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டிருக்கிறது நமது செயல்களிலே!''

இவ்வாறு சொன்னார் ஆதனார். அழலாடி அவரையே ஆவலோடு பார்த்தான்.

''அழலாடி ! எத்தனை ஆண்டுகள் நன்னனுடைய அரண்மனை வாழ்வோடு ஒட்டிப் பழகியவன் நான்! நம்முடைய மாணவர்கள் எத்தனை பேர் அரண்மனைக்குள்ளேயே இலை மறைவு காய் மறைவாக இருக்கிறார்கள்! அவர்கள் எல்லாருக்கும் இந்த நிகழ்ச்சி எத்தனை மகிழ்ச்சியைத் தரும் தெரியுமா?''

''தம்பி, கழுகு நம்முடைய கையிலே சிக்குவதற்கு மாறாக, அரசப் பசுங்கிளி நம்முடைய பிடியிலே அகப்பட்டிருக்கிறது. ஒன்றை எண்ணினோம். ஒன்று நடந்திருக்கிறது. என்றாலும் இது, இந்தப் பச்சைப் பசுங்கிளிக்கு ஒரு பெரிய விடுதலை. துளுநாட்டு அரசகுமாரி இளம் நன்னி இதுவரை அநுபவித்து வந்த வேதனைகளுக்கெல்லாம் இப்போது விடிவு காலம் வந்துவிட்டது. அழலாடி, துளுநாட்டு மக்களுக்கு விடுதலை தருவதற்காக நீ சென்றாய். துளுநாட்டு அரசகுமாரிக்கு விடுதலை அளித்திருக்கிறாய். அதுவும் நலமான செயலே ! கவலைப்படாதே ! ஓரளவு மகிழ்ச்சி அடையலாம் இப்போதைக்கு! பிறகு யோசிப்போம், கழுகைப் பிடிப்பது எப்படி என்று!''

இவ்வாறு சொல்லிவிட்டு, நிலவறைக்குள்ளே புகுந்தார் ஆதனார். இரண்டு பணியாளர்கள் அரசகுமாரியை மெதுவாக உள்ளே தூக்கிச் சென்றார்கள்.

அழலாடியும் அவனுடைய துணைவர்களும் கூடத்தின் பின்புறத்து அறையிலே இருந்த சாய்மானங்களில் உட்கார்ந்தார்கள். ஆதனாரின் வைத்தியச் சீடர்கள் சிலர் கீழே நிலவறைக்குள்ளே போவதும், மருந்துக் கூடத்துக்கு வருவதுமாகச் சுறுசுறுப்பாக இருந்தார்கள். இடையிடையே குழி அம்மியின் அரைவை ஓசை கேட்டது, நிலவறைக்குள்ளிருந்து !

''நச்சுப் புகை அந்த அரக்கனை ஒன்றும் செய்திருக்காது. பாவம், இந்த மெல்லிய உடம்பை—'' என்று மிகுந்த பரிவோடு பேசத் தொடங்கினான் அழலாடி.

''மெல்லிய உடம்பு மட்டுமில்லை. துயரத்திலே சிக்கிய இதயம். வேதனையிலே நாளும் கருகிக் கொண்டிருக்கிற மலர் உள்ளம் அது! கடுமையான மருந்து வேகங்களையெல்லாம் தாங்காது !'' என்றான் மாணவ மல்லர்களிலே ஒருவன்.

''உனக்கு இந்த அரசகுமாரியின் துயரங்கள் தெரியுமோ?'' என்று கேட்டான் மட்டற்ற ஆவலோடு அழலாடி.



''இன்று முதல் என் ஆபீசுக்கு முன்னாலே, என் கோரிக்கைகள் நிறைவேறுகிற வரை, நான் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப் போகிறேன்.''

'' அதுக்குப் பிறகு என்ன செய்வே ?''

''ஓரளவு தெரியும். நன்னன் எல்லாரையும் கொடுமைப் படுத்துவது போல மகளையும் துன்பப்படுத்துகிறான். இந்த அரசகுமாரிக்கு ஓர் அண்ணன்; அவனுக்கும் இவளைப் போலவே தங்கமான மனம். சேற்றிலே தாமரையும், சிப்பியிலே முத்தும், நாகப் பாம்புக்குள்ளே நல்மணியும் பிறப்பது போல இந்தக் கொடுங்கோலனுக்கு மணியானஇரண்டு பிள்ளைகள் !'' என்றான் மல்லன்.

''மணிகள் பிறந்ததற்குக் காரணம், மறைந்து போன பட்டத்தரசி! அந்த அரசியின் பொறுமையும், பண்பும் எவ்வளவு உயர்வானவை தெரியுமா ! உத்தமி பெற்ற செல்வங்கள் வேறு எப்படி இருக்கும்! இந்த அரக்கனுக்குக் கொடுத்து வைக்கவில்லை. அந்த உத்தமி போய் விட்டாள்!'' என்று நைந்த குரலிலே சொன்னான் இன்னொரு வீரன்!

''ஓ! நன்னனுடைய பட்டத்தரசி இப்போது இல்லையா?'' என்று கேட்டான் அழலாடி.

''இல்லை. அந்த உத்தமியின் மறைவுக்குப் பிறகு, அரண்மனையே கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறது. அன்பு செய்வதற்கு மனிதர்கள் இல்லை, அங்கே ! பாவம், பெற்ற பிள்ளைகளையும் கொடுமைப்படுத்துகிற அந்த அரக்கனைக் கண்டு அரண்மனைச் சுவர்களே நடு நடுங்குகின்றன!''

''இந்த அரசகுமாரிக்கு அப்படி என்ன கொடுமை செய்கிறான் நன்னன்'' என்று ஆவலோடு கேட்டான் அழலாடி.

''இந்தக் கொடுங்கோலனுக்கு ஒரு சேனைத் தலைவன் இருக்கிறான். மிஞிலி என்று பெயர் !''

''மிஞிலியா?'' என்று கேட்டான் அழலாடி !

"ஆமாம், மிஞிலி! அது என்ன மிஞிலியோ! மிஞிலி! தந்தை வைத்த பெயர்! அதை எப்படி மாற்றுவது! தமிழ் நாட்டின் வரலாற்றில் கொடுமைக்கும் வஞ்சகத்துக்கும் பெயர் பெற்று நிற்கப் போகிற ஒரு வரலாற்றுப் பெயர் அது! மிஞிலி! அந்த மிஞிலிக்கு எத்தனையோ குணக்கேடுகள். மக்களைக் கொடுமைப்படுத்துவது போதாது என்று, அரச குமாரியின் அழகிலும் ஒரு கண் அந்தப் பொல்லாத வஞ்சகனுக்கு!"

"அடடா! எப்படிப்பட்ட அழகி! அவளுக்கு இப்படியும் ஒரு துயரமா!" என்று அங்கலாய்த்தான் அழலாடி.

"துயரமா! அதை எப்படிச் சொல்வது! நன்னனுடைய சூழ்ச்சிகளுக்கெல்லாம் மிஞிலியின் உதவியும் ஒத்துழைப்பும் மிகவும் அவசியமான துணையாக இயங்குகின்றன! இதனால் மூர்க்கனுக்கு மூர்க்கன் பரம நண்பன் என்பது போல, இந்த இருவருக்குள்ளும் ஆன்ம நேய நட்பு! மகளையே இந்தத் தானைத் தலைவனுக்கு மாலையிட வேண்டும் என்று வற்புறுத்துகிறான் மன்னன்! ஏற்கனவே ஒரு மனைவி இருக்கிறாள் அவனுக்கு!" என்று உருக்கமாகக் கூறினான் அந்த வீரன்!

"தானைத் தலைவன் என்றால் அவனுக்கு வயது—"

"வயதுதானே? அவனுக்கும் அரச குமாரிக்கும் இருபது ஆண்டுகள் ஏற்றத் தாழ்வு! குணத்திலோ பல யுகங்கள் வித்தியாசம்! அழகிலோ என்றால் —"

"அடடா! ஊழ்வினைதான் என்னென்ன கொடுமைகளைச் செய்கிறது!"

"ஊழ்வினையா? கொடுமைகளா? சரிதான்! இப்போது அந்த ஊழ்வினை எத்தகைய பெரிய நன்மையைச் செய்திருக்கிறது அழலாடி! உன்னைப் போன்ற வீரமும் ஆற்றலும் இளமையும் அழகும் நிரம்பிய ஒரு வீர இளைஞனை அல்லவா அரச குமாரியின் மீட்சிக்காக அனுப்பியது ஊழ்வினை!" என்றான் இதுவரை மௌனமாக இருந்த நாகமல்லன் என்ற மூன்றாவது வீரன். உடனே அருகில் இருந்த மற்ற வீரர்கள் நகைத்தார்கள். வாலிபச் சிரிப்போடு நாகமல்லன் சொன்னான் :

"தம்பிகளே! அதிகமாகச் சிரிக்காதீர்கள்! கோபம் வரப் போகிறது! நம்முடைய கூட்டாளி அழலாடி, இப்போதுதான் வீர விளையாட்டு விளையாடி ஒரு கோசர்குல அழகியைக் கைப்பிடித்திருக்கிறான். அந்த யோகம் உடனடியாக இன்னொரு பெண்ணை, அரச குமாரியையும் கைப்பற்றும்படியாகச் செய்திருக்கிறது!"

வேடிக்கையாக இப்படிச் சொன்னதும் அழலாடிக்குக் கண் சிவந்தது.

"நண்பா, நிறுத்து உன் பகடிப் பேச்சை! இந்த ஒன்றில் மட்டும் விளையாடாதே! புரிகிறதா?" என்று வெகுண்டான் அழலாடி.

"தப்பு, தப்பு! விளையாடுவேனா நான்? ஒரு மங்கையைப் பற்றிய கரத்திலே, அதே கையிலே, ஒரு அரச குமாரியைப் பற்றிப் பிடித்துத் தோளிலே சாய்த்துக் கொண்டு—"

"என்ன சொன்னாய், என்ன சொன்னாய் —"

அழலாடி சீற்றத்தோடு எழுந்து அந்த மல்லன் மீது பாய்ந்தான். அடுத்த வினாடி அருகிலே இருந்த மற்ற மல்லர்கள் எல்லாம் கையமர்த்தினார்கள். வேடிக்கை பேசிய நாக மல்லன் என்ற வீரன் . கோபமும் வெட்கமும் மாறி மாறி அலை வீசும் முகத்தோடு அழலாடியைப் பார்த்தான். அழலாடி சொன்னான்:

"நாகமல்லா! நான் ஒரு கோசர் மகளைக் கைப் பிடித்தேன் என்றாயே; அதே கைகளினால் ஒரு அரச குமாரியைக் கைப் பற்றினேன் என்றாயே, இனி ஒரு முறை அந்தச் சொற்களைச் சொல். என்ன ஆகிறது என்று பார்! ஆசிரியருடைய மற்கூடம் இது. நமக்குள், வம்பு வேண்டாம் என்று பார்க்கிறேன். இல்லையென்றால் —"

அழலாடி இப்படிச் சொன்னதும் நாகமல்லன் எழுந்தான்.

"இல்லை யென்றால் என்ன செய்வாய் நீ? என்ன செய்து விடுவாய் நீ? பருத்திக் கொட்டையும் பிண்ணாக்கும் தின்கிற காளை மாடுகளைப் பிடிக்கத் தெரியும் உனக்கு. இரவு நேரங்களில் திருட்டுத் தனமாக அரண்மனைக்குள்ளே புகுந்து பெண்களைக் கடத்திக் கொண்டு வரத் தெரியும் உனக்கு! நான் அப்படியில்லை. நேருக்கு நேரான வீரன் தம்பி! பிண்ணாக்குத் தின்கிற காளை மாடு என்று நினைத்தாயா என்னை?"

நாகமல்லன் திமிறிக் கொண்டு எழுந்தான். இது வரை நண்பர்களின் சொல்லிலே கட்டுண்டு கிடந்த அழலாடி சிங்கத்தைப் போன்று பாய்ந்தான். பாய்ந்து நாகமல்லனுடைய தலையை வளைத்துக் கீழே தள்ளினான். அடுத்த வினாடி வீரச் சதுக்கத்துப் பூதம் வெறி கொண்டு அடர்வது போல், நாகமல்லனுடைய இடுப்பிலே ஒரு கையும், கழுத்திலே ஒரு கையுமாகப் பற்றிப் பிடித்து ஒரு குலுக்குக் குலுக்கித் தரையிலிருந்து செந்தூக்காகத் தூக்கித் தலைக்கு மேலே கொண்டு போய் அப்படியே ஒரு வினாடி

நிறுத்திப் பேய் அலறுவது போல் ஒரு கூப்பாடு போட்டான் அழலாடி! அப்போது அந்த மற்கூடம் எல்லாம் நடுக்கம் எடுத்து அதிர்ந்தது.

''அழலாடி!'' என்று குரல் கேட்டது. ஆதனுர் நிலவறைக்குள்ளே யிருந்து வெளிப்பட்டார்.

''அழலாடி! என்ன செய்ய முனேந்தாய் இப்போது?'' என்று சீறினுர் ஆதனுர். அவ்வளவுதான்! தலேக்குமேல் தூக்கிய நாகமல்லனே அப்படியே பூமாலேயைக் கழற்றிக் கீழே வைப்பது போல வைத்து விட்டுக் கூப்பிய கையோடு ஆசிரியருக்கு முன்வந்து நின்றுன் அழலாடி.

''மன்னிக்க வேண்டும் அண்ணலே! ஏதேதோ சொல்லி என் மனத்தைப் புண்படுத்தி விட்டான் இந்த நாகமல்லன். என்னே மன்னித்தருள வேண்டும்!''

ஆதனுர் இதழ்களின் கோடியிலே குறுநகை தவழ நின்ருர்.

''நாகமல்லா, கோசர்மகளேக் கரம் பற்றியும் கரம் பற்ருத ஒரு நிலேயில் அழலாடி தவித்தது உனக்குத் தெரியாது. கோசர் மகளே மணந்த பிறகு அழலாடியின் வாழ்வில் எத்தகைய நிகழ்ச்சிகள் நடந்தன என்பது எனக்குத்தான் தெரியும். நீ எப்படி அதையெல்லாம் அறிவாய்? அழலாடியின் மனத்தில் ஏன் இந்தச் சீற்றம் ஏற்பட்டது என்ற மனத் தத்துவம் எனக்குப் புரிகிறது. என்ருலும் அழலாடி இப்படி வெகுண்டது தவறு. உடன் பிறப்புக்களாக இருக்க வேண்டிய துணேவர்கள் நீங்கள். தெரிகிறதா? எங்கே இருவரும் இப்படி வாருங்கள்!''

நாகமல்லனும் அழலாடியும் ஆதனுருக்கு அருகிலே வந்தார்கள்.

''சமாதானம் செய்யாதீர்கள்! இந்த நிகழ்ச்சி இதோடு போகாது. என்னேத் தூக்கிக் கீழே அடித்து விடலாம் என்று மனப்பால் குடிக்கிருன் அழலாடி. பார்த்து விடுகிறேன் அந்தத் திமிரை!''

இப்படிச் சொல்லும் போதே நாகமல்லனுக்குக் கோபமும் அவமானமும் சேர்ந்து குரலிலே நலிவு கொடுத்தன.

''சரி, சரி. நாளேக்குப் பேசிக் கொள்வோம், அந்தக் கதையை யெல்லாம். இப்போது அவசரமாகச் செய்யவேண்டிய பெரிய வேலே இருக்கிறது. குழி அம்மியிலே ஒரு மருந்தை விரைவாக அறைக்க வேண்டும். அதை உங்கள் இருவரில் யார் செய்வார்கள். சொல்லுங்கள், பார்ப்போம்!'' என்று குரலிலே இளக்கம் கொடுத்தார் ஆதனுர்.

''இந்த இருவரும் சம்பந்தப்படாத வேலே என்ருல் எனக்குச் சொல்லுங்கள். செய்கிறேன். அரசகுமாரியும் அழலாடியும் எப்படியும் போகட்டும்; எனக்கு என்ன?''

''பார்த்தீர்களா? இன்னும் அந்தப் பேச்சையே எடுக்கிருன் நாகமல்லன்'' என்று சீறினுன் அழலாடி.

''தம்பி, அழலாடி, இளவரசியின் உடல் நிலே சற்றுக் கவலேக்கிடமாக இருக்கிறது. நீ உள்ளே நிலவறைக்கு வா. மற்றப் பேச்செல்லாம் பிறகு பேசிக் கொள்ளலாம்!''

இந்தச் சொற்களே ஆதனுர் சொல்லி முடித்தாரோ இல்லேயோ, எல்லேயற்ற கவலேயும் பதற்றமும் மேலிட்டவளுக நிலவறைக்குள்ளே வேகமாக ஓடிச் சென்ருன் அழலாடி. ஆதனுர் ஏதோ மருந்தை எடுத்துக் கொண்டு பின் தொடர்ந்தார்.


அழலாடியின் பதற்றத்தை நண்பர்களிடம் சுட்டிக் காட்டி ஏளனமாகச் சிரித்தான் நாகமல்லன்! (தொடரும்)

ஒரு குடும்பு வாங்கி மற்றொரு
குடத்துக்கே புகவிட்டு......



''பகலே அநந்தரம் அறியாநான் ஒரு பாலனேக் கொண்டு ஒரு குடும்பு வாங்கி மற்றொரு குடத்துக்கே புகவிட்டு அக்குடத்தில் ஓர் ஓலே வாங்கி மத்யஸ்தன் கையிலே கொடுப்பதாகவும். அக்குடத்து ஓலே மத்யஸ்தன் வாங்கும்போது ஐந்து விரலும் அகலவைத்து உள்ளங் கையிலே ஏற்றுக் கொள்வானுகவும். வாசித்த அவ்வோலே அம்மண்டகத்து இருந்த நம்பிமார் எல்லாரும் வாசிப்பாராகவும். வாசித்த அப்பேர் நீட்டுவதாகவும்.''

புரியவில்லேயா?. தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் அந்தக் காலத்திய தேர்தல் முறைகளேத் தெரிந்து கொள்ள வேண்டாமா? ஊர்ச் சபைகளுக்கு ''குடவோலே'' முறையில் பெருமக்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வரலாற்றை விளக்கும் உத்தரமேரூர் கல்வெட்டுதான் மேலே காணப்படுவது. இது ராஜாஜி ஹாலில் நடைபெற்ற கல்வெட்டுக் கண்காட்சியில் இடம் பெற்றிருந்தது. —குத்தாலம் வி. சம்பந்தன்



TVS

டி.வி.எஸ். பஸ் பாடிகளின் புதிய கவர்ச்சியான முன் தோற்றம்

டி.வி.எஸ். தேவைக்கு உகந்த பஸ் பாடிகளை எந்தவித சேஸிஸ் மீதும்—அசோக் லேலண்டு கோமெட், பெட்போர்டு, டாட்ஜ், பார்கோ டாடா மெர்சிடீஸ் பென்ஸ், வில்லிஸ் ஜீப், ஸ்டாண்டர்டு 20—தயாரிக்கிறார்கள். அவை மிகவும் உறுதியானவை—ஆனால் லேசானவை; எடை குறைவுள்ளவை. அதனால் எண்ணெய் செலவும், டயர் தேய்வும் குறைவு; சிக்கனமானது; கரடு முரடான சாலைகளைச் சமாளிக்கும். பிரயாணிகளுக்கு மிக்க வசதி.

ஒவ்வொரு நாளும் சராசரி மூன்று பஸ் பாடிகள் கட்டுகிறோம். தேவைக்கு உகந்த கம்போசிட் முழு ஸ்டீல் பாடி, சிறிய பஸ், உல்லாச பஸ், எக்ஸ்பிரஸ் வான், டெலிவரி வான், பிக்-அப் வான், அம்புலன்ஸ், மூடிய அல்லது திறந்த லாரி, ஸ்டீல் டிரைவர் காபின், டிப்பர் பாடி முதலியன தயாரிக்கிறோம்.

TVS

மற்ற விபரங்களுக்கு:

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை

(டி.வி.எஸ். ஸ்தாபனம்)

SI-3805A

அத்தியாயம் 27

குமரன் "மங்கா! இதோ பார்த்தாயா?" என்று தன் கையிலிருந்த நகைப்பெட்டியைத் திறந்து காட்டினன்.

"இதை ஏன் என்கிட்டே காட்டறீங்க?" என்று கேட்டாள் மங்கா அலட்சியமாக.

"உன் வள்ளியக்காவுக்கு நான் வரவழைத்திருக்கும் பரிசப் பொருள் இது. இன்றைக்கே இந்த அம்மாவையும் அழைத்துக் கொண்டு நானே நேரில் அவர்கள் வீட்டுக்குப் போய்ப் பரிசம் போட்டுப் பெண் கேட்பதா யிருக்கிறேன்" என்றான் குமரன்.

மங்கா கேலியாகச் சிரித்தாள்.

"சார்! நீங்க நேரம் பொறுத்து முழிச்சிருக்கீங்க. பரிசம் போட வேண்டிய நாள் தாண்டிப் போயிடுச்சு" என்றாள்.

"என்ன சொல்கிறாய், மங்கா?"

"வள்ளியக்காவை நீங்க மறந்திட வேண்டியதுதான்."

"மங்கா!"

"நேத்தே வள்ளியக்காவுக்குப் பரிசம் போட்டுப் பாக்கு வெத்திலே மாத்திக்கிட்டாயிடுச்சு."

"ஒரு நாளும் இருக்காது. ஒருநாளும் நடக்க முடியாது; நடக்கக் கூடாது."

"நடக்கக் கூடாததுதான் நடந்திடுச்சே!"

"வள்ளியின் சம்மதமில்லாமல் எதுவுமே நடக்க முடியாது."

"வள்ளியக்கா சம்மதிக்காமே இருந்தாத்தானே அந்தப் பேச்சு? அண்ணனைப் பார்த்து எது செய்தாலும் அதுக்குச் சம்மதம்தானும். அண்ணன் வார்த்தையைத் தட்டி எதுவுமே செய்யாதாம். இப்படியெல்லாம் சொன்னது மட்டுமில்லே. பாக்கு வெத்திலே மாத்தறதை நான் தடுக்கக் கூடாதுன்னு என்னைக் கன்னத்திலே அடிச்சு அங்கேயிருந்து போகச் சொல்லிடுச்சு சார்....ஆமாம் சார். நீங்க இனிமேல் வள்ளியக்காவை மனசாலே கூட நெனைக்க முடியாது. இந்த அட்

முதல் பரிசு
நாவல்



முள்ளும் மலரும்

உமாசந்திரன்

டிகைக்கு பேவறே எந்தப் பொண்ணு குடுத்து வச்சிருக்கோ அதன் கழுத்திலே போடுங்க'' என்று மிகுந்த துயரத்துடன் கூறினுள் மங்கா. கனகாவின் இதழ்களில் கேலிச் சிரிப்பு தோன்றியது.

''நான் முன்னமேயே நினேச்சேன். இந்த மாதிரிப் பெண்களிடம் பண்பு ஏது, உண்மை ஏது?'' என்ருள் அவள்.

''இல்லே.' இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது. வள்ளி ஒருநாளும் இதற்குச் சம்மதித்திருக்க மாட்டாள்'' என்று ஆவேசத்துடன் கூறிய குமரன் தனது மோட்டார் சைக்கிளே நோக்கி ஓடிச் சென்று கணநேரத்தில் அதை இயங்க வைத்து அங்கிருந்து காற்ருய்ப் பறந்து சென்ருன்.

ஐந்தே நிமிஷங்களில் அவன் வள்ளியின் வீட்டை அடைந்து விட்டான். மோட்டார் சைக்கிளே அந்த வீட்டு வாசலில் கொண்டு நிறுத்திய அதே சமயம் காளியண்ணன் வேலிக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தான்.



''எங்கே சார் வந்திங்க?''

''வள்ளியுடன் ஒரு வார்த்தை பேசணும்.''

''அதுங்கூட உங்களுக்கு என்ன பேச்சு? அது இன்னெருத்தனேட உடைமையாகப் போகுது. பரிசம் போட்டு அடுத்த மாதம் கலியாணத் தேதியும் நிச்சயம் செய்தாச்சு.''

''வள்ளியின் சம்மதத்துடன் அது ஒருநாளும் நடந்திருக்க முடியாது'' என்று கத்தினுன் குமரன்.

காளியண்ணன் ஏளனமாகச் சிரித்தான். ''அட அவ்வளவு நிச்சயமா உங்களுக்கு? வள்ளி சம்மதத்தோடதான் இது நடந்திருக்கா இல்லியான்னு தெரிஞ்சுக்கிடத்தான் வந்திருக்கீங்களா?''

''ஆமாம்! வள்ளியிடமிருந்து நேருக்கு நேர் கேட்டலொழிய நான் அதை நம்ப முடியாது.''

''ஏன் சார், என் பேச்சிலே அவ்வளவுகூட நம்பிக்கை இல்லையா? சரி, உங்க திருப்தியை நான் கெடுப்பானேன்? வள்ளியையே நேரிலே கேட்டுத் தெரிஞ்சுக்குங்க'' என்று கர்வம் நிறைந்த அமைதியுடன் கூறிய காளி, ''வள்ளி! வள்ளிக்குட்டி, இப்படிக் கொஞ்சம் வா கண்ணு'' என்று கனிவு நிரம்பிய குரலில் உரக்கக் கூப்பிட்டான்.

குமரன் ஆவலுடன் வீட்டுப் பக்கம் நோக்கினான். குமரனை நிமிர்ந்து பார்க்கக்கூடத் துணிவில்லாமல் தலைகுனிந்தவாறே வீட்டுக்குள்ளிருந்து வெளியே வந்த வள்ளி நிதானமான நடையுடன் வேலியருகே வந்து நின்றாள்.

''வள்ளிக்குட்டி! நேத்துப் பரிசம் போட்டுப் பாக்கு வெத்தலை மாத்திக்கிட்டோமே, உன் சம்மதமில்லாமலா அது நடந்திடுச்சு?'' என்று கேட்டான் காளி.

வள்ளி மெதுவாகத் தலைநிமிர்ந்து குமரனது முகத்தைப் பார்த்தாள். ஆவல் நிறைந்த விழிகளுடன் அவள் முகத்தைப் பார்த்தான் குமரன். சட்டென்று வள்ளி மீண்டும் தலையைத் தாழ்த்திக் கொண்டாள்.

''சொல்லு, வள்ளி! நீ சம்மதிச்சுத் தானே நடந்திச்சு?'' என்றான் காளி இடிபோன்ற குரலில்.

''ஆமாம்!'' — இலையுதிர் காலத்தில் மரத்திலிருந்து உதிரும் பழுத்த இலை போல் அந்த வார்த்தை அவள் வாயிலிருந்து உதிர்ந்தது.

''வள்ளி!'' என்று கத்தினான் குமரன்.

''என் சம்மதமில்லாமே எதுவும் நடக்கலே. நான் மனப்பூர்வமா அதுக்குச் சம்மதிச்சிட்டேன்'' — அமைதியான குரலில் வள்ளியின் வாயிலிருந்து கிளம்பி வந்த ஒவ்வொரு வார்த்தையும் குமரன் நெஞ்சில் சம்மட்டிபோல் தாக்கியது. திகைப்பின் எல்லையில் அவன் வாய் அடைத்துப் போய் நின்றான்.

அந்த இளைஞர்



இவரேதான்!

உழைப்பினால் எந்த உயர் பதவியையும் அடைய முடியும் என்பதை நிரூபித்துக் காட்டிய முப்பத்தாறுவது அமெரிக்க ஜனாதிபதியாகிய லிண்டன் ஜான்ஸனே அப்படத்தில் ரூஸ்வெல்டுக்கு அருகில் நின்று பேசிக்கொண்டிருப்பவர்.

அமெரிக்காவில் டெக்ஸாஸ் மாநிலத்தில் ஸ்டோன்வால் என்னும் இடத்தில் 1908ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 27ந் தேதி எளிமையான பண்ணை வீடு ஒன்றில் பிறந்தார் ஜான்சன். ஏழைமை நிலையில் அவர் குடும்பம் இருந்ததால் டெக்ஸாஸ் முடிவெட்டும் கடையில் பூட்ஸ்களுக்கு 'பாலிஷ்' போடும் வேலையில் ஈடுபட்டார். உயர்நிலைப் பள்ளிப் படிப்பு முடிந்ததும் அவர் சாலைகள் அமைக்கும் பணியாளராக வேலை செய்தார். வாழ்க்கையில் உயர வேண்டும் என்ற அடக்க முடியாத ஆவல் காரணமாக — படிப்பைத் தொடரத் தேவையான பண வசதிக்காக அவர் எந்த வேலையையும் மேற்கொள்ளத் தயங்கவில்லை. கல்லூரியில் படிக்கும்போதே கல்லூரி வாயில் காப்போனாகவும் வேலை பார்த்து வந்தார். 1931ம் ஆண்டில் பி. எஸ்ஸி. விஞ்ஞானப் பாடத்தில் தேர்ந்த ஜான்ஸன் டெக்ஸாஸ் சட்டமன்றப் பிரதிநிதி ஒருவரின் காரியதரிசியாகச் செயல் புரிந்தார். இந்தச் சமயத்தில்தான் இவருக்கும் கிளாடியா ஆல்ட்டா டேலர் என்னும் பெண்மணிக்கும் காதல் ஏற்பட்டுக் கல்யாணத்தில் முடிந்தது. 1935ம் ஆண்டில் தேசிய இளைஞர் நிலையத்தின் டெக்ஸாஸ் மாநில நிர்வாகியாக ஜனாதிபதி ரூஸ்வெல்ட் ஜான்ஸனை நியமித்தார். இரண்டாவது உலகப் போரில் ஜான்ஸன் கலந்துகொண்டு வீரத்துக்குப் பரிசாக வெள்ளி நட்சத்திரப் பரிசைப் பெற்றிருக்கிறார். ஜான்சனுக்கு இரு பெண் குழந்தைகள் இருக்கிறார்கள். மூத்த மகள் லிண்டாவுக்குச் சமீபத்தில் திருமணம் நடந்தது. டெக்ஸாஸ் பல்கலைக் கழகத்தில் படித்து, பத்திரிகைத் தொழில் பட்டமும் பெற்ற ஸ்ரீமதி ஜான்ஸன் தமது கணவரின் பொழுதுபோக்குக்களான வேட்டையாடுவதிலும் மீன் பிடிப்பதிலும் தாமும் ஆர்வம் காட்டி ஈடுபாடு கொண்டிருக்கிறார். இந்த மனமொத்த தம்பதிகளின் வாழ்க்கை உலகத்தின் கவனத்தையே கவர்ந்திருப்பதில் ஆச்சரியமென்ன?

காளியண்ணன் கடகடவென்று பலமாகச் சிரித்தான்.

''இப்போ நீங்க போகலாம், சார். ஏன் இதெல்லாம் வந்து தலையிட நீங்கன்னு ஒரு வார்த்தைகூட நான் உங்களைக் கேக்கப் போறதில்லே'' என்று கூறியவாறே அலட்சியமாக அங்கிருந்து நடந்தான்.

செய்வதறியாது சில விநாடிகள் அங்கேயே திகைத்து நின்றான் குமரன். பின்பு கனத்த நெஞ்சத்துடன் அங்கிருந்து வேகமாகப் புறப்பட்டுச் சென்றான்.

இரட்டைக் கிளைப் பாக்கு மரத் திருப்பத்தருகே மங்கா எதிர்த் திசையிலிருந்து நடந்து வந்து கொண்டிருந்தாள். மோட்டார் சைக்கிளை அவளருகே கொண்டு நிறுத்திய குமரன். ''மங்கா! எனக்காக நீ ஓர் உதவி செய்ய வேண்டும்'' என்றான் தீனமாக.

''என்ன சார்?''

''இது வள்ளிக்காகவே வரவழைத்தது. அவளுடைய திருமணப் பரிசாக இதை அவளிடம் சேர்த்துவிட வேண்டும்'' என்று கூறியவாறே தன் கையிலிருந்த நகைப் பெட்டியை அவளிடம் கொடுத்தான் குமரன். அவனது நெஞ்சுச் சுமை மேலும் கனத்துத் தோன்றியது.

''என்னமோ சார், ஏன்தான் இப்படியெல்லாம் நடக்குதோ, எனக்கே ஒண்ணும் புரியலே'' என்று அங்கலாய்த்தவாறு அதைத் தன் கையில் வாங்கிக் கொண்ட மங்கா மறு பேச்சில்லாமல் அங்கிருந்து நடக்க ஆரம்பித்தாள்.

ஏதோ ஆவேசம் கொண்டவன் போல் மோட்டார் சைக்கிளின் வேகத்தை அதிகரிக்கச் செய்து வீட்டை நோக்கி விரைந்தான் குமரன்.

வீட்டு வாசலில் வீரமணியின் கார் நின்றுகொண்டிருந்ததைப் பார்த்த போது அவனுக்கு ஓரே வியப்பாகப் போயிற்று. வாகனத்திலிருந்து இறங்கி வேகமாக உள்ளே சென்றான்.

கூடத்தில் வீரமணி, கனகா, சபேசன் மூவரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர். குமரனைக் கண்டதும் வீரமணி எழுந்து அவன் அருகே விரைந்து வந்தான்.

''முன்னறிவிப்பில்லாமல் எப்படி வந்தேன் என்று பார்க்கிறாயா? கடிதத்தில் எழுதுவதை விட நேரில் வந்து சொல்வதுதான் சரியென்று எனக்குத் தோன்றியது. புறப்படுவதற்கு முன்னால் உங்களிடமெல்லாம் விடைபெற்றுக் கொண்டு போக வேண்டாமா?'' என்றான்.

''என்ன புதிர் போடுகிறாய் வீரமணி?'' என்றான் குமரன் வியப்புடன்.

''குமரண்ணா! நமக்கெல்லாம் சொல்லாமலே அண்ணா ராணுவத்தில் சேர்ந்திருக்கிறார். ஒரு வாரத்துக்குள் பயிற்சி முகாமுக்குப் புறப்பட்டுச் செல்லப் போகிறாராம்'' என்றாள் கனகா கலக்கம் தோய்ந்த குரலில்.

''கனகா! இதற்காக நீ ஏன் வருத்தப்படவேண்டும்? எனக்கிருந்த ஒரே பொறுப்பையும் நான் நிறைவேற்றியாயிற்று. சுதந்திரப் பறவையாகி விட்ட பிறகு நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாக்க நான் சிறிதாவது பாடுபட வேண்டாமா? அனுமனாக முடியாவிட்டாலும் அணிலாகவாவது ஆக முயற்சி செய்வதில் தவறென்ன?'' என்றான் வீரமணி.

அவனது உவகை நிறைந்த முகத்தையே அசையாமல் பார்த்தவாறு அவன் கூறுவதைக் கேட்டுக் கொண்டிருந்த குமரன் சட்டென்று அவனது கரத்தைப் பற்றிக் குலுக்கினான்.

''வீரமணி, நீ என் வழிகாட்டி'' என்றான் தழுதழுக்கும் குரலில்.

''என்ன சொல்கிறாய் குமரன்?''

''உன் உதாரணத்தை நானும் பின்பற்றப் போகிறேன். இனி குமரன் திட்டப் பகுதி எஞ்சினீயரல்ல; ராணுவ எஞ்சினீயர்''

''குமரன்!''

''இப்போதைக்குச் சில நாட்களுக்கு விடுமுறை எடுத்துக் கொண்டு நானும் உங்களுடனேயே சென்னைக்குப் புறப்படப் போகிறேன். சென்னையிலிருந்தே இந்த வேலைக்கு விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுத்து விட்டு ராணுவ சேவைக்கு என்னை அர்ப்பணித்துக் கொள்ளப் போகிறேன்'' என்றான் குமரன்.

''இதென்ன திடீர்த் தீர்மானம் குமரன்?'' என்று கூவினான் சபேசன்.

''திடீர்த் தீர்மானங்களில் தான் வாழ்க்கையின் சுவையே இருக்கிறது'' என்றான் குமரன் சுருக்கமாக.

ஃ ஃ ஃ

கடந்த சில நாட்களாகவே வெள்ளாத்தாளின் மனத்தில் ஒரு விஷயம் உறுத்திக் கொண்டே யிருந்தது. சாதாரணமாக மங்கா காலையில் தானாகவே படுக்கையை விட்டு எழுந்திருந்தாள் என்ற பேச்சே கிடையாது. எட்டு மணிக்கு வேலைக்குப் புறப்

பட்டாக வேண்டும் என்ற உணர்வு கூட இல்லாமல் நிச்சிந்தையாகக் குறட்டை விட்டுக் கொண்டிருப்பாள். எழு மணியிலிருந்தே நாலைந்து தரம் அவளை உருட்டிப் புரட்டி அடித்துக் கிள்ளி எழுப்பினால்தான் அவள் சிறிதாவது உணர்வு வந்து சோம்பல் முறித்துக் கொண்டு சிணுங்கியவாறே எழுந்திருப்பாள். அப்படிப்பட்ட மங்கா இப்பொழுதெல்லாம் பலபலவென்று விடிவதற்கு முன்னால் இருட்டோடேயே எழுந்து விடுகிறாளே! எழுந்த சுருக்கோடு அருவிக் கரைக்குப் போய் அரை மணி நேரம் கழித்துத்தான் திரும்பி வருகிறாள். குளித்துவிட்டு வருகிறாளா என்றால் அதுவும் இல்லை. அவ்வளவு அதிகாலையில் அருவிக்கரையில் அவளுக்கு அப்படியென்ன வேலை இருக்கமுடியும்?



பெண்: புது டிசைனில் 'தாரணி' என்று புடவை வந்திருக்காமே?

கடைக்காரர்: 'ரோகிணி', 'தாரணி' யெல்லாம் பழசுங்க. 'லேட்டஸ்டா' 'கூட்டணி'ன்னு புது டிசைனில் புடவைகள் வந்திருக்கு. வாங்கிட்டுப் போங்க!''

''ஏன் மங்கா! ஒரு நாளைப் போல் அவ்வளவு சீக்கிரம் எழுந்திடறியே.... திடீர்னு உனக்கு எப்படி இவ்வளவு கரிசனம் வந்திச்சு?'' என்று கேட்டாள் வெள்ளாத்தாள், ஒரு நாள் மங்கா வேலைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த சமயத்தில்.

''எனக்குக் கரிசனமே கிடையாதுன்னுதானே இத்தனை நாட்களும் நெனைச்சுக்கிட்டிருந்தே. இப்பவாவது தெரிஞ்சுக்க'' என்று சிரித்து மழுப்பி விட்டுப் போய் விட்டாள் மங்கா.

ஏதோ ஒரு விஷயத்தைத் தன்னிடமிருந்து அவள் மறைத்து வைக்கிறாள் என்ற வரைக்கும் வெள்ளாத்தாளுக்குப் புரிந்தது. ஆத்தாளிடமே அவ்வளவு ஒளிவு மறைவு என்ன வேண்டியிருக்கிறது என்ற கோபத்தோடு அதை எப்படியாவது கண்டுபிடித்து விட வேண்டும் என்ற பிடிவாதமும் சேர்ந்து கொண்டது.

'' இருக்கட்டும், இருக்கட்டும்! நாளைக்கே அந்தக் குட்டை உடைக்காமல் விடப் போவதில்லை'' என்று ஆத்திரத்துடன் கறுவிக் கொண்டாள்.

மறு நாள் மலைக் காடுகளில் முதல் குயில் கூவத் தொடங்கியபோதே வெள்ளாத்தாள் கண் விழித்துவிட்டாள். மங்கா இன்னும் உறங்கிக்கொண்டுதான் இருந்தாள். தூங்குவது போல் கண்களை மூடிய நிலையிலேயே நல்ல விழிப்புடன் படுத்திருந்தாள் வெள்ளாத்தாள்.

மலைக் காடுகளில் பலவிதமான பறவையொலிகள் கலந்தொலிக்க ஆரம்பித்தன. விரைவிலேயே வானதேவனின் பவனி ஆரம்பமாகப் போகிறதென்ற குதூகலத்தில் பறவையினங்கள் எழுப்பிய ஆரவாரம் திசையெங்கும் நிரம்பியது. மங்கா சட்டென்று கண் விழித்துச் சுற்றுமுற்றும் பார்த்தாள். அதிக நேரம் உறங்கி விட்டோம் என்று அவள் பரபரப்படைந்தது போல் தோன்றியது. வெள்ளாத்தாள் அசையாது படுத்திருந்தாள். மங்கா அவள் அருகே குனிந்து அவள் இன்னும் உறக்கத்தில்தான் இருக்கிறாள் என்பதை நன்கு ஊர்ஜிதம் செய்து கொண்ட பிறகு ஓசைப்படாமல் வெளியே நடக்க ஆரம்பித்தாள்.

அவள் வெளியே சென்ற சில கணங்களுக்கெல்லாம் வெள்ளாத்தாள் சட்டென்று எழுந்து சத்தம் செய்யாமல் குடிசையின் கதவு வரை சென்று எட்டிப் பார்த்தாள். வெளியே இருந்த மஞ்சு மூட்டத்தில் அருவிக் கரையை நோக்கிச் சென்று கொண்டிருந்த மங்காவின் நிழலுருவம் அவளுக்குத் தெரிந்தது. அடிமேல் அடி வைத்து, அவள் தன் பார்வைக்குத் தப்பி விடாமல் பார்த்தவாறு, அவளைத் தொடர்ந்து நடக்க ஆரம்பித்தாள்.

மங்கா அதிக தூரம் செல்லவில்லை. அருவிக்கரையிலிருந்து மேம்பாறைக் கசத்தை நோக்கிச் செல்லும் ஒற்றையடித் தடமொன்று இருந்தது. இரு புறமும் குத்துச் செடிகளும், கோரைப் புதர்களும் அடர்ந்த அந்தத் தடத்தின் வழியே மங்கா நடக்க ஆரம்பித்த போது வெள்ளாத்தாளுக்குத் திக்கென்றது.


''அடிப்பாவி, புதருக்குள்ளேயிருந்து துஷ்டப் பிராணி ஏதாச்சும் மேலே விழுந்து புடுங்கிடப் போகுதுடீ'' என்று



திருமதி லக்ஷ்மி அம்மாள்

தோற்றம் : 5-4-1912　　　மறைவு : 11-1-1967

● திருமதி லக்ஷ்மி அம்மாள் ஜனவரி 11ந்தேதி இவ்வுலகை விட்டு இறைவனடி சேர்ந்தார். அவரது கணவர் திரு எம். மகாலிங்கம் (சென்னை, முதன் மந்திரியின் ஓய்வுபெற்ற காரியதரிசி) அவர்களும், எம். ராமன், எம். முத்துசாமி, எம். சுவாமிநாதன் ஆகியோரும் அவரது பிரிவால் மிகவும் வருந்துகிறார்கள்.



பிரபாத் - கிருஷ்ணவேணி - சரஸ்வதி - தங்கம்

மற்றும் தென்னாடெங்கும்





உமையாள் புரொடக்ஷன்ஸ்

கலைஞர் மு.கருணாநிதியின்

தங்கத் தம்பி

S.P.கருப்பையா
P.அங்கமுத்து
R.பெரியநாயகம்

டைரக்ஷன்: ராம்நாத் பிரான்ஸிஸ்

வாலி அவினாசிமணி K.V.மஹாதேவன் T.M.சுந்தரபாபு P.அங்கமுத்து R.சுந்தரராஜன் சந்தாமியன்

ELEGANT

தேர்தல் குறள் குரல் !

"ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம்
தேர்தலில் நின்றார் திரு"

"(தேர்தல்) டிக்கெட் கொடுக்காதாரை ஒறுத்தல்
அவர் நாண இராஜிநாமா செய்துவிடல்"

அனுப்பியவர் : கி. சம்பத்குமார்

கத்திவிடத் துடித்தாள். மிகவும் கஷ்டத்துடன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு புதரில் சலசலப்புச் செய்யாமல் பையப் பையப் பதுங்கியவாறு அவளைப் பின்தொடர்ந்தாள்.

கோரைப் புற்கள் நெருங்கி வளர்ந்திருந்த ஒரு புதருக்கருகே மங்கா நின்று விட்டாள். வெள்ளாத்தாள் வேறொரு புதரில் மறைந்து நின்று அவள் என்ன செய்கிறாள் என்று கவனிக்க ஆரம்பித்தாள்.

மஞ்சுமூட்டம் பெரும்பாலும் கலைந்து விட்டிருந்தது. பலபலவென்று விடிய ஆரம்பித்திருந்தது. மங்காவின் ஒவ்வொரு நடவடிக்கையையும் வெள்ளாத்தாள் மறைந்திருந்த இடத்திலிருந்து நன்றாகக் கண்காணிக்க முடிந்தது.

புதரை விலக்கிய மங்கா முதலில் மூச்சைப் பிடித்துக் கொண்டு ஒரு பளுவான கல்லைத் தூக்கி அப்பால் வைத்தாள். பின்பு அந்தக் கல்லுக்கடியேயிருந்த ஒரு பாறைப் பொந்தில் கையை விட்டு மிகவும் ஜாக்கிரதையாக எதையோ கையில் எடுத்துப் பார்க்க ஆரம்பித்தாள். அந்தச் சமயத்தில் அவள் சற்றுத் திரும்பி நின்று கொண்டிருந்ததால் அவளது முதுகுப்புறமே வெள்ளாத்தாளுக்குத் தெரிந்தது. அவள் கையில் இருந்தது என்னவென்று அவளுக்குப் புலப்படவில்லை. இருந்தாலும் அது என்னவாயிருக்கும் என்று ஊகிப்பது அவளுக்குக் கஷ்டமா என்ன? பாவி மகள், ஆத்தாளுக்குத் தெரியாமல் பணத்தைப் பதுக்கி வைக்கத்தான் அந்த இடத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறாள்! பதுக்கி வைத்த பணம் பத்திரமாயிருக்கிறதா என்று பார்க்கத்தான் ஒரு நாளைப் போல் அவ்வளவு அதிகாலையில் எழுந்து வந்து விடுகிறாள்! இவ்வளவு சூதுவாது மனத்தில் இருக்கும்போது தூக்கம் எப்படிப் பிடிக்கும் ஒரு பெண்ணுக்கு? இதையா வெகுளிப் பெண் என்று நினைத்து இத்தனை நாட்களும் ஏமாந்து கொண்டிருந்தோம்! அந்த எண்ணமே வெள்ளாத்தாளின் மனத்தில் ஆங்காரம் அனல் பறக்கச் செய்தது.

தான் பதுக்கி வைத்த பொருள் பத்திரமாயிருக்கிறதென்ற திருப்தியுடன் மங்கா அதை மீண்டும் மறைவிடத்தில் வைக்கப்போன சமயம்—

''ஏ, மங்கா! திருட்டுக் கழுதை! என்ன இதெல்லாம்'' என்று கத்திக் கொண்டே புதர் மறைவிலிருந்து முன்னே பாய்ந்த வெள்ளாத்தாள் ஒரே எட்டில் அவளருகே வந்து நின்றாள்.

எதிர்பாராத இந்தத் தாக்குதல் கண நேரத்துக்கு மங்காவை அதிர்ந்து நிற்கச் செய்தது.

'' ஆத்தா...! நீ எதுக்கு இங்கே வந்தே?'' என்று கத்திக் கொண்டே தன் கையில் இருப்பது ஆத்தாளுக்குத் தெரிந்து விடாமல் திரும்பி நின்று கொண்டாள்.

''எதுக்கு வந்தேனா?.... ஏண்டி. நீயா நாலு காசு சம்பாரிக்க ஆரம்பிச்ச உடனே பணத்தாசை பிடிச்சுடுச்சா? உனக்காக இத்தனை நாளும் உடம்பை ஓடாக்கி உழைச்சிருக்கேனே அவ்வளவும் மறந்திடுச்சா உனக்கு? ஆத்தாகிட்டே பொய் சொல்லிப் பணத்தைப் பதுக்கி வைக்கிறதும், அது பத்திரமா யிருக்கான்னு பதுங்கிப் பதுங்கி வந்து பார்க்கறதும், சீ... இவ்வளவு திருட்டுப் புத்தி உனக்கு எங்கேயிருந்துடி வந்துச்சு? ' என்று வெள்ளாத்தாள் ஆத்திரத்துடன் கத்தினாள்.

''ஆத்தா, வாயை மூடு! தப்பும் தவறுமா என்னமோ நெனைச்சுக்கிட்டு ஏன் வீணுக் கூச்சல் போடறே? இது வரைக்கும் வாரா வாரம் எனக்குக் கிடைச்ச கூலியிலே ஒரு செப்புக் காசு கூட உனக்குத் தெரியாமல் நான் எனக்குன்னு எடுத்துக்கிட்டது கிடையாது உன் தலை மேலே ஆணை!''

''ஆணையா வைக்கறே? ஆத்தா தலே வெடிச்சா உனக்கென்ன வந்தது? நிம்மதியா யிருப்பே. பதுக்கி வைக்க வேண்டியதுமில்லே; பதுங்கிப் பதுங்கி வந்து பார்க்க வேண்டியதுமில்லே.''

''ஆத்தா! வீணைப் பழி வைக்காதே. நான் பணத்தைப் பதுக்கி வைக்க லேன்னு சத்தியமாச் சொல்லியாச்சு. நீ அதை நம்பினாலும் சரி, நம்பாவிட்டாலும் சரி.''

''ஓகோ.. அவ்வளவு லேசா விட்டுடு வேன்னு நெனேச்சயா? உன் கையிலே என்ன மறைச்சு வச்சிருக்கே? அதை நான் பார்த்தாகணும்'' என்று ஓரடி முன்னே பாய்ந்த வெள்ளாத்தாள் அவள் கையைப் பற்ற முயன்ருள்.

''ஆத்தா! அதை நீ பார்க்க வேண்டியதில்லே'' என்று பதறியவாறு சற்றுப் பின்னுக்கு நகர்ந்தாள் மங்கா.

''பார்க்காமே விடப் போறதில்லே. உனக்காச்சு, எனக்காச்சு'' என்று வெள்ளாத்தாள் ஆவேசத்துடன் அவள் மேல் பாய்ந்த வேகத்தில் மங்காவின் கையிலிருந்த நகைப் பெட்டி நழுவிக் கீழே விழுந்தது. விழுந்த அதிர்ச்சியில் திறந்து கொண்ட அந்த நகைப் பெட்டிக்குள்ளே இருந்த பச்சைக் கற்களும் சிவப்புக் கற்களும் பதித்த கழுத்தாரம் கதிரவனின் முதற் கிரணங்கள் பட்டு மின்னியது.

''அடி பாவிப் பொண்ணே! இதை எங்கேயிருந்து திருடிக்கிட்டு வந்தே?''

''ஆத்தா, உன் மகளுக்குத் திருட்டுப் பட்டம் கட்டறதிலே உனக்கு ஏன் இவ்வளவு சந்தோஷம்? ஆனு நான் இதை எங்கே யிருந்தும் திருடிக்கிட்டு வரலே. வள்ளியக்கா கல்யாணத்திலே வெகுமதியா குடுக்கச் சொல்லிக் குமரய்யா எங்கிட்டே இதைக் குடுத்திட்டுப் போயிருக்கு. வீட்டிலே வச்சா போயிடப் போகுதேன்னுதான் இங்கே பதுக்கி வச்சேன். இது பத்திரமா இருக்கணுமே, பத்திரமா இருக்கணுமேன்னு இத்தனே நாட்களும் வவுத்திலே நெருப்பைக் கட்டிக்கிட்டு நான் பட்ட பாடு எனக்கில்லே தெரியும். இப்ப நீ இதுக்குச் சத்துருவா வந்து முளேச்சிருக்கே!'' என்று வெறுப்புடன் கூறிக் கொண்டே கீழே விழுந்து கிடந்த நகைப் பெட்டியைச் சரியாக மூடிக் கையில் எடுத்துக் கொண்டாள்.

வெள்ளாத்தாள் மனம் வெதும்பி நின்ருள். அவள் கண்களில் கரகர வென்று நீர் சுரந்தது.

''வள்ளிக்குக் குமரய்யா குடுத்திட்டுப் போன வெகுமதியா இது? அடி என மங்காப் பெண்ணு, என்னென்னமோ சொல்லி உன் மனசை நோகப் பண்ணிட்டேனே'' என்று தழுதழுப்புடன் கூறிக்கொண்டே பரிவுடன் அவளே அணைத்துக் கொண்டாள்.

''ஆமாம்! எனக்கு மனசுன்னு ஒண்ணு இருக்குன்னு நீ என்னிக்குத் தான் நெனேச்சிருக்கே'' என்று சலிப்புடன் கூறியவாறே அவளது கையை விலக்கி விட்ட மங்கா, ''ஆத்தா! இனிமே நான் இதை வச்சிருக்க லாயக்கில்லே'' என்ருள்.

''அப்படின்னு?''

''கலியாண நாள் வரையிலே நான் காத்திருக்கப் போறதில்லே. இன்னிக்கே வள்ளியக்காகிட்டே இதைக் குடுத்திட்டு வந்திடப் போறேன்''

''இன்னிக்கேயா?''

''இன்னிக்கே இல்லே! இப்பவே'' என்று கூறியபடியே மங்கா வேகமாக அங்கிருந்து நடந்தாள்.

''மங்கா! ஒரு பேச்சுக் கேட்டுட்டுப் போ'' என்று வெள்ளாத்தாள் அழைத்ததற்கு அவள் செவி சாய்க்கவேயில்லே.

அப்போதுதான் ஆட்டுப் பாலேக் கறந்தெடுத்துக் கொண்டு உள்ளே போகத் திரும்பிய வள்ளி மங்கா வருவதைப் பார்த்து விட்டு வியப்புடன் நின்ருள். அவ்வளவு அதிகாலேயில் மங்காவை அவள் எதிர்பார்க்கவில்லே.

''என்ன மங்கா?''

''போ, வள்ளியக்கா, உன்னலே எனக்குப் பெரிய தொல்லேயாப் போச்சு'' என்ருள் மங்கா எடுத்த எடுப்பிலேயே.

''ஏன் மங்கா அப்படிச் சொல்லறே? நான் எப்பவாவது உனக்குத் தொல்லே குடுத்ததுண்டா?''

''நீ குடுத்தாத்தானு? உன் பேரைச் சொல்லி அந்தக் குமரய்யா குடுத்திட்டுப் போன தொல்லேயைத்தான் சொல்றேன். இதோ பாரு'' என்று தன் கையிலிருந்த நகைப் பெட்டியை வள்ளிக்குக் காட்டினுள் மங்கா.

''என்ன இது?''


''உன் கலியாணத்துலே இதை வெகுமதியாக் குடுக்கச் சொல்லிக் குமரய்யா இதை எங்கிட்டே ஒப்படைச்சிட்டுப் போயிருக்கு. இனிமேலும் இதைக் கட்டிக் காக்க என்னலே முடியாது. நீயே வச்சுக்க'' என்று கூறிய மங்கா அதை வள்ளியின் கையில் திணித்தாள்.

வள்ளி அதிர்ந்து போய் நின்ருள்.

(தொடரும்)




சென்னை
வெலிங்டன் · பிராட்வே · ராக்ஸி · லிபர்டி
மற்றும் தென்னுடைங்கும்
தேவர் பிலிம்ஸ்
தாய்க்குத் தலைமகன்
கதை, தயாரிப்பு
சாண்டோ M.M.A. சின்னப்பாதேவர்
டைரக்ஷன்
M.A. திருமுகம்
ELEGANT




● சென்னை ராஜ்ய நாட்டிய நாடக சங்கத்தின் ஆதரவில் பொங்கலையொட்டி நடந்த கிராமக் கலை விழாவில் இரு காட்சிகள்.




● தியாகராயநகரிலுள்ள டாக்டர் பி. ஆர். கிருஷ்ணமூர்த்தியின் புதல்வி, குமாரி ஸுதாவின் பரத நாட்டிய அரங்கேற்றம் கிருஷ்ணகான சபை மேடையில் ஜனவரி 22ம் தேதி சிறப்பாக நடைபெற்றது. தலைமை வகித்த ஸ்ரீமதி ருக்மிணிதேவி சிறுமியை ஆசீர்வதித்துப் பேசினார்.




● சமீபத்தில் சென்னை பாரதி சங்கத்தின் ஆதரவில் தேச பக்தர் சுப்பிரமணிய சிவாவின் திருவுருவப் படத்தைத் திரு ம. பொ. சி. திறந்து வைத்தார்.



● நக்கீரர் கழகத்தின் 26ம் ஆண்டு தமிழ் விழா அண்மையில் சென்னை 'பாலர் அரங்கில்' சிறப்புற நிகழ்ந்தது. அன்று 'அறிவியல் தமிழ்' என்னும் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. அறிவியலின்பல துறைகளிலே பேராசிரியர்களாக விளங்கும் ஒன்பதின்மர் கருத்தரங்கிலே பங்கு கொண்டு - அறிவியல் கருத்துக்களைத் தமிழ் மொழி வாயிலாகக் கற்பிப்பது பற்றியும், ஆராய்ச்சிகள் நடத்துவது பற்றியும், கலைச் சொல்லாக்கம் பற்றியும் நல்ல கருத்துக்களைச் சிந்தனைக்கு விருந்தாகத் தந்தார்கள். தமிழ்மொழி வளர்ச்சிக்கு நக்கீரர் கழகம் ஆற்றிய இந்த அரிய தொண்டு அறிஞர்களின் பாராட்டுக்குள்ளாயிற்று. படத்தில் நீதிபதி பா. சே. கைலாசம் தமிழ் விழாவினைத் தொடக்கி வைத்து உரையாற்றுகிறார். அருகில் அமர்ந்திருப்பவர் விழாத் தலைவர் டாக்டர் இராசமாணிக்கனார்.



தம் வாழ்நாளில் ஆறே ஆறு முறை



குளித்த பிரபல எழுத்தாளர் யார்?



1. "பாரதியார் எவ்வளவு அருமையான ஆங்கிலத்தில் ஓர் அதிசயமான கட்டுக் கதை எழுதியிருக்கிறார். அதை அவரே படித்துக் காட்டும் போது நீங்கள் கவனிக்காமலும், கேட்காமலும் ஏதோ பேசிக் கொண்டிருக்கிறீர்களே!"

   இப்படி வியந்து பாராட்டியவர் யார்? பாராட்டப்பட்ட கதை எது?

2. பாரதத்தில் இன்று மிருகக் காட்சி சாலைகளில் அடைபட்டுக் கிடப்பவை தவிர, சுதந்திரமாக வாழும் காண்டாமிருகங்கள் மொத்தம் எத்தனை என உத்தேசமாக ஊகிக்க முடியுமா?

3. பதினெட்டாம் நூற்றாண்டில் இங்கிலாந்தின் வாழ்ந்த இலக்கிய வட்டாரப் பிரமுகர்; தம் வாழ்நாளில் இவர் குளித்தது மொத்தம் ஆறு தடவைதான்! யார் இவர் தெரிகிறதா?

4. பூமியைப் போல் சூரியன் எத்தனை மடங்கு கனமானது?

5. பிறந்து ஒரு சில மணி நேரமே ஆன சிசு, இருபத்து நான்கு மணி நேரத்தில் எத்தனை மணி நேரம் தூங்கும்?
   18....? 20....? 22....?

6. பிரிட்டனில் ஐஸ்கிரீம் விற்பவர்களில் அநேகம் பேர் வேறொரு ஐரோப்பிய நாட்டைச் சேர்ந்தவர்கள்! எந்த நாடு அது என உங்களால் ஊகிக்க முடிகிறதா?

7. இருபது ஆண்டு காலம் இந்திய ரயில்வேயில் பணியாற்றியவர்; இரு உலக யுத்தங்களிலும் சேவை செய்ததுமுண்டு. பிராணிகளின் நண்பன். "எனது இந்தியா" என்னும் ஆங்கில நூலின் ஆசிரியர். ஏறக்குறைய பன்னிரண்டு ஆண்டுகளுக்குமுன் கினியாவில் காலமானவர். இவரைத் தெரிகிறதா?

8. முஸ்லிம்களுக்கு குர்-ஆன், கிறிஸ்தவர்களுக்கு பைபிள் போன்று, யூதர்களின் வேத புத்தகத்தின் பெயர் என்ன?

9. ஆங்கிலத்தில் எழுதப்பட்ட 'அதிசயபுரியில் அலிஸ்' என்ற பிரசித்தமான குழந்தைகள் இலக்கியத்தின் ஆசிரியர் ஒரு கணக்கு வாத்தியார் என்பது சரியா?

மேலே கொடுக்கப்பட்ட கேள்விகளில் சிலவற்றுக்கோ அல்லது பலவற்றுக்கோ விடை தெரியவில்லையானால் கவலைப்பட வேண்டாம்; தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் மட்டும் இருந்தால் போதும்!


— பரணி

(விடைகள் 72ம் பக்கம் பார்க்க)

'வில்ச'னைக் கைது செய்!

சமீபத்தில் இங்கிலாந்தின் பிரதமர் திரு ஹெரால்டு வில்சனைக் கைது செய்ய ஒரு நபர் அவர் வீட்டுக்குச் சென்றாராம். எனினும் அவர் வீட்டில் இல்லாததால் அவர் முயற்சி கைகூடவில்லை.

பிரதமரையாவது கைது செய்வதாவது? என்று நீங்கள் ஆச்சரியப்படலாம். ஆனால் பிரிட்டனிலுள்ள சட்டப்படி எந்த ஒரு பிரிட்டிஷ் பிரஜையும் மற்றொருவர் குற்றவாளி என்று சந்தேகமின்றி நிரூபிக்க முடியுமானால் அவரைக் கைது செய்யலாம். போலீசார்தான் கைது செய்யவேண்டுமென்பதில்லை. ஆனால் அப்படிக் கைது செய்தவர் கோர்ட்டில் தக்க ஆதாரங்களுடன் அதை நிரூபிக்காவிட்டால் அதற்குரிய தண்டனையை அனுபவிக்க நேரிடும். பிரதமர் வில்சனின் ரொடீஷியக் கொள்கை பிடிக்காததால் காலின் ஜோர்டான் என்பவர் அதைக் காரணம் காட்டி அவரைக் கைது செய்ய முயன்றார். ஆனால் அவர் திட்டம் கைகூடவில்லை.



ஆதாரம்: இந்தியன் எக்ஸ்பிரஸ்

தகவல்: "எறும்பு"

பொருத்தமான டிரேட் மார்க்குகள்



'சாட்டை' மார்க் சலவை சோப்

(நன்றாக வெளுக்கும்)



'அம்பு' மார்க் தையல் மிஷின்

(நன்றாகத் தைக்கும்)



'பேபி' பிராண்டு அலாரம் டயம்-பீஸ்

(நன்றாக அலறும்!)



'மூட்டைப்பூச்சி' மார்க் பிளாட்டிங் பேப்பர்

(நன்றாக உறிஞ்சும்!)



'நல்ல பாம்பு' மார்க் கேமரா

(நன்றாகப் படமெடுக்கும்!)



'சர்வர்' பிராண்டு ஆயின்ட்மெண்ட்

(நன்றாக ஆற்றும்!)



'பதவி' மார்க் பிசின் (கோந்து)

(நன்றாக ஒட்டிக் கொள்ளும்)


கண்டுபிடித்தவர்: பி. கலைசாமி

பயிரை மேய்ந்த வேலி!

உணவுக் கட்டுப்பாடுகளின் விளைவால் ஏற்பட்டுள்ள பரிதாப நிலைமையைப் பாருங்கள்: 'கறுப்பு மார்க்கட்'டைத் தடுக்க வேண்டிய போலீஸே உணவு தானியங்களைக் கறுப்புச் சந்தைக்காரர்களிடமும், கடத்தல்காரர்களிடமும் விலைக்கு வாங்குகிறதாம்.

அலிப்பூரைச் சேர்ந்த ஆயுத போலீஸ் உணவு விடுதிக்குத் தேவையான உணவு தானியங்களில் மூன்றில் ஒரு பங்கு தானியம் கடத்தல்காரர்களிடமிருந்து வாங்கப்படுகிறது. அப்படி வாங்காவிட்டால் நாங்கள் பட்டினி கிடக்க வேண்டியதுதான் வேறு வழியில்லை என்று கூறுகின்றனர் போலீஸார்.

ஆதாரம்:
"அமிர்த பஜார் பத்ரிகா".
தகவல்: 'வீயெல்கே'



"வருஷத்திலே ஒரு நாளாவது அரசாங்கத்தைக் குறை சொல்லாமல் இருந்து பார்க்கணும்னு நினைக்கிறேன்!"

"'மௌன விரதம்' இருந்தாலொழிய அது நடக்காத காரியமாயிற்றே!"

- பி. க.





நாவிற்கினிய

டி.எஸ்.ஆர்

ஊறுகாய்கள்

டி. எஸ். ஆர். & கோ.,
கும்பகோணம்,
மதராஸ்

சிறு சேமிப்பில்
முதலீடு செய்யுங்கள்

Criterion-TSR-


பஸ் நிறுத்தத்தில் டாக்ஸி வந்து நிற்கும் போதுதான் சுதா தூற்றல் விழுந்துகொண்டிருப்பதைக் கவனிக்கிறாள். ஊரின் எல்லையாய் விரிந்து கிடக்கும் மாண்டவியின் முகத்துவாரப் பரப்பில் சலனங்களைத் தோற்றுவிக்கும் தூற்றல் வலுக்குமோ? அவள் டாக்ஸியில் ஏறும்போது வானில் குழப்பம் கூடியிருந்ததைக்கூடக் கவனிக்கவில்லையே?

காலை மணி ஆறுதான் அடித்திருக்கிறது. சதாசிவகட் பஸ்ஸுக்கு அப்போதே கூட்டம் நிரம்பிக் கொண்டிருக்கிறது. பணஜி பஸ் நிறுத்தத்தில் இருந்து கிளம்பும் முதல் பஸ் அதுதான்.

தோல் பெட்டி, பிளாஸ்டிக் கூடை, வேர் மண்ணுடன் சாக்குத் துண்டுடன் அணைத்துக் கட்டப் பெற்ற நான்கு மாங்கன்றுகள் எல்லாவற்றையும் டாக்ஸியிலிருந்து பஸ்ஸின் அருகே நகர்த்தி வைக்கிறாள்.

சிறிது நேரத்துக்குப் பின் பஸ்ஸின் ஆசன வரிசையில் ஓரத்து இடம் அவளுக்குக் கிடைக்கிறது. காலடியில் பிளாஸ்டிக் கூடையுடன் சற்றே ஆசுவாசமாக அமர்ந்து கொள்கிறாள்.





அந்நேரத்தில் அந்த பஸ்ஸுக்கு அவ்வளவு கூட்டம் இருக்கும் என்று அவள் சிறிதும் எதிர்பார்த்திருக்கவில்லை. மாதா கோயில் திருநாளை ஒட்டிய விடுமுறையுடன், வாராந்திர விடுமுறை நாளும் கூடியிருப்பதால், வெளியூர்ப் பயணக்காரர்கள் நிறைந்திருக்கிறார்கள் போலும்!

அந்த நீண்ட வரிசை ஆசனத்தில் அவளருகே ஓர் இளைஞன் வந்து அமருகிறான்.

''லீவுக்கு ஊருக்குப் போகிறாப் போலா?'' என்று புன்னகையுடன் அவளிடம் மெதுவாகக் கேட்கிறான். சுதாவும் நாணத்துடன் தலையசைத்து விட்டுப் புன்னகை செய்கிறாள். அவன் பெயர் பிரபாகர். அவள் வேலை செய்யும் அலுவலகக் கட்டிடத்தின் கீழ்த் தளத்தில் உள்ள அலுவலகமொன்றில் அவனும் வேலை செய்கிறான் என்பதை அவள் அறிந்திருக்கிறாள்.

''நானும் இந்த மூன்று நாட்கள் லீவை எண்ணித்தான் கூட ஒருநாள் லீவு போட்டு விட்டுப் போகிறேன். நீங்களும் கார்வார் தானா?'' என்று அவன் விசாரிக்கிறான்.

''இல்லை...கார்வார் தாண்டி....அவர்ஸா''

''ஓ, அங்கோலா பஸ் பிடிக்க வேண்டுமா? இது சதாசிவகட் போகும்போது மணி பதினொன்றரையாகி விடும். மழை பெய்யும் போல் இருக்கிறது....''

''ஆமாம்...'' என்று அவள் கைக்கடிகாரத்தைப் பார்த்துக் கொள்கிறாள்.

''மதராஸ் பக்கம் அடித்த புயல் மேற்கே நகர்ந்து இங்கும் வருகிறது போலும்.''

அவன் சிரித்துக் கொண்டே எட்டி வானைப் பார்க்கையில் சுதா திரும்பிக் கொள்கிறாள்.

மேற்குக் கடற்கரையோரங்களில் செம்பாறைக் குன்றுகளுக்கிடையே பசுமையான சூழலில் பதுங்கிக் கிடக்கும் கிராமம் ஒன்றிலிருந்து புதிய மலர்ச்சி காணும் நகரில் வேலை வாய்ப்பைத் தேடி வந்தவனே அந்த இளைஞன் என்று புரிந்து கொள்கையில் சுதாவுக்குச் சற்றே மகிழ்ச்சியாகவே இருக்கிறது. அவனோடு அதுவரையிலும் அவள் பேசிப் பழகியதில்லை. எனினும் அவனை நன்றாக அறிந்தாற்போன்றதொரு கள்ளமற்ற இணக்கம் அவன் முகத்தில் தோன்றுகிறது. கிராமத்

இன் ஒற்றையடிப் பாதையைக் கடந்து, செம்மண் சாலையோடு நடந்து அகன்ற தார்ச் சாலையில் வண்ண வண்ண வண்டிகளின் வேக ஓட்டங்களோடு கலகலக்கும் நகரத்துக்கு வந்த பிறகு சுதாவின் முகத்தில் செம்மையூட்டும் நாணம் செயற்கையில் மங்கிப் போயிருக்கிறது என்றாலும் மறுபடியும் அந்த ஒற்றைத் தடாகத்தில் பசுமையின் இடையே எளிமையே உருவான இல்லங்களை நோக்கிச் செல்லும் நினைவிலே அவனுடன் உரத்துப் பேசி அரட்டையடிக்க நாணம் குறுக்கிடுகிறது.

''எத்தனை நாட்கள் உங்களுக்கு?'' என்று அவன் கேட்கிறான்.

''...இந்த வாரத்தில் இரண்டு நாட்கள் எடுத்திருக்கிறேன். ஆனால்...''

''வீட்டில் விடமாட்டார்களாக்கும்?''

அவள் சிரிக்கும்போது கன்னங்கள் குழிகின்றன. கண்களில் நிர்மலமானதொரு வாஞ்சையே பளிச்சிடுகிறது. அவள் ஒதுங்கினாற்போல் மறைய முயன்றாலும், புன்னகை செய்து ஆமோதிக்கிறாள்.

''காலேஜ் போய்விடுமே? இல்லையா? ஊரில் அப்பா அம்மா இருக்கிறார்களா?''

''அவர்கள் இரண்டு பேரையும் நான் பார்த்த நினைப்பே இல்லை. அம்மா நான் பிறந்ததுமே போய்விட்டாள். அப்பா வேறு கல்யாணம் செய்து கொண்டாராம்.''

துயரத்தின் சாயையே தெரியாமல் ஆற்றில் கை நீட்டும் குழந்தைபோல் இதைக் கூறிவிட்டு, ஏன் கூறினோம் என்ற நினைவில் சட்டென்று நிறுத்துகிறாள்.

''....ஓ!.... ஊரில்....''

''பாட்டி, அவள்தான் அம்மா. தாத்தா இருக்கிறார்கள்...''

''நட்கர்னி உங்களுக்கு உறவுக்காரரா? நாலு மாசம் முன்பு பம்பாய்க்கு மாற்றலாகிப் போனாரே? அவர்கள் வீட்டில்தானே நீங்கள் இருந்தீர்கள்?''

''உறவுதான். உண்மையில், ஸ்ரீமதி நட்கர்னி போன வருஷம் எங்கள் ஊருக்கு வந்தபோதுதான், பொழுது போகாமல் 'துருப்பிடித்து'க் கொண்டிருந்த என்னை, இங்கே வரும்படி கட்டாயமாக அழைத்து வந்தாள். இடையில் மாற்றலாகிப் போகும் வரையிலும் அவர்களுடைய வீட்டில்தான் இருந்தேன்....''

''இப்போது நாரன்ஹா கட்டடத்தில் இருக்கிறீர்கள், இல்லையா?''

''ஏதேது? என்னைப் பற்றி எல்லாச் சமாசாரங்களும் தெரிந்து வைத்திருக்கிறீர்கள் போலிருக்கிறதே?''

அவளும் சிரிக்கிறாள்; அவனும் சிரிக்கிறான்.

''மாலைக் கல்லூரிக்குப் போவது கஷ்டமாக இல்லையா? நீங்கள் போகிறீர்களே?''

''முதலில் அப்படித்தான் தோன்றியது. ஐந்தரைக்கு ஆபீஸ் விட்டதும் விடாததுமாக பஸ்ஸுக்கு ஓட வேண்டும். முதலில் நட்கர்னி வீட்டாருடன் நான் இருந்தபோது, இரவு திரும்பி வரும்போது அந்தப் பகுதியில் தனியே நடந்து போகப் பயமாக இருந்தது. அந்த வழியில் எனக்குத் துணை வருபவர்கள் யாருமே கிடையாது..... இப்போது....''

சட்டென்று நாவைக் கடித்துக் கொண்டாற்போல் சுதா நிறுத்தினாள். அவன் அதே வாஞ்சை ததும்பும் புன்னகையுடன் அவளை ஆழ்ந்து நோக்குகிறான்.

பஸ் புறப்பட்டு, மாண்டவிக் கரையோரமாக அழகிய காட்சிகளைக் காட்டிக் கொண்டு ஓடுகிறது.

தூற்றல் வலுக்கிறது. தரையெல்லாம் நனைந்து, தண்ணீர் ஓடத் தொடங்குகிறது. சுதா ஏதோ ஒரு பொருந்தாமையைச் சமாளித்துக் கொள்வது போல் கைக்குட்டையால் நெற்றியை அழுத்தித் துடைத்துக் கொள்கிறாள்.

பதினொன்றடித்ததுமே சதாசிவகட்டை எட்டி விடுவார்கள். பின்னர் உடனே படகு கிடைத்தால் காளி நதியை ஐந்தே நிமிஷங்களில் கடந்து விடலாம். ஆற்றின் மறு கரையில் கார்வார் டவுன் பஸ் இருக்கிறதோ இல்லையோ? இல்லாவிட்டால் டாக்ஸிக்காரன் ஊருக்குள் பஸ் நிறுத்தத்துக்குச் செல்ல மூன்று ரூபாய் கேட்பான். கேட்டாலும் பரவாயில்லை. பன்னிரண்டேகால் மணி பஸ்ஸில் உட்கார்ந்தால் ஒன்றடித்ததும் ஊரை எட்டிவிடலாம்.

செம்பாறைக் குன்றுகள், மாஞ்சோலைகள், தென்னஞ் சோலைகள், நீலப் பரப்பாய்த் தெரியும் கடல் எல்லாம் பொதுவாக ஒரே பிராந்தியமாகத் தோன்றினாலும் அவள் போய்க் கொண்டிருக்கும் பகுதி, இயற்கையோடிணைந்த தூய்மை குலையாத இடம். பகட்டான முகப் பவுடரும், முழங்கால்களைக் காட்டும் சல்லாத்துணிக் கவுன்களும் காண முடியாத இடம். கூர்த்த மிதியடிகளும், உரித்தெடுக்க வேண்டிய கால் சட்டைகளும் பளபளக்கும் கார்களும் பார்க்கக் கிடைக்காத, அமைதி செறிந்த பாதைக்குப் போகிறாள்.

'மழை ஒருகால் பெய்து கொண்டிருக்குமோ அங்கு? பஸ் நிறுத்தத்துக்குத் தாத்தா வந்திருப்பாரோ?'

''சகோதரி! ஒரு 'சா' வாங்கி வரட்டுமா?''

சுதா சிந்தனை ஓட்டம் கலைந்து போகப் பார்க்கிறாள். பிரபாகர் வெளியே பிசுபிசுக்கும் மழையில் தோல் பையைத் தலைக்கு மேல் சாய்த்துக் கொண்டு நிற்கிறான். மடகாவ் வந்து விட்டார்களா?

''இனி எங்கேனும் நிறுத்துவாரோ என்னவோ?'' — பிரபாகர் அவள் பதிலுக்குக் காத்திராமலே, சற்றைக்கெல்லாம் ஒரு கண்ணாடித் தம்ளரில் ஆவி பறக்கும் தேநீரை வாங்கி வருகிறான். பணஜியை விட்டுக் கிளம்பும்போது சுதாவுக்குத் தேநீர் தயாரித்து அருந்தக்கூட நேரம் இருந்திருக்கவில்லை. காலையில் யார் முதலில் எழுந்திருக்கிறார்களோ, அவர்களே முதலில் தேநீர் தயாரிப்பது வழக்கம். அநேகமாகச் சுதாதான் எழுந்திருப்பாள். அன்று விடுமுறை நாள் வேறு. இரவு வெகு நேர உல்லாசக் கேளிக்கைகளில் மிதந்துவிட்டு அந்தத் தோழிகள் அறைக்குத் திரும்பி

பிருக்கிறார்கள். எனவே, உச்சிப் பொழுதில் சோம்பல் முறித்துக் கொண்டு எழுந்திருப்பார்கள். அருகில் உள்ள ரெஸ்டாரண்டில் இருந்து ஏதேனும் வாங்கி வந்து உண்டுவிட்டு மீண்டும் படுக்கைக்குள் புகுந்துகொள்வார்கள். மாலை நான்கு மணிக்கு மேல் தான் விருவிருப்பு ஏற்படும், பகட்டான பூச்சுக்களும் பரிமளங்களுமாக அடியோடு உருமாறியவர்களாக மாலை ஆறு மணிக்கு வெளியிறங்கிச் செல்வார்கள். கடற்கரைகள் கிளப்புகள் என்று பொழுதைப் போக்கிவிட்டு நினைத்தபோது திரும்புவார்கள். அவர்கள் மூவரும் அவளைப் போல் அலுவலகங்களில் பணி புரியும் யுவதிகள்தாம். என்றாலும் நகரத்து நாகரிக மடந்தையரான அவர்களுடைய பழக்க வழக்கங்களுக்கும் அந்த நாகரிகம் படியாத சுதாவின் பழக்க வழக்கங்களுக்கும் இடையில் உள்ள வேற்றுமை எளிதில் தீர்ந்து போகவில்லை. கிராமத்தை விட்டு நகரத்துக்கு வந்த புதிதில், ஒரு குடும்பத்தின் வரையறைக்குள் ஒட்டியிருந்தது பாந்தமாக இருந்தது அவளுக்கு. அவர்கள் மாற்றலாகிப் போனபின் எதிர்பாராத விதமாக அவள் இருந்த வரையறையற்ற அறை வாழ்வுக்கு மாற நேர்ந்தது. நீந்தத் தெரியாதவளை நீச்சலுடைக் கன்னியரின் இடையே தள்ளிவிட்டாற் போலிருந்தது. அவர்கள் எங்கே அழைத்தாலும் போக அச்சம் தடுத்தது. அவர்கள் கேலி செய்தாலும் பொருட்படுத்தாமல், வாராந்திர விடுமுறை நாளின் இனிய மாலை வேளைகளை மனமில்லா மனத்துடன், பாடப் புத்தகங்களுடன் கழித்திருக்கிறாள். திங்கட்கிழமைப் பொழுது எப்பொழுது விடியப் போகிறதென்றுகூட நினைத்திருக்கிறாள்....

"அதோ... கடல்... மிக அழகாக இல்லை? ஒரு வகையில் இந்தத் தூற்றல் மழைகூட நல்லதுதான். வெய்யிலடித்தால் பிரயாணம் புழுதியும் களைப்புமாக இருக்கும். இல்லையா?"

பிரபாகர் நெருக்கமாகத் திரும்பி, பஸ்ஸின் கண்ணாடி ஜன்னலை நன்றாகத் திறக்கிறான். அவன் தடவியிருக்கும் வாசனைத் தைலத்தின் மணம் அவளுடைய சுவாசத்துடன் இழைகிறது.

"பஸ் நிறுத்தத்திலிருந்து ஊர் மிகத் தொலைவோ?...." என்று கேட்கிறான்.

"மிகத் தொலைவில்லை. அரை மைலுக்குள் இருக்கும்."

"நான் ஒரு தடவை உங்கள் ஊர்ப் பள்ளிக்கூடக் கோஷ்டியுடன் கால்பந்து ஆட வந்திருக்கிறேன்.... நீ அந்த ஹைஸ்கூலில்தான் படித்திருப்பாய்."

"ஆமாம்."

"எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. நீ இங்கே தனியாக வேலை செய்ய வந்திருப்பது...."

சுதா குனிந்து கொண்டு கால் விரலைப் பார்க்கிறாள்.

பிரபாகரின் விழிகள் மின்னுகின்றன. புன்னகையுடன், "அறை வாடகை, சாப்பாடு போக மீதி கிடைக்குமோ?" என்றும் கேட்கிறான்.

யார், எவர்?

ஃ காதலி கூறிய ஆறுதல் - யாருக்கு?

ஃ திருடனைக் கண்டு நகைத்தவர்-யார்?

ஃ "எனக்கேற்ற தண்டனை" - என்ன? யாருக்கு?

ஃ "நானே அவருடைய நண்பனாக இருப்பேன்"-- சொன்னது யார்?

ஃ "நான் என்னைப் பற்றியே சிந்தித்துக்கொண்டிருந்தேன்" — சிந்தித்தவர் யார்?

(குழப்பம் தெளிய 58-ஆம் பக்கம் பார்க்க)

"ஏன், உங்களுக்கு மீதி கிடைப்பதில்லையா?" என்று குறும்பாகத் திருப்பிக் கேட்கிறாள் சுதா.

"பத்து, இருபதுகூடக் கிடைப்பதில்லை."

"நான் காலேஜ் புத்தகங்கள் வாங்கிக் கொண்டேன். படிக்க முடிகிறதே என்ற சமாதானம் இருக்கிறதல்லவா?"

"எனக்கும் கூட மாலைக் கல்லூரியில் சேர ஆசைதான். ஆனால் உங்களைப் போலெல்லாம் ஐந்தரை மணிக்குத் தினந்தோறும் என்றால் ஆபீசை விட்டுக் கிளம்பிவிட முடியாது. அதிகாரி இருந்தால் நாமும் கூடவே இருக்க வேண்டும். உங்கள் அதிகாரி மிகவும் நல்லமாதிரி என்று கேள்வி."

"நீங்கள் எல்லா விஷயங்களும் தெரிந்து வைத்திருக்கிறீர்கள்!"

"எனக்கு எல்லாம் ஜோஸ் சொல்லுவான். நான் இருக்கும் ஹோட்டலில்தான் அவனும் விடுமுறை நாட்களில் நண்பர்களுடன் சீட்டாட வருவான்..."

தன்னையே அவன் சிரித்த வண்ணம் உற்றுப் பார்ப்பது போல் அவளுக்குத் தோன்றுகிறது. ஒரு சிவப்பு, மின்னலைப் போல் அவளுடைய முகத்தில் பாய்ந்து பரவுகிறது. பார்வையைச் சட்டென்று அவனிடமிருந்து அகற்றி எங்கோ அலைய விடுகிறாள். முட்டு முட்டாகத் தெரியும் பசும் குவியல்களிடையே சேலையைக் காய வைத்தாற்போல் ஓர் ஆறு தெரிகிறது. தொலைவில் அடிவானுக்கு எல்லை கட்ட முடியாமல் தொட்டுக்கொண்டு பரந்திருக்கிறது கடல். தூற்றலும் மழையும் இல்லை; வெய்யிலும் இல்லை.

"ஜோஸும் ஈவினிங் காலேஜில் முதல் வகுப்புத்தானே படிக்கிறான்? உனக்குத் தெரிந்திருக்குமே!"

'ஆம்' என்று கூற அடி நெஞ்சு சரேலென்று வற்றிப் போகிறது. சங்கடத்திலிருந்து மீள ஒரு விநாடிகள் தத்தளித்தாற் போல் நெற்றியை அழுத்தித் துடைத்துக் கொள்ளுகிறாள்.

"அங்கோலா வண்டியில் யாரேனும் வந்திருப்பார்களா? நான் ஏற்றிவிட்டுப் போகட்டுமா?"

"வேண்டாம், வேண்டாம்..... எனக்குப் பயமா, என்ன?" திடுக்கிடும் அமைதிக்

குலேயுடன் நோக்கவிட்டுச் சுதா மீண்டும் வெளியே நோக்குகிருள். அவனுடைய கேள்விகளில் பரிவும் கனிவும்தான் இருக்கின்றன. அவளை உணர்ந்திருக்கிருள். ஆனலும் அந்தக் கிராம மக்களுக்கு உல்லாசக் கடற்கரைகளும், ஆடம்பரச் சுகபோகங்களும் கற்பனை செய்ய முடியாதவை.

இருண்ட பூஜையறை, இருண்ட சமையலறை; மண் அடுப்புக்கள், குறுகிய வாய் உடைய மண் பாண்டங்கள், நீர் முகந்து வரும் செப்புக் குடம்; ஈயம் பூசிய வட்டில்; அந்தரங்கமாக உணர்த்தும் அன்புப் பார்வை ஒளி போல் வேண்டுமென்ற இடத்தை மட்டும் துலக்கிக் காட்டும் கோழி முட்டைச் சிம்னி விளக்கு; காலேயும் மாலேயும் பாட்டனூர் சிவ பூஜை செய்யும்போது எழும் மந்திர ஒலிகள்; மணியோசை; பசுவும் கன்றும்....

'அம்மா'வின் பட்டுப் போன்ற தேய்ந்த விரல்களின் ஸ்பரிசம் அவளுடைய கூந்தலில் படுவதை நினைத்துக் கொள்ளுகிருள். சிலிர்க்கிறது. உடலெல்லாம், உள்ளமெல்லாம் முழுகிப் புதுமை பெறும் புனிதம் அந்த அன்பு. இப்போது நினைத்துக் கொள்கிருளே?

இழைய இழைய 'அம்மா' தலே வாரிப் பின்னல் போடும்போது சுதா ஆயிரம் கோணல்கள் காட்டுவாள். எல்லாக் கோணல்களுக்கும் ஈடு கொடுத்துக் கொண்டு பின்னல் போட்டு, நெருக்கமாக அரும்புகளைச் செண்டுகள் கட்டி இருபுறப் பின்னல்களுக்கும் சூட்டி விடுவாள். மடி, ஆசார, பூஜை நியமங்கள் கடுமையாக இருந்தாலும், இதுவும் ஒரு நியமம் அவளுக்கு.

''அத்தை...!''

தூண் மறைவில் நிற்கும் கோபுவை அவள் நிமிர்ந்து பார்க்க மாட்டாள்.

''பூக் கொண்டு வந்தாயாப்பா?''

''இன்று பூவெல்லாம் கௌரியின் ஆடு தின்றுவிட்டது அத்தை!''

''ஆட்டைக் கட்டிப் போட மாட்டாளோ கௌரி? பிச்சியரும்பைத்தானே ஆடு தின்றது? தொட்டியிலே ரோஜா பூத்திருக்குமே?''

''ரோஜாதான் இங்கேயே உங்களுக்கு முன் பூத்திருக்கிறதே, அத்தை?''

கோபு, தூண் மறைவில் பூக் கூடையை மறைத்துக் கொண்டு இடி இடி யென்று சிரிப்பான். சுதாவுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வரும். ஓங்கி அவன் முதுகில் அடிக்க ஓடுவாள்; அடித்தும் இருக்கிருள்.

''அத்தை! இந்த முரட்டுப் பெண்ணைப் போய் என்னைக் கல்யாணம் செய்துகொள்ளச் சொல்கிறீர்களே?'' என்று அவள் அடிக்கு ஒரு மதிப்பும் கொடுக்காமல் சிரிப்பான். கோபத்துக்கு எதிர்க் கோபம் காட்டாத போனல் அவளுக்குத் தோல்விதானே? அவன் சிரிக்கச் சிரிக்க அவளுக்கு அழுகை அடங்காமல் மேலிடும். அவன் இன்னமும் கேலிகள் செய்து அவளை அழ விடுவான். இறுதியில் தாத்தா குரலக்கிட்டதும் ஓடியே போவான்.

பள்ளி இறுதிப் பரீட்சை நான்கு முறைகள் எழுதியும் தோற்றுப் போனன். ஆனல் அந்தத் தோல்வியை அவன் பொருட்படுத்தவில்லே. அவன் தலையெடுத்து நிலத்தில் விளேச்சல் அதிகம் கண்டு, வீட்டைப் பெரிதாகக் கட்டிவிட்டான். பம்பு இன்ஜின்கள் வைத்து ஓட்டி, நீர் இறைத்து, தோட்டத்தில் புதுமைகள் செய்கிருன். மாவரைக்கும் ஆலே ஒன்றை நிறுவி, கிராமத்தில் இயந்திர வாடையைக் கொண்டு வந்திருக்கிருன். பூக் கொண்டுவர நேரம் இல்லே. வேலேக்காரக் கௌரிதான் பூக் கொண்டு வருகிருள்.

சுதாவும் எப்போதேனும் அவனைக் கண்டால் கூட ஒளிந்து கொள்கிருள். நட்கர்னி குடும்பத்தினர் கிராமத்தில் உறவு விருந்தினராக அவர்கள் வீட்டுக்கு வந்தபோது வீட்டில் சத்திய கணபதி பூஜை செய்தார்கள்.

பிருமச்சாரி பதவியில் தானம் வழங்க, 'அம்மா' தன் தமையன் பேரனை விட்டு வேறு எந்தப் பையனேயேனும் சொல்வாளா? கோபுதான் வந்திருந்தான்.

ரோஜாப் பூக்கள் போட்ட புதிய நைலான் சேலேயை அவள் அன்று முதல் முறையாக அணிந்திருந்தாள்.

''அது யார் அத்தை? புதிதாக வெளி யிருந்து வந்திருக்கும் உறவுக்காரரா?''

''யார் கோபு?''

''ரோஜாப் பூச் சேலே உடுத்துக் கொண்டு இலே போடுகிருளே?''

''நம்ம சுதாதான். அடேடே... தெரியவில்லேயா?'' அவனுக்குத் தெரியாதா என்ன?

''கல்யாணியோடு அவளும் போகிறேன் என்கிருள். அவர்களும் அங்கே வந்து ஏதோ டைப்பு, தையல் எல்லாம் படிக்கட்டும், கிராமத்தில் என்ன செய்கிருள் என்று சொல்கிருர்கள். ஒரே பிடியாய் நிற்கிருள்.''

''அப்படியா? போய் வரட்டும், அனுப்புங்கள், அத்தை?'' என்று அவளுக்கும் கேட்கும் குரலில் உரக்கக் கூறிவிட்டுச் சிரிக்கிருன்; அவள் திரும்பிப் பார்க்கிருள்; சிரித்துக் கொண்டே இருக்கிருன். சத்தமில்லாத ஆழ்ந்த சிரிப்பு.

''சகோதரி, 'போலே' செக் போஸ்ட் தாண்டி விட்டோம். காளி நதிக்கரையில் படகு தயாராக இருந்தால் ஹோட்டலுக்குப் போகாமல் அக்கரை போய்விடலாமா?''

இவன் ஒருவன் தொண தொணக்கிருனே என்று சற்றே எரிச்சல் மூளுகிறது. ஆனல் அவன் முகத்தைப் பார்க்கையில் எரிச்சல் குளிர்ந்து விடுகிறது. புன்னகை செய்கிருள். கோபாலின் புன்னகை கூட அப்போது இப்படித்தான் இருந்தது. கோபாலுக்கு இன்னமும் வட்ட முகம்.

அவளுக்கு ஆத்திரம் எழும்போது பொங்கும் பாலில் நீர் தெளிப்பது போல் சிரித்து அடக்கி விடுவான். மலரும் பருவத்தின் முகிழ்க்கும் ஆவல்களைப் பரபரப்பின் மட்டத்துக்குக் கொண்டு வராமல் அடக்கி ஆளத் தெரிந்தவன் அவன்... அவளுக்கும் அவனுக்கும் இடையே பத்து ஆண்டுகள் இடைவெளி இருக்கிறது. சூடு அறியாத பேதைப் பருவம் கடந்து, இரண்டும் கெட்டானுகி பின் யுவதியாக நாணப் போர்வையில் மலர்ந்து நின்ற காலேயிலும் எத்தனையோ

நாட்களாகப் பெரியவர்களின் எண்ணங்களில் அவர்களுக்குத் தெரிந்தே வலுப் பெற்று வரும் அவர்களுடைய எதிர்கால உறவின் உரிமையைப் பற்றி அவன் அவளுக்கு வெளிப் படையாக நினைவூட்டியவனில்லை. அந்தப் பண்பை இப்போதல்லவா அறிகிறாள்?

நெஞ்சு வலிக்க உணர்ச்சி முட்டுகிறது.

எப்போதும்போல் காளி நதிக் கரையில் சுருசுருப்புத் தென்படுகிறது.

பிரபாகர் கூறினாற்போல் படகு தயாராக இருக்கிறது.

சுதா இறங்கிச் சாமான்களைப் பார்த்துக் கூலிக்காரனிடம் கொடுக்கிறாள். பிரபாகர் தான் படகுச் சீட்டு வாங்குகிறான். அடிபிடியாகப் படகில் இடம் பெறுகின்றனர்.

அக்கரையில் பஸ் இல்லை. சரசர வென்று மழை பெய்யத் தொடங்குகிறது. அவள் சாமான்களுடன் பெட்டிக் கடை ஓரமாக ஒதுங்கி நிற்கிறாள். பிரபாகர் எதிர்பாராமல் ஒரு டாக்ஸியைப் பிடித்து வருகிறான்.

"ஏறு..." என்று கதவைத் திறக்கிறான்.

அவள் தயங்குகிறாள். "பஸ் வருமே? எனக்காகவா கொண்டு வந்தீர்கள்?"

"ஏன்? கொண்டு வரக் கூடாதா? மழையில் நனைகிறாயே?"

சாமான்களை டிக்கியில் எடுத்து வைத்து விட்டான்.

ஏதேதோ எண்ணங்கள் சிந்தையை வளைக் கின்றன.

நல்ல பகல்; கலகலக்கும் சாலை...

இரவா? மீராமார் கடற்கரைச் சாலையா? இவன் சகோதரி என்று கூப்பிடுகிறான்...

அந்த நினைவு குபீரென்று ஆயிரம் பதினாயிரம் தீநாக்குகளாக மாறிப் பொசுக்கி னாற்போல் இருக்கிறது.

இரவு ஒன்பது மணி. ஐந்தாறு மாணவர்களுக்காகப் பஸ் விடுவதில் பயனில்லை என்று திடீரென்று நிறுத்தி விடுவார்கள் என்பதை அவள் எதிர்பார்த்தாளா?



அவர்கள் இவர்கள்தான்!

★

தகவல் :
பி. முத்துக்குமரன்



□ ஆங்கிலப் பேரறிஞர் டாக்டர் ஜான்சன் போர்ட்டர் அம்மையாரைக் காதலித்தபொழுது அவரிடம் தம்முடைய சிறிய தந்தையொருவர் தூக்கிலிடப்பட்டதால் தம்முடைய குடும்பம் மாசுடையது என்றார். அப்போது போர்ட்டர் அம்மையார் ஜான்சனுக்கு ஆறுதல் அளிக்க எண்ணித் தம்முடைய குடும்பத்தில் யாரும் தூக்கிலிடப்படாவிட்டாலும் தூக்கிலிடப்படத் தக்கவர் ஐம்பது பேருக்குக் குறைய மாட்டார்கள் என்று கூறினார்.

□ பிரான்சு நாட்டின் பெயர் பெற்ற நாவலாசிரியர்களுள் ஒருவரான பால்சாக் என்பவர் ஒரு நாள் இரவு உறக்கம் வராமல் படுத்திருந்தபோது ஒரு திருடன் மெதுவாக வந்து அவருடைய மேஜையின் பூட்டை உடைக்க முயன்றான். அதைக் கண்ட ஆசிரியர் குலுங்கக் குலுங்கச் சிரித்தார். திருடன் திடுக்கிட்டு, அவரைப் பார்த்து, "ஏன் நகைக்கிறீர்கள்?" என்று கேட்டான்.

"அப்பா! உன் செயலைப் பார்த்துத்தான்! மேசையின் சொந்தக்காரனுக்குப் பகலில் அதில் காண முடியாத பணத்தை நீ இரவில் கண்டுவிடலாம் என்று எண்ணி இவ்வளவு சிரமப்படுகிறாயே. அதை எண்ணித்தான் நகைக்கிறேன்." என்று பால்சாக் கூறினார்.

□ உலகப் புகழ் பெற்ற பிரெஞ்சுப் பேரறிஞர் வால்டேர் ஒரு சமயம் இங்கிலாந்துக்குச் சென்றிருந்தபோது அந்நாட்டில் பிரெஞ்சுக்காரருக்கு விரோதமான உணர்ச்சி அதிகமாக இருந்தது.

வால்டேர் ஒரு நாள் தெருவில் போய்க்கொண்டிருந்தபோது அங்கிருந்த மக்கள் கோபமாகத் திரண்டு வந்து "கொல்லுங்கள் இந்தப் பிரெஞ்சுக்காரனை!" என்று கூக்குரல் எழுப்பினார்கள். வால்டேர் சற்றும் அஞ்சாமல் அவர்களை நோக்கி, "ஆங்கிலேய மக்களே! நான் பிரெஞ்சுக்காரன்

கல்லூரி முடிந்து வெளியே வந்தபோது தான் உண்மை தெரிகிறது. ஆனால் அவளைப் பற்றி எவரேனும் கவலைப்பட்டால்தானே? மோட்டார் சைக்கிள்கள்; ஸ்கூட்டர்கள், சைக்கிள்களில் ஜோடி ஜோடியாகக் கிளம்பிப் போய் விட்டார்கள். வாகன வசதி இல்லாத வர்களுக்கு வாகன வசதி உள்ளவர்கள் இடம் கொடுத்தார்கள்.

சுதாவுக்கும் வேறு வழியில்லை. மூன்று மைல் தொலைவு இரவு நேரத்தில் தனி வழி செல்ல முடியாதே? ஜோஸ் அவளை ஸ்கூட்டரின் பின்னே ஏற்றிக் கொண்டான். மறுக்க முடியாத உதவி.

அவளுக்கு ஸ்கூட்டர் பின் ஸீட்டில் அமர்ந்து பழக்கமில்லை. எனினும் பெரிய தொரு விபத்தைத் தாண்டிவிடும் விமானம் போன்றிருந்தது அது. அமர்ந்ததும் குடலோடு உடல் குலுங்கும் நடுக்கம் உண்டாயிற்று.

"கீழே விழுந்து விடாதே, பெண்ணே! என்னைப் பிடித்துக் கொள்" என்றான். ஜோஸ். அவன் தோளில் கையை வைத்துக் கொண்டாள் அவள்.

அவளுடைய இருக்கையின் அருகில் அன்று அவன் இறக்கி விட்டபோது, தெய்வம் அனுப்பிய துணையாகவே அவன் தோன்றினான். தொடர்ந்து இதே வழக்கம் நீடிக்க வேண்டியதாயிற்று.

பஸ்ஸைப் பற்றி யாருமே கவலைப்பட்டதாகத் தெரியவில்லை அவளுக்கு. அவளே நாலைந்து முறைகள் வற்புறுத்தி நடவடிக்கை எடுக்கச் செய்ய வேண்டும் என்று விரும்பிப் பேச்செடுத்தும் எவரும் செவிகளில் போட்டுக் கொள்ளவில்லை.

நாட்கள் ஓடுகின்றன. ஜோஸ்...ஜோஸ்.. இறுகப் பிடித்த சராயும், கூர்த்த ஜோடுகளும், கோடுகள் போட்ட சட்டையும் அணிந்து, அவளுக்கு முன் வண்டியுடன் காத்திருக்கிறான். சிகரெட்டை விசிறி எறிந்து விட்டு வண்டியைக் கிளப்புகிறான். அவன்

என்பதற்காக என்னைக் கொல்ல விரும்புகிறீர்கள். ஆனால் நான் ஆங்கிலேயனாக இல்லை என்பதொன்றே எனக்குப் போதுமான தண்டனையாகுமல்லவா?" என்று கூறினார். அதைக் கேட்டதும் கோபமாக இருந்த மக்கள் கோபத்தை விட்டுச் சந்தோஷமாக ஆரவாரித்து அவரை அவருடைய வழியில் அனுப்பி வைத்தார்கள்.

□ ஆபிரகாம் லிங்கன் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த போது இராணுவ அதிகாரிகளின் ஆணைகளை மீறிய ஆயிரக் கணக்கான போர்வீரர்கள் தம்மை மன்னிக்குமாறு லிங்கனுக்கு விண்ணப்பித்துக் கொண்டார்கள். ஒவ்வொரு விண்ணப்பத் துடனும் பல சிபாரிசுக் கடிதங்கள் சேர்க்கப்பட்டிருக்கும். ஆனால் ஒருநாள் ஒரு விண்ணப்பம் எத்தகைய சிபாரிசுக் கடித மும் இல்லாமல் வந்தது. அதைக் கண்ட ஜனாதிபதி, "என்ன இந்த மனிதருக்கு நண்பர் ஒருவரும் இல்லையா?" என்றார். அவருடைய காரியதரிசி, "ஒருவர்கூட அவருக்கு இல்லை!" என்றார். அதற்கு லிங்கன், "அப்படியானால் நான் அவருடைய நண்பனாக இருப்பேன்!" என்று கூறினார்.

□ 'பிரபல ஓவியரான விஸ்லரும், பிரபல ஆசிரியரான ஆஸ்கார் ஒயில்டும் நேற்றுப் பிரைட்டனில் சந்தித்து வழக்கம் போல் தங்களைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தார்கள்' என்று ஒரு செய்தி ஒரு நாள் ஆங்கில தினசரிப் பத்திரிகைகளில் வெளிவந்தது. அதை விஸ்லர் கத்தரித்து எடுத்து ஆஸ்கார் ஒய்ல்டுக்கு அனுப்பி "என்ன, ஆஸ்கார், இந்தப் பத்திரிகைக்காரர்கள் சரியாக எழுதக் கூடாதா? நாம் இருவரும் என்னைப் பற்றித்தானே பேசிக் கொண்டிருந்தோம்?" என்று கடிதம் எழுதினார்.

அதற்கு ஆஸ்கார் ஒயில்ட் "ஆம்! விஸ்லர்! நாம் இருவரும் உம்மைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருந்தோம். ஆனால் நான் என்னைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தேன்" என்று விஸ்லருக்குத் தந்தி கொடுத்தார்.







அவன் தோள்களில் இயந்திரம் போல் கைகளை வைத்து ஆதரவு தேடிக் கொள்கிறாள். அவன் கல்லூரிப் பாடங்கள் குறித்தோ அலுவலகத்தைக் குறித்தோ சகஜமாகப் பேசுகிறான். அவளுடைய முதல் நாளைய நடுக்கம் நினைவில்லாதபடி மறந்து போகிறது.

புதியதாக வேலி தாண்டி வரும் கிளர்ச்சியில் இந்த உறவின் தன்மைக்கு எந்த விதமான தனித்துவமும் கற்பிக்கத் தெரியவில்லை. நிலவு பொழியும் நாட்களில் கடலும் ஆறும் குலவும் நெடிய கரைச் சாலையில் காற்று கன்னங்களில் படிந்து செல்ல, அந்தத் தோழமை நெருங்கி வரும்போது, நெருக்கத்தில் கவடு கலந்து விடும் என்பதை முன் கூட்டியே அறியத் தெரியவில்லை.

ஒரு நாள் அவன் இறங்கு மிடத்தில் அவள் இடையில் கையைக் கொடுத்து அவள் எதிர்பாராத விதமாகச் சிக்கென்று வளைத்து இறக்கி விட்டான். திடுக்கிட்ட உணர்வு மீளுமுன் அவன் சிரிப்பொலி கேட்டது.

''உன் சேலை சிக்கியிருந்தாற் போலிருந்தது... அச்சா... குட் நைட், டாடா...''

வண்டி நகர்ந்தும் அவன் சிரிப்பொலி வெகு நேரம் ஒலித்துக் கொண்டிருந்தது.

அன்றிரவு முழுவதும் மனம் இரு கூறுகளாகி ஒன்றோடொன்று மோதின.

அடுத்த நாள் கல்லூரிப் படிப்பை நிறுத்தி விட முடியுமா?

அன்று வழி நெடுகப் பேசவேயில்லை. இறங்கும் இடம் வரும் முன்பே அவன் வண்டியை நிறுத்தி விட்டான். அவளும் முதல் நாளைப் பொன்ற சந்தர்ப்பத்துக்கு இடம் கொடுக்கக் கூடாதென்ற உணர்வுடன் விரைவாகக் கீழிறங்கினாள்.

எனினும்... எப்படி நிகழ்ந்ததென்று தெரியவில்லை. ஒருசில கணங்கள் வாழ்க்கையின் நெருடலான இருப்பத்தை அமைத்து விடக் கூடுமோ? ஓர் இளம் பெண்ணின் சுதந்திரமான வாழ்வைக் கண் சிமிட்டும் கணங்கள் முன்டும் முடிச்சுமாகத் திருப்பத்துக்குள் வளைத்து விடுமோ? அவன் கைகள் அத்தகைய கணங்களாக அவளைச் சிறை செய்து விட்டன.

அந்தக் கணங்களில் அவளால் இதற்கு போல் எதிர்ப்பைக் காட்ட முடியவில்லையே?

''ஓ....நோ...நோ...''

அவன் அவளுடைய கன்னத்தைச் செல்லமாகத் தட்டிவிட்டு, ஒரு குழந்தையைப் பார்த்துச் சிரிப்பதைப் போல் சிரித்தான். அவனுடைய நாகரிகத் தாடியும்; நிலவொளியில் அரும்பான பல் வரிசையும் அவளுக்குப் பார்க்கவே அச்சமூட்டுவதாகத் தோன்றின.

''கோபமா? கோபித்துக் கொள்ளாதே, பேபி. என்னால்... தவிர்க்க முடியவில்லை. இந்தச் சிறு உரிமையைக் கூடக் கோரக் கூடாதா?... நீ... எவ்வளவு அழகாக இருக்கிறாய், இப்போது?''

சுதா பேசவில்லை.

அன்றிரவு அவள் உள்ளத்தில் புயலடித்தது. அவளால் ஒரு நிலையில் நிற்க இயலவில்லை.

மாலைக் கல்லூரிக்குச் சென்றதே தவறு?

அழகாக உடையணிந்து சிரித்துப் பேசி உறவாடியது தவறு? ஓர் இளைஞனுடன் சிரித்துப் பேசி உறவாடும்போது இத்தகைய சந்தர்ப்பங்களும் சகஜமாக ஏற்பட்டுவிடுமோ?

அவன் இடையை வளைத்து இடைவெளியை அழித்தபோது அவளால் ஏன் தள்ள முடியவில்லை? மனத்தால் தள்ள முடிந்தாலும் கையில் வலுவில்லை.

இப்போது நினைத்தாலும் தீ நாக்குகள் என்னைச் சுடுவது போல் எரிக்கின்றன.

ஒரு வாரம் கல்லூரிக்கு உடல் சரியில்லை என்று போகவில்லை.

யார் யாரோ கேட்டார்கள்.

அடுத்தநாள், அடுத்த நாள் என்று சந்தர்ப்பங்கள் சங்கிலி வளையமாகத் தொடர்ந்தால்— அவளுடைய எதிர்ப்பாற்றலும் மழுங்கிப் போய்...

நல்ல வேளையாக, தேவாலய விழா— இரண்டாம் சனி, ஞாயிறு — ஊருக்குப் போகிறாள்.

டாக்ஸிக்காரனுக்குப் பிரபாகர் பணம் கொடுக்கும்போது, கவனித்துப் பார்த்து, படகுக் கட்டணத்தையும் நீட்டுகிறாள். அவன் மறுக்காமல் வாங்கிக் கொள்கிறான்.

''திரும்பி வரும் நாள் தெரிந்தால் இங்கேயே எதிர்பார்ப்பேன்...''

அவள் மறுமொழி இன்றிச் சாலைக்கு நேராகத் தெரியும் கடலைப் பார்க்கிறாள்.

''...நீ தப்பாக எடுத்துக்கொள்ளக்கூடாது, நான் அதிக உரிமை எடுத்துக் கொள்வதாக.''

திடுக்கிட்டுச் சுதா நிமிர்ந்து பார்க்கிறாள்.

ஜோனைப் போல்...—காதல் வார்த்தைகளைத்தான் பேசுகிறானா?...

''...நீ... என் சகோதரி போல...எனக்கும் ஒருத்தி உன்னைப் போல் இருக்கிறாள்... ஜோஸ்... ஜோஸுடன் அதிகமாக..... அவளுடன்...''

அவளுக்குச் சொற்கள் நெஞ்சில் சிக்கிக் கொண்டாற் போல் வரவில்லை. ஆனாலும் வாஞ்சை கனியச் சிரிக்கிறாள்.

அவளுடைய செவிகளில் அந்த ஒன்றிரண்டு தடுமாற்றமான சொற்களே விண் விண்ணென்று மோதுகின்றன.

என்ன பதிலைச் சொல்வாள்? எல்லோரும் ஒருவரைப் போல் அல்ல.

''நான் தவறாகப் பேசியிருந்தால்.... மறந்து விடு...''

'இல்லை, இல்லை' என்று அவள் பதற்றமாக மறுக்கும்போதே, பஸ் வந்துவிடுகிறது.

கும்பலுக்குள் புகுந்து பிரபாகர் அவளுக்கு இடம் பிடித்துக் கொடுக்கிறான். அவன் வந்திராவிட்டால் அந்தப் பஸ்ஸில் அவளுக்கு இடம் கிடைத்திராது.

நன்றிச் சொல் கூற வேண்டும் என்று நினைத்தாலும் சொல்வெழவில்லை. விட்டகுந்த மனமறந்த ஆற்றல் வலுக்கிறது. யாரோ ஒருவனாக வழியில் வந்தவன்தான். எனினும் கையை அசைத்து விடை கொடுக்கும் சுதாவுக்கு அச்சம் அகன்று நெஞ்சம் இலேசாகிறது. பஸ் புறப்படுகிறது. சுதா நிம்மதியுடன் இனிய காட்சிகளில் ஒன்றிப் போகிறாள்.


இப்பொழுது
நடைபெறுகிறது
சென்னை பாரகன் · பாரத்
நடராஜா · சீனிவாசா
கபாலி மற்றும்
தென்னாடெங்கும்
சன்பீம் & G.K.
கம்பெனியாரின்
ஸ்ரீ வெங்கடேஸ்வரா
சினிடோன் அளிக்கும்
பட்டத்து ராணி!
மேற்பார்வை
A.பீம்சிங்
டைரக்ஷன்
S.ராமநாதன் B.A.

சிவனருட் செல்வர்



திருமுருக கிருபானந்தவாரியார்

காரைக்கால் அம்மையார் பெருமையை உலகுக்கு உணர்த்த வேண்டி இறைவரது திருவருள், சுவையுள்ள கவி மனைவியாருக்கு இருக்கட்டும் என்று கருதாது "மறு கவியையும் கொண்டு வந்து இடுக" என்று கூறும்படி பரமதத்தனைத் தூண்டியது.

அம்மையாரின் அருள் திறத்தை அறிந்து அவரைப் பிரிந்து வாழ்வதே தக்கது என்று கருதிய பரமதத்தன், சில நாட்கள் தொடர்பின்றி அம்மையார் தனக்குத் தொண்டு செய்யாத வண்ணம் இருந்தான். கடல் கடந்து சென்று செம்பொன் தேடி வருவதாகச் சுற்றத்தாரிடம் சொன்னான். அவர்களும் அதற்கு இசைவு தெரிவித்தனர். பரமதத்தன் மரக்கலம் செய்து அயல் நாட்டில் அதிக விலைக்கு விற்கக் கூடிய பண்டங்களை ஏற்றினான். தான் தெய்வமாக எண்ணி மனத்தால் வழிபடும் அம்மையாருக்கு மன வணக்கம் செலுத்தினான். நல்ல நாளில் வருணனைப் போற்றி மரக்கலம் ஏறிப் புறப்பட்டுச் சென்றான்.

அயல்நாடு சென்ற பரமதத்தன், பண்டங்களை யெல்லாம் விற்று நிரம்பவும் பொருள் ஈட்டினான். பின்னர், தாய் நாட்டில் விற்கக் கூடிய பண்டங்களைக் கப்பலில் ஏற்றித் தாய்நாடு வந்து சேர்ந்தான். ஆனால் காரைக்காலுக்குச் செல்லாமல், பாண்டி நாட்டில் ஒரு பட்டினத்தை அடைந்து அங்கே தங்கினான். அயல்நாட்டிலிருந்து கொண்டு வந்த பண்டங்களை யெல்லாம் அங்கே விற்றுப் பெருந் தனவந்தனானான்; சீரும் சிறப்பும் பெற்று அங்கே வாழ்ந்தான். அவ்வூரில் உள்ள ஒரு வணிகன் தனது புதல்வியை அவனுக்குத் திருமணம் செய்து கொடுத்தான்.

பரமதத்தன் புதிய மனைவியுடன் வாழ்ந்து வந்தும், காரைக்காலில் உள்ள அம்மையாரிடம் அச்சம் உடையவனாக இருந்தான். கப்பல் வாணிபத்தை மேன் மேலும் செய்து, குபேரனைப் போன்ற அளவற்ற நிதியைப் பெற்றான். அவனது இளைய மனைவி கருக்கொண்டு ஒரு பெண் மகவைப் பெற்றெடுத்தாள். அக்குழந்தைக்கு, தான் மனத்தில் வைத்து வழிபடும் தெய்வமாகிய அம்மையாருடைய திருநாமத்தைச் சூட்டி, 'புனிதவதி', 'புனிதவதி' என்று அன்புடன் அழைத்தான். குழந்தை இனிது வளர்ந்தது.

புனிதவதி அம்மையார் காரைக்காலில் நிலைபெற்ற கற்பொழுக்கத்துடன் சிவபக்தி செய்து கொண்டு மனையறம் புரிந்து வந்தார். அயல் நாடு சென்ற பரமதத்தன் திரும்பி வந்து பாண்டி நாட்டில் ஒரு பட்டினத்தில் இருக்கிறான் என்ற செய்தியைச் சுற்றத்தினர் கேள்விப்பட்டனர். செய்தியறிந்த உறவினர்கள் அம்மையாரை அழைத்துக் கொண்டு போய் அவனிடம் சேர்க்க வேண்டும் என்று கருதினார்கள். இரத்தினம் இழைத்த சிவிகையில் திருவனைய தெய்வ மடந்தையாரை ஏற்றிச் சில பகல் நடந்து செந்தமிழ் நாட்டை யெய்திப் பரமதத்தன் இருந்த நகரைச் சேர்ந்தார்கள். அந்நகரில் ஒரு சோலையில் தங்கி அம்மையாருடன் வந்திருக்கும் செய்தியைக் கூறுமாறு பரமதத்தனிடம் ஒருவனை அனுப்பினார்கள். அச்செய்தியைக் கேட்ட பரமதத்தன் அஞ்சினான். தன் இளைய மனைவியை அழைத்துக் கொண்டு குழந்தையுடன் விரைந்து வந்தான்.

தானும் அம் மனைவி யோடும்
தளர்நடை மகவி னோடும்
மானிளம் பிணைபோல் நின்ற
மனைவியார் அடியில் தாழ்ந்தே
''வானுடம் திருவால் வாழ்வேன்;
இவ்விளங் குழவி தானும்
யான்மையால் உமது நாமம்''
என்றுமுன் பணிந்து வீழ்ந்தான்

கணவனைக் கண்டு இளம் பெண் மான் போல் நின்ற அம்மையின் அடியில் தாழ்ந்து, ''அடியேன் உமது திருவருளால் வாழ்வேன்; இக்குழவிக்கு உமது திருநாமத்தைச் சூட்டியிருக்கிறேன். அருள் செய்யும்'' என்று கூறி அம்மையார் அடிமலர் மீது விழுந்து பணிந்தான் பரமதத்தன்.

கணவனார் தம்மை வணங்குவதைக் கண்ட அம்மையார் அச்சத்துடன் ஒதுங்கிச் சுற்றத்தார்பால் அகன்றார். பரமதத்தன் மனைவியை வணங்கியதைக் கண்ட சுற்றத்தார் ஆச்சரியம் கொண்டார்கள். ''பரமதத்தா ! இது என்ன புதுமை? மனைவியை வணங்குகின்றாயே? இதன் உட்பொருள் யாது?'' என்று வினவினார்கள் உறவினர்கள். ''பெரியோர்களே! இவர் மானுடரல்லர் ; நற்பெருந்தெய்வம். இதனை முன்னரே அறிந்துதான் நான் இவரை விட்டு அகன்றேன். இதோ எனது மகளுக்கு இத்தெய்வத்தின் திருநாமம் சூட்டியுள்ளேன். ஆதலால் அடிபணிந்தேன். நீங்களும் பணியுங்கள்'' என்று கூறினான் பரமதத்தன்.

மற்றவர் தம்மை நோக்கி
''மானுடம் இவர்தாம் அல்லர்;
நற்பெருந் தெய்வமாதல்
நானறிந் தகன்ற பின்பு
பெற்றஇம் மகவு தன்னைப்
பேரிட்டேன்; ஆத லாலே
பொற்பதம் பணிந்தேன்; நீரும்
போற்றுதல் செய்மின்'' என்றான்

''இவர் மனைவியன்று'' என்று கூறுவதும் பாவம் என்று கருதிய பரமதத்தன், ''மானுடம் இவர்தாம் அல்லர்'' என்று கூறிய தகைமையை எண்ணிப் பார்க்க வேண்டும். பரமதத்தன் அம்மையாருடைய சிவப் பண்புக்கேற்ற பெரும் பண்புக்குரியவன் அல்ல எனினும், இவ்வாறு கூறியதன் மூலம் நற்பண்புடையவன் என்பது நன்கு விளங்கும்.

கணவனாரது மன நிலையை அறிந்த அம்மையார், உடலின் வனப்பைப் போக்கி, பேய் வடிவத்தினை அருளுமாறு இறைவரைத் துதித்தார். அம்பலவாணர் திருவருளால் அம்மையாருக்கு அப்போது மேலான உணர்வு மிகுந்தது. உடம்பில் அழகு செய்து



கொண்டிருந்த தசைகளை உதறி என்பு வடிவாகி, விண்ணும் மண்ணும் போற்ற நின்றார்.


ஆனஅப் பொழுது மன்றுள்
　　ஆடுவார் அருளி னாலே
மேனெறி உணர்வு கூர
　　வேண்டிற்றே பெறுவார் மெய்யில்
ஊனுடை வனப்பை யெல்லாம்
　　உதறிஎற் புடம்பே யாக
வானமும் நிலமும் எல்லாம்
　　வணங்குபேய் வடிவம் ஆனார்

மலர் மழை பொழிந்தது. வான துந்துபியின் ஒலி உலகெலாம் நிறைந்தது. இமையவரும் இருடியரும் கூடினார்கள். கணங்கள் கூத்தாடின. எதிரேயிருந்த சுற்றத்தினர் இந்த அற்புதத்தைக் கண்டு தொழுது அஞ்சி அகன்று ஓடினர். அம்மையார் தாம் அடைந்த சிவாநுபவத்தை — மெய்ஞ்ஞான — உணர்வை, ''அற்புதத் திருவந்தாதி'' என்னும் இருநூலாகப் பாடினார். ''பொற் பாதம் போற்றும் நற்கணங்களில் நானும் ஒன்று ஆனேன்'' என்று துதித்து மகிழ்ந்தார். பின்னர், ''இரட்டை மணிமாலை'' என்ற திருப்பிரபந்தத்தைப் பாடியருளினார்.

சுந்தரமூர்த்தி நாயனார் போற்றிய அறுபான்மும்மை நாயன்மார்களுள், பெண்பாலார் மூவர்; இம்மூவருக்குள் இயல் இசை என்ற இரு தமிழிலும் வல்லவர் காரைக்கால் அம்மையார். முதன் முதலாகத் தேவாரப் பதிகம் பாடியருளிய பெருமை அம்மையாருக்கே உரியது. திருஞான சம்பந்தர், ''தோடுடைய செவியன்'' என்ற தேவாரப் பதிகம் கூறுவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னர் அம்மையார், ''கொங்கை திரங்கி'' என்ற திருப்பதிகத்தைத் தேவாரத்துக்குத் தோற்றுவாய் போல் பாடியருளினார். அதனால் அதற்கு மூத்த திருப்பதிகம் என்ற பேர் உண்டாயிற்று. அம்மையார் பாடியருளிய அற்புதத் திருவந்தாதியின் வாக்கு மிக வன்மையானது.

யானே தவமுடையேன்;
　　என்னெஞ்சே நன்னெஞ்சம்;
யானே பிறப்பறுப்பான்
　　எண்ணினேன் - யானேயக்
கைம்மா வுரிபோர்த்த
　　கண்ணுதலான் வெண்ணீற்ற
அம்மானுக் காளாயி னேன்.





அற்புதத் திருவந்தாதியில் உள்ள பாடல் இது. எத்துணை இனிமையாக விளங்குகின்றது? நுண்ணிய கருத்துக்களைக் கொண்ட பாடல்களும் அற்புதத் திருவந்தாதியில் உள்ளன. உதாரணத்துக்கு ஒன்றைப் பார்ப்போம்.

அறிவானுந் தானே; அறிவிப்பான் தானே;
அறிவா யறிகின்றான் தானே - அறிகின்ற
மெய்ப் பொருளுந் தானே; விரிசுடர் பார்ஆகாயம்
அப்பொருளுந் தானே அவன்

உலகினரை அழைத்து அன்பினால் வைது இன்னுரை உபதேசிக்கின்ற பாடலைப் பார்ப்போம்:

எளிய திதுவன்றே! ஏழைகாள்! யாதும்
அளியீர்! அறிவிலீர்! ஆவா! - ஒளிகொள்மிடற்
றெந்தையராம் பூண்டிமுதும் எம்மானை உள்நினைந்த
சிந்தையராய் வாழுந் திறம்

நகைச்சுவை நிரம்பிய பாடலையும் பார்ப்போம் :

திருமார்பில் ஏனக் கொழுமருப்பைப் பார்க்கும்
பெருமான் பிறைக் கொழுந்தை நோக்கும்-ஒருநாள்
இதுமதியென் றொன்றாக இன்றளவுந் தேரா
ததுமதி யொன்றில்லா அரா.

பாம்புக்கும் சந்திரனுக்கும் பகை, பாம்பு சந்திரனை மறைக்க முயலும். பகைவர்களாக உள்ள சந்திரனையும் பாம்பையும் அணிந்திருக்கின்றார் இறைவர். அவர் அணிந்துள்ள பாம்பானது இறைவரது திருமார்பில் உள்ள பன்றிக் கொம்பைப் பார்த்து, இதுவே பிறைச் சந்திரன் என்று எண்ணும். மறு நாள் திருமுடியில் உள்ள சந்திரனைப் பார்த்து இதுவே மதியென்று கருதும். மீண்டும் துணிவு பெறாமல் பன்றிக் கொம்பினை நோக்கி மருளும். இவ்வாறே மாறி மாறி நோக்கி, அறிவின்மையால் இதுவே பிறைமதி என்று இன்று வரையில் நிச்சயிக்க வில்லை என்று கூறும் நயம் எத்துணை நகைச் சுவை மிக்கது.


காரைக்கால் அம்மையார் முப்புரம் எரித்த முக்கட் பெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கயிலாய மலை சென்று நித்தனை நேரில் வழிபட வேண்டுமென்று நினைத்தார்.

அம்மையாருடைய பேய் வடிவைக் கண்டவர்கள் அஞ்சி ஓடுகின்றார்கள். அவ்வுருவத்தைக் கண்ட அவர்கள், நினைத்தபடியெல்லாம் பேசினார்கள். அவ்வுரைகளைக் கேட்ட அம்மையார், "அண்டர் நாயகனார் என்னை அறிவர்; அறியாத இவ்வுலக மாக்களுக்கு நான் எவ்வுருவானால் என்ன?" என்றார்.

மனத்தினும் மிக்க வேகத்துடன் வடதிசைத் தேயமெல்லாம் கடந்த அம்மையார், கயிலையை நண்ணினார். பரமன் மேவிய மலையைப் பாதத்தினால் மிதிக்க அஞ்சித் தலையினால் நடந்து சென்றார். அரிய அம்மலையைத் தலையினாலேயே நடந்து ஏறி இறைவர் அருகில் சென்றார்.

தலையினால் நடந்து சென்று
சங்கரன் இருந்த வெள்ளி
மலையின்மேல் ஏறும்போது
மகிழ்ச்சியால் அன்பு பொங்க
கலையிளந் திங்கட் கண்ணிக்
கண்ணுதல் ஒரு பாகத்துச்
சிலைநுதல் இமய வல்லி
திருக்கண்நோக் குற்ற தன்றே.

அம்மையார் சிலைநுதல் இமய வல்லியின் திருக்கண் பார்வை உற்றது. அதனைக் கண்டு அதிசயித்த அம்பிகை, பெருமானைத் தாழ்ந்து, "தேவதேவரே! தலையினால் நடந்து என்பு வடிவுடன் வரும் இவ்வுருவின் அன்புதான் என்னே?" என்று வினவினார்.



வரும் இவள் நம்மைப் பேணும்
அம்மைகாண்; உமையே! மற்றிப்
பெருமை சேர் வடிவாம் வேண்டிப்
பெற்றனள்'' என்று பின்னை
அருகுவந் தணைய நோக்கி
''அம்மையே!'' என்னும் செம்மை
ஒருமொழி உலகம் எல்லாம்
உய்யவே அருளிச் செய்தார்

''உமையே! வரும் இவள் நம்மைப் பேணும் அம்மையாகும். பெருமை மிக்க இவ்வடிவத்தை நம்பால் வேண்டிப் பெற்றனள்'' என்று கூறியருளினார்.

அங்கணன் ''அம்மையே!'' என்
றருள்செய ''அப்பா!'' என்று
பங்கயச் செம்பொற் பாதம்
பணிந்துவீழ்ந் தெழுந்தார் தம்மைச்
சங்கவெண் குழையினாரும்
தாமெதிர் நோக்கி ''நம்பால்
இங்குவேண் டுவதென்?'' என்ன
இறைஞ்சிநின் றியம்புகின்றார்

அருகு வந்த அம்மையாரை நோக்கி, அம்மா என்று இதுவரை அழைக்காத பிறப்பில்லாத பெருந்தகை, ''அம்மையே'' என்று இந்த உலகெலாம் உய்ய அழைத்தருளினார். ''அப்பரே!'' என்றார் திருஞான சம்பந்தர். ''அடியேன்'' என்றார் திருநாவுக்கரசர்.— இங்கோ அங்கணன் ''அம்மா'' என்று அழைத்தார். அம்மையார், ''அப்பா'' என்று பங்கயப் பாத மலரின் மீது பணிந்தார். அம்மையாரை நோக்கி, ''அம்மா! இங்கு நம்பால் வேண்டுவது யாது? கேள்!'' என்று அருள்புரிந்தார் அருட்ஜோதியண்ணல்.

இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டு கின்றார்
''பிறவாமை வேண்டும்; மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும்
வேண்டுநான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன்
அடியின் கீழ் இருக்க'' என்றார்

''அறவாழியந்தணரே! உம்மிடம் ஒருபோதும் நீங்காத இன்ப அன்பு வேண்டும்; பிறவாமை வேண்டும்; ஒருகால் பிறப்புண்டேல் உம்மை ஒரு போதும் மறவாமை வேண்டும்; நீர் ஆனந்தத் தாண்டவம் செய்யும் போது உமது திருவடியின் கீழ் மகிழ்ந்து பாடிக் கொண்டு நான் இருக்க வேண்டும்'' என்று வேண்டினார் அம்மையார்.

அம்மையார் கேட்ட வரங்களை நல்கிய இறைவர், ''தென்திசையில் தொண்டை வளநாட்டிலே பழனத்துடன் கூடிய பழையனூர் அருகில் திருவாலங்காட்டில் நமது திருநடனத்தினைக் கண்டு இன்புற்று எப்போதும் நம்மைப் பாடிக் கொண்டிரு'' என்று கூறிக் கருணை புரிந்தார். அவ்வாறு அருள் பெற்ற அம்மையார் விடையவர்பால் விடைபெற்று வணங்கிப் புறப்பட்டார். திருவாலங்காட்டுக்கு அருகில் வந்து அப்பதியைத் தாளால் மிதிக்க அஞ்சித் தலையினால் நடந்து சார்ந்தார்.

திருவாலங் காட்டில் எம்பிரான், அண்டங்களில் பொருந்தத் திருவடியைத் தூக்கி ஊர்த்துவத் தாண்டவம் செய்வதைத் தரிசித்து, மூத்த திருப்பதிகங்கள் இரண்டு பாடியருளினார். ஆக, அம்மையார் நான்கு நூல்களை அருளிச் செய்துள்ளார்.

அம்மையார் திருவாலங்காட்டில், அம்பலவாணரது ஆனந்தத் திருவடியின்கீழ் அருள் இன்ப வடிவமாக விளங்குவாராயினார். (தொடரும்)

நவீன வாழ்க்கைக்கு ஏற்றது நெஸ்கா:ஃபே



நெஸ்காஃபே மட்டும்தான் அலாதி
சுவையின்பத்தை அளிக்கவல்லது





5 விநாடிகளில் தயார்!
ஒரு முழு டீஸ்பூன் நெஸ்காஃபேயை கோப்பையில் போட்டு வெந்நீரை ஊற்றி ருசிக்கேற்றபடி சர்க்கரையும் பாலும் சேர்க்க வேண்டியது தான். காபி தயார்!

தேர்ந்தெடுக்கப்பட்ட தென்னிந்திய ப்ளாண்டேஷன் பீபெரி காபிக்கொட்டையைப் பதமாக வறுத்து அதன் இயல்பான மணம் கெடாமல் தயாரிக்கப்பட்டதுதான் நெஸ்கா:ஃபே — உடனே கரையக்கூடிய நூற்றுக்கு நூறு அசல் காபி! ஒரே சமயத்தில் தனித்தனியாக'ஸ்ட்ராங்'காகவோ 'லைட்'டாகவோ காபியைத் தயாரிக்கமுடிவதால் நெஸ்கா:ஃபே மிகவும் சிக்கனமானதும்கூட!

NESTLÉ
ஒரு நெஸ்லே தயாரிப்பு

NESCAFE*

நெஸ்கா:ஃபே — தனிச்சிறப்புள்ள தரமான காபி

*நெஸ்கா:ஃபே என்பது நெஸ்லேயின் இன்ஸ்டன்ட காபியைக் குறிக்கும் ரெஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க் ஆகும்

JWT-NCE-5144 A

பிணிதீர்த்த பாதிரி

கோவாவின் சரித்திரத்தில் ஓர் ஏடு

இன்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னதாக நடந்த கதை இது. கத்தோலிக்கப் பாதிரி ஒருவர். பெயர்: "பாட்ரி – அன்டோனியோ – ஜோஹை – டி – மிராண்டா."

கோவாவில் ஸால்ஸெட் பகுதியில் இவர் வீதி வீதியாகச் சென்று வீடு வீடாகக் கேட்டுப் பணம் பெற்று வந்தார். நன்கொடை கேட்டது ஒரு தர்ம ஆஸ்பத்திரியைத் தொடங்குவதற்காக. ஏழைப் பிணியாளர்களுக்கு உதவப் பலர் முன்வந்தார்கள். மனமுவந்து தங்களால் இயன்றதை அளித்தார்கள். ஆனால் மிகப் பெரும்பாலோர் பாதிரியார் பைத்தியக்காரத்தனமான காரியத்தில் இறங்கி யிருப்பதாகக் கேலி செய்தார்கள். தனி நபர் ஒருவர் நன்கொடைகள் பெற்றுத் தர்ம ஆஸ்பத்திரி கட்டுவதாவது? நடக்கிற காரியமா? அதெல்லாம் அரசாங்க அளவில் நடக்க வேண்டியவை என்று சொல்லிப் பரிகசித்து அனுப்பினார்கள். இவர்களில் ஒருவன் மார்கவ் நகரில் வாழ்ந்தவன். இவன் பாதிரியை ஏசி அனுப்பியது மட்டுமல்ல, அவர் முகத்தில் காறி உமிழவே செய்தான்.

அன்டோனியோ விசனத்துடன் அவன் வீட்டை விட்டு வெளியேறினார்.

1868-ம் ஆம் ஆண்டு அன்டோனியோ பாதிரி மார்கவ் நகரில் ஒரு சிறு குன்றின்மீது ஆஸ்பத்திரியைக் கட்டி விட்டார், கிடைத்த நன்கொடையைக் கொண்டு. நான்கு ஆண்டுகள் கழித்து இந்த மருத்துவ மனைக்கு அரசாங்க அங்கீகாரமும் கிடைத்து விட்டது.

ஒரு நாள் பாதிரி அன்டோனியோ ஏழைப் பிணியாளர்கள் யாரேனும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்களா என்று பார்ப்பதற்காக ஊரைச் சுற்றி வந்து கொண்டிருந்தார். உதவி தேவைப்படும் இடத்தைத் தேடிச் செல்வது அவர் வழக்கம்! இன்று எதிர்பாராத விதத்தில் அவர், முன்பு தம் மீது காறித் துப்பிய ஆசாமியையே பார்க்க நேர்ந்தது. அதுவும் எப்படிப்பட்ட நிலையில்? நோயினால் அவதிப்பட்டுக் கொண்டு, சொத்துக்களையும் பந்துக்களையும் இழந்து தன்னந் தனியே விடப்பட்ட நிலையில்!

அன்டோனியோ பாதிரி முன்பு நடந்ததை மறக்கவில்லைதான்; ஆனால் அதற்காக இன்று கடமையைச் செய்யத் தவறவில்லை அவர். இரக்கம் மேலிட்டவராய் அந்நோயாளியைத் தமது மருத்துவ மனைக்கு அழைத்துப் போய்த் தேவையான சிகிச்சைகளைச் செய்தார்.

இப்படிப்பட்ட ஓர் உன்னதமான தெய்வ மனிதரால் தொடங்கப்பட்ட இந்த மருத்துவமனைக்குப் பணத் தட்டுப்பாடு ஏற்படக்கூடாது என்பதற்காகப் பல ஆண்டுகளுக்குப் பிறகு, இந்தத் தர்ம காரியத்துக்கு லாட்டரிச் சீட்டு நடத்த அனுமதி அளித்தது கோவாவிய அரசாங்கம். 1927ல் லாட்டரிச் சீட்டினால் இந்தத் தர்மசாலைக்குக் கிடைத்த லாபம் இரண்டு லட்சம் ரூபாய். மருத்துவ மனையை அடுத்தாற்போல் ஏழைகளுக்கான ஒரு குடியிருப்பும் ஏற்படுத்தப்பட்டது. ஆண்டுதோறும் ஆயிரம் ஏழைகள் இந்த மருத்துவ மனையில் சிகிச்சை பெற வருகிறார்கள். இதில் ஜாதி மத வேறுபாடுகள் ஏதொன்றுமில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எத்தனையோ மருத்துவ மனைகள் இந்தியாவில் பல இடங்களிலும் உள்ளன. ஆனாலும் ஒரு தனி மனிதர் வீடு வீடாகச் சென்று எளிய மக்களிடம் சிறு தொகைகளாக நன்கொடைகள் கோரிப் பெற்று உருவாக்கிய தர்ம ஆஸ்பத்திரி கோவாவில் உள்ள இது ஒன்றுதான் என்றே துணிந்து சொல்லி விடலாம்.



ஜி.எஸ்.ஸெக்டண்ஹர்

இது தான்

கோ. வி. மணிசேகரன்

ஏழைமையிலும் ஒரு நிறைந்த மனம் இருக்கவேண்டும். இப்படியான ஒரு வாழ்க்கை ஒரு மனிதன்...

சே, சே! எல்லாம் பொய்யாய்ப் பழங் கதையாய்....

''சற்று நில்லுங்கள்...!''

எங்கு கேட்கிறது இந்தக் குரல்?

அதுவும் ஒரு நிறைந்த மனத்திலிருந்து தான். அதோ போய்க் கொண்டிருக்கிறானே, தண்டபாணி அவனை நோக்கித்தான் அந்தக் குரல் எழுந்தது. ஒரு நவயுக வாலிபன்தான் அழைத்தான்.

தண்டபாணி நின்று திரும்பிப் பார்த்தான். வறுமையின் நித்தியத் தாண்டவத்துடன் விளங்கிய தண்டபாணியை நெருங்கி வந்த அந்த நவயுக வாலிபன், ''நீங்கள்தானே அன்று 'மணிபர்ஸை' வீடு தேடிக் கொண்டு வந்து கொடுத்தவர்?'' என்று மிகப் பணிவாகக் கேட்டான். தண்டபாணிக்கு அது வியப்பாகவே இருந்தது. இந்தக் காலத்து நவயுக வாலிபர்களிடம் பண்பைத் தவிர மற்ற எல்லாம் உண்டு என்பார்களே! இவனிடம் அதுவும் இருக்கிறதே!

வியப்பு ஏற்பட்டதில் வியப்பு இல்லைதான்!

தண்டபாணி சற்றே சிந்தித்து ''தி. நகர் சரவண முதலித் தெருவில் கொண்டு வந்து ஒரு நாள் 'பர்ஸை'க் கொடுத்தேனே, அதைக் குறிப்பிடுகிறீர்களா?'' என்று வினவினான்.

நவயுக வாலிபனும் தலையசைத்துப் புன்முறுவல் பூத்தான்.

''ஆமாம்; அதற்கென்ன? மணி பர்ஸில் இருக்க வேண்டியதெல்லாம் சரியாகத்தானே இருந்தன?''

''மன்னிக்க வேண்டும். ஒரு தூசுகூடப் பர்ஸை விட்டுப் பறக்கவில்லை. நீங்கள் நடந்து கொண்ட அந்த நேர்மைக்காக உங்களுக்கு ஏதும் சன்மானம் தரவில்லையே என்று அப்பா வெகுவாகக் கடிந்து கொண்டார். அதே கவலையுடனும் இருக்கிறார். ஆகவே....!''

''ஆகவே...!''

''நீங்கள் தவறாக நினைத்துக் கொள்ளக் கூடாது. இந்த இருபத்தைந்து ரூபாயைப் பெற்றுக் கொள்ள வேண்டும். உங்களைத் தேடி இந்த ஒரு மாதகாலமாக அலைகிறேன். கடைசியில் மவுண்ட்ரோட்டில் சந்திக்க நேர்ந்தது!''

தண்டபாணியின் இதழ்களிலிருந்து ஒரு வெறுமை நிறைந்த சிரிப்பு உதிர்ந்தது.

''ஏன்? நீங்கள் அப்பாவைச் சந்தித்திருந்தால் இன்னும் அதிகமாகவே கொடுத்திருப்பார். இப்போதைக்கு என் கையில் இருந்ததைக் கொடுத்தேன். வாருங்கள் வீட்டுக்குப் போவோம்.''

தண்டபாணி தன்னைத்தானே ஒரு முறை நோக்கிக் கொண்டான். கிழிந்த நான்கு முழம் வேட்டி, ஒட்டுப் போட்ட சட்டை. அந்த நவயுக வாலிபனோ டுவீட் பாண்டும், டெரிலின் சட்டை, கழுத்தில் 'போ!' மீண்டும் ஒரு வெறுமை கலந்த சிரிப்பு.

''ஏன் இப்படிச் சிரிக்கிறீர்கள்?''

''உலகை நினைத்துத்தான், சார்...! நான் என்ன செய்து விட்டேன் என்று சன்மானம் தருகிறீர்கள்? தெருவில் கிடந்த ஒரு மணி பர்ஸை எடுத்தேன். அதில் நல்லவேளையாக மேற்புறம் முகவரி இருந்ததால் உரிய இடத்தில் கொண்டு வந்து சேர்த்தேன். இல்லையேல் போலீஸ் ஸ்டேஷனில் ஒப்படைத்திருப்பேன். இதற்கொரு சன்மானமா?''

எவ்வளவு எளிமையாகப் பேசிவிட்டான் தண்டபாணி! திருவல்லிக்கேணி எங்கே? தியாகராயநகர் எங்கே? பஸ்ஸுக்கும் பணமில்லாமல் கால் நடையாக அல்லவோ கொண்டுபோய்ச் சேர்த்திருக்கிறான்! அதுவும் மூவாயிரத்து நானூற்று ஏழு ரூபாய்; இந்து நயா பைசா!



""உங்களுடைய இந்த நேர்மையான மனத்துக்குச் சன்மானம்!''

""நேர்மை சன்மானம் பெறுகிறதென்றால் அது இந்த உலகை விட்டு ஓடிவிட்டதா?''

எத்துணை அப்பாவியாக இருக்கிறான் தண்டபாணி! நவயுக வாலிபன் தன்னையும் தன் வாழ்க்கையையும் நோக்கி இரு சொட்டுக் கண்ணீர் சிந்தினான். ஏழைமையில்தான் எத்துணை நிறைந்த மனம்!

''எனக்குப் பேசத் தெரியவில்லை. ஏதோ எம். ஏ. படித்து விட்டேன். தயவுசெய்து பெற்றுக் கொள்ளுங்கள்!'' என்று கூறி ஐந்து ஐந்து ரூபாய் நோட்டுக்களை நீட்டினான்.

''இது அதர்மமான கூலி. சன்மானமாகாது. தயவுசெய்து தொந்தரவு செய்யாதீர்கள். நான் வருகிறேன்!''

தண்டபாணி இரண்டடி நடந்தான். ''சற்று நில்லுங்கள்!''

அதே குரல்; நின்றான்.

''சன்மானமாக இதனைப் பெற வேண்டாம். ஒரு பெரிய மனிதர் மனமுவந்து கொடுத்த காணிக்கை. உங்கள் நேர்மை நெஞ்சம் இப்போது மறுக்காது; மறுக்கக் கூடாது என்று நினைக்கிறேன்.''

சிறிது நேரம் வரை கூர்ந்து கவனித்த தண்டபாணி, அந்த ஐந்து ரூபாய் நோட்டுக்களிலிருந்து ஓர் ஐந்து ரூபாய் நோட்டை மட்டும் எடுத்துக் கொண்டு வணக்கம் தெரிவித்து நடந்து கொண்டேயிருந்தான். மறு வணக்கம் தெரிவித்த அந்த நவயுக வாலிபன் வெறிக்க வெறிக்கக் கவனித்த வண்ணம் நின்று கொண்டிருந்தான்.



நீதி

மௌண்ட் ரோட்டிலுள்ள மெட்ரோ அச்சகத்தில் அச்சுக் கோப்பவனாகப் பணியாற்றி, அதில் வரும் வருவாயைக் கொண்டு நான்கு உயிர்களைக் காப்பாற்றி வருபவன், தண்டபாணி. கூழைக் குடித்தாலும் கடனில்லாமல் வாழ வேண்டும் என்ற கொள்கை உடையவன்; அதன்படி நடந்தும் வருபவன். ஆறாவது வகுப்பு வரைதான் படித்திருக்கிறான். ஆனால் உலகை நன்றாகப் படித்து வைத்திருந்தான். எத்தனை எத்தனை ஆசிரியர்களுடைய நூல்களை அவன் அச்சுக் கோத்திருக்கிறான்! அந்த ஆசிரியர்கள் தாங்கள் எழுதுகிறபடி நடக்கிறார்களோ இல்லையோ, அவன் நடத்திக் காட்டினான்.

காலையில் கைநீட்டிப் பெற்ற அந்த ஐந்து ரூபாய் சட்டைப் பையில் கனத்துக் கொண்டிருந்தது. அதைச் செலவழிக்கவே அவனுக்கு மனம் வரவில்லை. 'பெரியவருடைய காணிக்கை' என்ற சொல் அவனைக் கை நீட்ட வைத்துவிட்டது. அப்படியும் 'ஏன் வாங்கினோம்' என்றே அவனுடைய மனக் குரல் அடிக்கடி ஒலித்தது! அறிவு தெளிந்த நாள் முதல் அவன் மனச்சாட்சியை மீறி நடந்ததில்லை. இப்போது நடந்துவிட்டதாகவே நினைத்தான். மனத்தில் அதுவரை நிறைந்திருந்த எண்ணத்தில் ஏதோ ஒரு சிறு களங்கம் ஏற்பட்டு விட்டதாகவே நினைத்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டான்.

''தண்டபாணி! ஐயர் உன்னைக் கூப்பிடுகிறார்!'' — சக தொழிலாளி ஒருவன் குரல் கொடுத்தான். அவன் மீது அங்குள்ள அனைவருக்குமே ஒரு பற்று — பாசம் உண்டு. பிறருக்கு நன்மை செய்ய வேண்டும் என்பதில்லை. தீமை செய்யாமல் வாழ்ந்தாலே போதும். அவன் கோயிலுக்குக் கூடச் செல்ல வேண்டியதில்லையே!

ஐயரின் அருகே சென்று நின்றான்.

''சார்...! கூப்பிட்டீர்களாமே!''

முதலாளி அன்பாக அண்ணாந்து நோக்கினார். ''தண்டபாணி! நம் செல்வராசு இன்றைக்கு வரவில்லை. அந்த 'டென் பாயிண்ட் கேஸி'ல் இந்தப் புத்தகத்தை எடுத்து ஒரு 'பாரம்' முடியேன். நாளை இந்தப் புத்தகம் முடிந்தாக வேண்டும்!''

தண்டபாணி மலங்க மலங்க விழித்தான்.

''ஏன் இப்படி விழிக்க வேண்டும்?''

''மன்னிக்க வேண்டும் சார்! நான் உங்கள் பணியாளன். சொன்ன வேலையைச் செய்யக் கடமைப்பட்டவன். ஆயினும் இந்தப் புத்தகத்தை நான் 'கம்போஸ்' செய்ய மாட்டேன்.''

''ஏன்?''

''இதனால் உங்களுக்குத் தொல்லை வரப் போகிறது. இதில் இனக் கவர்ச்சி விஷயங்கள் அளவுக்கு மீறி இருக்கின்றன. ஒரு கொக்கோக நாவல். இதனால் உங்களுக்கு

50-ம் பக்கத்தில் உள்ள புதிர்களுக்கு விடைகள் :

1. அரவிந்தர்; பொன்வால் நரி.
2. அதிக பட்சம் 396தான் (இவைகளில் அநேகமாக எல்லாமே அஸ்ஸாம் காடுகளில் உள்ளன.)
3. டாக்டர் ஜான்ஸன்.
4. ஏறக்குறைய மூப்பது லட்சம் மடங்கு.
5. 22.
6. இத்தாலி.
7. ஜிம் கார்பெட்
௮. டோரா
9. சரி; ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் கணித ஆசிரியராக இருந்தவர்.

அபராதம் வந்தாலும் வரலாம். இதில் என் கைபடுவதால் அந்தப் பாவம் என்னையும் சாருமல்லவா?''

இப்போது ஐயர் மலங்க மலங்க விழித்தார். ''உண்மையாகவா சொல்கிறாய்?''

''என் கருத்தைச் சொன்னேன்!''

''ஏழு பாரங்களுக்கு மேல் அடிபட்டாய் விட்டதே! எவ்வளவு நஷ்டம்!''

தண்டபாணி தலை குனிந்து கொண்டே நின்றான். எதையோ நினைத்துக் கொண்ட ஐயர், ''தண்டபாணி!'' என்று உரக்கக் குரல் விடுத்தார். ''ஆன நஷ்டம் ஆகி விட்டதில் கவலையில்லை. மான நஷ்டம் ஏற்படாமல் தப்பியதே! அந்த மட்டில் சந்தோஷம்! அடிபட்ட பாரங்களை மொத்தமாகச் சேர்த்துக் கட்டி வை! கம்போஸை நிறுத்திவிடலாம். நீ உன் வேலையைக் கவனி!''

தண்டபாணி இரண்டடி எடுத்து வைத்தான். மீண்டும் ''தண்டபாணி!'' என்று அழைத்தார் ஐயர். ''இன்று முதல் நீ வருகிற கையெழுத்துப் பிரதிகளின் மேற்பார்வையாளனாக இரு! நம்ம பிரஸ் மானத்தைக் கெடுக்கக் கூடியதாக இருந்தால் மறுத்து விடு. உனக்கு ஐந்து ரூபாய் சம்பளம் உயர்த்தி யிருக்கிறேன்.''

மட்டற்ற மகிழ்ச்சி யடைந்தான் தண்டபாணி. அவனுக்குக் கிடைத்த அந்த ஐந்து ரூபாய் நியாயமானதாகப் பட்டது. அவன் வாழ்ந்த வாழ்க்கைக்கு அதுவே தக்க சன்மானமாகத் தெரிந்தது.

செந்தூரப் பொடிகளைத் தூவிய வண்ணம் செங்கதிரோன் சிந்து பாடிக் கொண்டிருந்தான் மேற்கு வானில்! மாலை வேளையில் சென்னை மாநகரம் மஞ்சளை கதிரில் விளங்கியது. அலுவலகப் பணியை முடித்துக் கொண்ட தண்டபாணி வெளியில் வந்து கைகால்களை ஒரு முறை உதறிவிட்டு நடக்கலானான். சட்டைப் பையில் கனத்துக் கொண்டிருந்த ஐந்து ரூபாய் நோட்டு மட்டும் சிந்தனையை இன்னும் குழப்பிக் கொண்டு தான் இருந்தது.

எதிரே ஒரு திரைப்படக் கொட்டகை தெரிந்தது. புதியதாக வெளியிடப்பட்ட படமானாலும் கூட்டம் மிக மிகக் குறைவாகத்தானிருந்தது. ''இதுதான் நீதி'' என்பது அந்தப் படத்தின் பெயர்! கூட்டம் எப்படி இருக்க முடியும்?

அந்தப் படத்தைப் பார்க்க வேண்டும் போல் ஆசையாக இருந்தது தண்டபாணிக்கு. என்னதான் நீதி என்பதைத் தான் தெரிந்து கொள்வோமே!

கொட்டகையுள் நுழைந்தான். கடைசி நுழைவுச் சீட்டுக்கான அறை காலியாகவே இருந்தது. சட்டைப் பையில் ஐந்து ரூபாய்! இந்தப் பணத்தின் முதல் செலவை இந்தப் படத்துக்குச் செய்வோமே! இதுதான் நீதி!

அந்தச் சமயத்தில் —

கொட்டகைத் தலைவாசலில் நின்று கொண்டிருந்த இரு உருவங்கள் அவனுடைய கண்களில் பட்டன; ஆமாம், காலையில் சந்தித்து ஐந்து ரூபாய் நோட்டைக் காணிக்கை என்ற பெயரால் கொடுத்து விட்டுச் சென்ற அந்த நவயுக வாலிபன்தான்? உடன் நிற்பது...? ஒரு பெண்.

''சார்! சினிமாவுக்கு வந்தீர்களா?'' என்றான் தண்டபாணி அவர்களை நெருங்கிச் சென்று அமைதியான குரலில்.

அந்த நவயுக வாலிபன் சுரத்தில்லாமல், ''ஆமாம்!'' என்றான்.

''ஏன்? டிக்கட் கிடைக்கவில்லையா?''

''அது ஏராளமாக இருக்கிறது. கையில் பணம்தான் இல்லை.''

''என்ன சார் சொல்கிறீர்கள்?''

''உலகில் உங்களைப் போலவே எல்லாரும் இருந்து விட முடியுமா? பஸ்ஸில் வரும் போது எவனோ என் மணிபர்ஸை ஜேப்படி செய்து விட்டான்.

மனிதர்களை நினைத்து வெட்கிய ஒரு ஞானச் சிரிப்பைச் சிந்திய தண்டபாணி, ''சார்! கொஞ்சம் பொறுங்கள்! இதோ வந்து விட்டேன்.'' என்று கூறிவிட்டு உள்ளே சென்றான். ஒரு நிமிட நேரம் கூட இருக்காது. அவன் வெளியே வந்தான். அவனுடைய கையில் இரண்டு இரண்டரை ரூபாய் நுழைவுச் சீட்டுகள் இருந்தன. ''இதைப் பெற்றுக் கொள்ளுங்கள் சார்!''

நவயுக வாலிபன் திருதிருவென்று விழித்தான். காலையில் வாங்க மனமில்லாமல் வாங்கிக் கொண்ட அந்த ஐந்து ரூபாய் கடைசியில் தன்னிடமே வந்து விட்டதை நினைத்து வியந்து போனான். உண்மையில் எதிரே நிற்பவன் ஒரு மகா மனிதன்தான்!

''வாங்கிக் கொள்ளுங்கள் ஸார்!''

நுழைவுச் சீட்டுக்களைக் கையில் திணித்தான் தண்டபாணி!

''இது....'' நவயுக வாலிபனுடைய வாயிலிருந்து மேலும் சொற்கள் வெளிப்படவில்லை. தண்டபாணி முடித்தான்: ''இது தான் நீதி!''

'நீங்கள் படம் பார்க்கவில்லையா?' என்று கேட்க வாய் திறந்தான் அந்த நவயுக வாலிபன். அதற்குள் அவனுடைய மனம் பதில் சொல்லி விட்டது. 'இப்படியான மனிதர்களுக்கு இந்தப் படத்தைப் பார்த்து ஆகப்போவது என்ன?'

தண்டபாணி நடந்து கொண்டே இருந்தான். ஒரு பெரிய பாரம் நீங்கியது போன்ற பெருமிதம் அவனுடைய நடையில் தென்பட்டது!

இன்னும் ஐந்து வருடங்களில்

உங்கள்  குழந்தைகளுக்கு

போதுமான அளவு உணவு கிடைக்குமா?

இன்று நாட்டில் நடப்பதென்ன?

கடந்த 5 வருடங்களில் உணவு நிலைமை எப்படி படிப்படியாக சீரழிந்து வந்திருக்கிறது என்பதைப் பாருங்கள்.

வருடம்	உணவு பற்றாக்குறை
1962	35 லட்சம் டன்
1963	46 லட்சம் டன்
1964	53 லட்சம் டன்
1965	75 லட்சம் டன்
1966	110 லட்சம் டன்

கடந்த 5 ஆண்டுகளில் உணவு பற்றாக்குறை மும்மடங்காகப் பெருகிவிட்ட
அடுத்த 5 ஆண்டுகளில் என்ன நடக்கும் என்று உங்களை நீங்களே கேட்டுப்பார்த்துக் கொள்ளுங்கள்.

இதற்கு நீங்கள் செய்யக்கூடியது என்ன? சுதந்திரா கட்சிக்கே வோட் செய்யுங்கள்

சுதந்திராக் கட்சி என்ன செய்யும்?

* விவசாயத்தை மதிக்காத, அரும்பெரும் திரவிய சாதனங்களை விரயமாக்கும் செலவுமிக்க திட்டங்களை ஒழிக்கும்.
* விவசாயிக்கு நியாயமான விலையில் விதை, ரசாயன உரம் மற்றும் பாசனத்துக்கு நீர் கிடைக்க வழி செய்து ஊக்குவிக்கும்.
* விவசாயியினுடைய நில உரிமையைப் பாதுகாக்கும்.
* விவசாயி உற்பத்தி செய்யும் பண்டங்களுக்கு சந்தையில் நியாயமான விலை கிடைக்க வழி செய்யும். அதே சமயம் கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் வாழும் ஏழைகளுக்கு மலிவான விலையில் உணவுப் பண்டங்கள் கிடைக்கவும் வழி செய்யும்.
* உணவுப் பண்டங்களின் போக்குவரத்துக்கு மண்டல மற்றும் இதர தடைகளை நீக்கிவிடும்.
* லெவியை ரத்து செய்யும்.


அடுத்துவரும் பொதுத்தேர்தலில் நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்?

வோட் செய்வதற்கு முன் நன்றாக யோசனை செய்து இந்த வாய்ப்பை சரியானபடி பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

5 வருடங்களுக்குப் பிறகு காலம் கடந்துவிடக்கூடும்

சுதந்திரா கட்சிக்கே வோட் செய்யுங்கள்





Nital

MEDICATED PIMPLE CREAM

(நிடால் முகப்பரு க்ரீம்)

குறைந்த விலை

கிருமிநாசினி கலந்த நிடால் உங்களுடைய சருமத்தை சிரமமின்றி சுத்தப்படுத்துகிறது. டாக்டர்களால் சிபாரிசு செய்யப்படுகிறது. இனிமையான மணம் நிறைந்தது.

மருந்து கலந்த நிடால் முகபபரு க்ரீம் உங்கள் சருமத்தில் தோன்றும் பருக்களை ஒருவித அபாயமுமில்லாமல் அகற்றி விடுகிறது. சருமத்துக்கும் பாதுகாப்பளிக்கிறது. சருமத்தின் அடித்தளம்வரையில் இறங்கி கிருமிகளை நாசம் செய்து விடுகிறது. பருக்கள் உலர்ந்து உதிர்ந்து விடுகின்றன. சொட்டையோ, தடமோ பின்பு எதுவும் இருக்காது.

யௌவனத்தின் பொலிவை மிகைப் படுத்துவதாலும், சருமத்தின் சுகாதாரத்தை அபிவிருத்தி செய்து பிரகாசப் படுத்துவதாலும் நிடால் முகப்பரு க்ரீம் ஆண்களோ, பெண்களோ, யாவருக்கும் மிகவும் ஏற்றது.

உபயோக முறை டப்பாவில் அடங்கியுள்ளது.

7 நாள் முகப்பரு சிகிச்சை

தயாரிப்போர்:

கொச்சின் பாம் பிரைவேட் லிட்
நவரத்ன ஹவுஸ், மந்த்ரா ரோடு
கொச்சி - 2

சென்னை, மைசூர், ஆந்திர, கேரள பிரதேசங்களுக்கு பிரத்யேக விநியோகஸ்தர்கள்:
கணபதி & கம்பெனி, 103-104, லிங்கி செட்டி தெரு, த. பெ. 1986, சென்னை 1.

எல்லா பிரபல மருந்து கடைகளிலும் கிடைக்கும்

தெளிவு

ஸரோஜா ராமமூர்த்தி

வெளியே செல்லும்போது தெளிந்த மனத்தினராகச் சென்ற பாலகுரு குழப்பத்துடன் வீடு திரும்பிக் கொண்டிருந்தார். அவர் சிந்தனையை அப்படிக் குழப்பி விட்டவர் அவருக்கு நெடுநாட்களாகப் பரிச்சயமான நண்பர் நாகசாமிதான். நாகசாமி இன்ஷூரன்ஸ் ஏஜண்ட் மட்டுமல்ல. பல தொழில்களைச் செய்பவர். கல்யாணத் தரகரும் கூட. அவருக்கும் கிட்டத்தட்ட பாலகுருவின் வயதிருக்கும். அதாவது ஐம்பத்தொன்று இருக்கலாம். மேம்பாலத்தில் இருவரும் எதிரும் புதிருமாகச் சந்தித்துக் கொண்டனர்.

''என்னய்யா?'' என்று கேட்டுப் பாலகுரு தம் பற்கள் பளிச்சிட அவரைப் பார்த்துச் சிரித்தார்.

''சும்மா இப்படிப் பொழுது போகலே. பட்டாணியாவது வாங்கிக் கொறிப்போமேன்னுதான். உமக்கென்னய்யா கட்டைப் பிரம்மச்சாரி. வீடு, வாசல், பெண்டாட்டி, பிள்ளை, ரேஷன் கிஷன்னு பிக்கல் பிடுங்கல் இல்லே. போன வருஷம் முதல் பிரசவம் ஆகி ஊருக்குப் போன பெண் திரும்பவும் பிரசவத்துக்கு வர அடி போடுகிறாள். விலைவாசி ஏற்றத்திலே......'' என்றார் நாகசாமி.

பாலகுருவுக்கு அன்று காலையிலிருந்து மனம் கொஞ்சம் அப்படியும், இப்படியுமாகத்தான் இருந்தது. அந்தச் சுமையை இறக்கத்தான் உலாவிவிட்டு வரலாமென்று கிளம்பினார் அவர்.

''என்னய்யா! ஒன்றும் பேசலே?'' நாகசாமி சீண்டினார் மறுபடியும்.

''உம்ம பாடுதான் தேவலே நாகசாமி. பிக்கலோ, பிடுங்கலோ அதிலே ஒரு நிறைவும், சுகமும் இருக்கு பாரும். என்னைப் போல மனுஷன் இருக்கக் கூடாது. எப்பவாவது நீ எங்காவது ஒரு தனி மரத்தைப் பார்த்திருப்பியே. பொட்டல் வெளியிலே ஒண்ணே ஒண்ணு, 'ஹோ'ன்னு நின்னுண்டிருக்கும். அப்படி நிக்கறேன் நான்.....''

நாகசாமி வியப்பு மேலிடப் பாலகுருவைப் பார்த்தார். மனுஷன் சாதாரணமாக இப்படியெல்லாம் பேச மாட்டாரே என்கிற வியப்புதான். ''என்ன அப்படிச் சொல்லிவிட்டீர்கள்?'' என்றார் திகைப்புடன்.

''அப்படித்தான் வச்சுக்குங்களேன். மொத்தத்துலே 'லைப்' டல் அடிச்சுப் போச்சு! இத்தனை நான் இல்லாம் என்னையே எனக்குப் பிடிக்கலே. ஏதோ கடை வியாபாரத்திலே மாசம் இருநூறு ரூபாய் வறது. மேலே கூடத் தேறும். தங்கை பையனைக் கடையைக் கவனிச்சுக்கப் போட்டப்புறம் இருநூறே உதைக்குது. பையன் 'ப்ரீயா'ப் பணத்தை ஆளுகிறான். போகட்டும். எனக்குன்னு என்ன செலவு சொல்லு? எல்லாம் தம்பிக்கும், அவன் குழந்தைகளுக்கும்தான். தம்பி பெண்டாட்டி முன்னே இருந்த மாதிரி இல்லே. கையிலே ரூபாயைப் பார்த்தால் முகம் மலருது. இல்லேன்னா ஒரு தினுசுதான். 'மிளகு ரசம் வைக்கச் சொல், உங்க அம்மாவிடம்' என்றேன், தம்பி பெண் பாப்பாவிடம். அது சொல்லியதோ இல்லையோ, அவள் ரசமே வைக்கலே. நானும் போனாப் போறதுன்னு இருந்திருப்பேன். என்னமோ கோபம் வந்துட்டுது. 'குழந்தை சொல்லியிருப்பா. இந்த வீட்டிலே கவனிப்பு அவ்வளவுதான்'னுட்டேன்! அவளுக்குக் கோபம் வந்துட்டுது. 'நன்னா கவனிக்க ஒருத்தியைக் கல்யாணம் பண்ணிண்டிருக்கணும். நான் என்ன, எல்லாருக்கும் வடிச்சுக் கொட்டத்தான் இருக்கேனா?' என்றாள்....''

பாலகுருவின் விழிகளில் நீர் பளபளத்தது. மேல் துண்டினால் கண்களை ஒற்றி எடுத்தார்.

நாகசாமி கடகடவென்று சிரித்தார்.

''ஓய்! ரொம்ப லேட்டாகக் கலியாண யோசனை வந்திருக்கிறது உமக்கு. பரவாயில்லை. இத்தனை நாள் ஏதோ ஒரு யோசனையில் இருந்து விட்டீர்....'' என்றபடி ஜேபியிலிருந்த பர்ஸை எடுத்து அதனுள்ளிருந்து ஒரு புகைப்படத்தை எடுத்தார்.

''இந்தா, பாலகுரு! இதைப் பார் பளிச்சென்று பதில் சொல். பிடிச்சிருக்கு, இல்லேன்னு. மசமசன்னு ஆராய்கிறதெல்லாம் ஒரு வயசோட நிறுத்திக்கணும். அழகு, பாட்டு, படிப்பு எல்லாம் இளவட்டங்கள் பார்க்கிறது. உனக்கு ஒரு துணை வேண்டும். வறண்டு போன நிலத்தில் நீர் தெளிக்கிற மாதிரி, வெறிச்சோடிக் கிடந்த வீட்டில் தத்துப் பிள்ளை சீராடுகிற மாதிரி ஒரு துணை. அவ்வளவுதான்.....''

பாலகுரு புகைப்படத்தைக் கையில் வாங்கிப் பார்த்தார். வட்ட வடிவமான பருத்த முகம். எடுப்பான நாசிதான். ஆனால் கன்னத்துச் சதையில் புதைந்திருந்ததால் அதன் அழகு அவ்வளவாகத் தெரியவில்லை. கண்களும் அப்படித்தான். ஆனால் அவற்றில் ததும்பும் ஏக்கம்?





காலமெல்லாம் வாழ்க்கை மலரும் என்று எதிர்பார்த்துப் பார்த்து ஏமாற்றமடைந்த நோக்கு அதில் தெரிந்தது. பெண் — அப்படிச் சொல்லுவது தவறு — அந்த அம்மாள் என்று குறிப்பிடுவது பொருந்தும் ' என நினைக்கிறேன். ரொம்பச் சுமார்தான்.

பாலகுருவுக்கு ஐம்பதுக்கு மேல் வயசாகியிருந்தாலும் பார்ப்பதற்கு நன்றாக இருப்பார். களையான முகம். பெரிய கண்கள். பிரும்மச்சரியத்தாலும், கபடமற்ற தன்மையாலும் குழந்தை போன்ற முகத்தைப் படைத்தவர்.

''என்னய்யா?'' என்று அவருடைய சிந்தனையைக் கலைத்தார் நாகசாமி.

பாலகுருவையும் வெட்கம் வந்து சூழ்ந்து கொண்டது. 'எனக்கா கல்யாணம்? எனக்கேதானு? ஏன், நான் கல்யாணம் பண்ணிக் கொள்ளக்கூடாதா என்ன? இத்தனை காலம் தேவையற்றதாக இருந்த ஒரு தேவை காலம் கடந்து தலைநீட்டுகிறதோ?'

சட்டென்று ஏற்கனவே திருமணமாகி மூன்று குழந்தைகளுக்குத் தகப்பன் ஆகிவிட்ட தம்பி தியாகுவும், தங்கை பிள்ளை சேகரும் அவர் முன்பு தோன்றினார்கள்.

சேகர் ஆறேழு வருஷங்களாகப் பெண்ணைச் சல்லடை போட்டுச் சலித்து. இது சொத்தை, அது சொன்னை என்று ஒதுக்கி வருகிறவன். பிரும்ம சிருஷ்டியில் எந்தப் பெண்ணிடமும் அழகு ஒட்டிக் கொண் டிருப்பதாக அவன் நினைக்கவில்லை. ஒருவேளை நிழல் உருவத்தில் காணும் திரை மோகினிகளைப் பற்றியே அவன் கனவு காண்பவனாக இருக்கலாம்.

''என்னய்யா பாலகுரு? பிரமாதமா யோசனை பண்றீரே. பெண்ணுக்கு வேலை இருக்கு... அந்தப் பணத்தை வச்சு நீங்கள் பிஸினஸ் பண்ணலாம்...''

பாலகுரு தம் தலையைப் பலமாக உலுக்கி விட்டுக் கொண்டார்.

அவருடைய சேவை, இலட்சியமெல்லாம் விலகி அவர் மனத்தில் ஆசைக் கனல் பற்ற ஆரம்பித்தது.

''போட்டோவை நான் வீட்டுக்கு எடுத்துக் கொண்டு போறேன். தம்பிகிட்டே காட்டறேன். என்ன சொல்கிறான் பார்ப்போம்...''

''பார்க்கிறதென்ன, கேட்கிறதென்ன? இத்தனை காலமா நீங்க அவன் குடும்பத்துக்குச் செய்யலையா? சின்னவனைப் படிக்கவைக்கலையா? வீட்டிலே எதுவானாலும் நீங்கதானே பார்த்துண்டீர்? உம்மைப் பத்தி யாராவது நெனைக்கப் பார்த்ததுண்டா? உம்மைப் பத்தி நீரேதான் நெனைக்கணும் என்று உமக்குத் தெரியலை. சொல்கிறதையாவது கேட்டுத் தொலையும்....''

வாசல் பெஞ்சியில் தியாகுவின் பெண் பெரியவள் ஏதோ எழுதிக் கொண்டிருந்தாள். அவளுக்குப் பத்து வயசிருக்கும். மற்றப் பிள்ளைகளில் ஒருவன் கூடத்தில் உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்தான். இன்னொன்று குழந்தை. தியாகுவும், அவன் மனைவி உமாவும் சமையலறையில் கெகிகெவென்று ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள். இந்த இலை மறைவு காய்மறைவு பாலகுருவுக்கு ஒன்றும் புதிதல்ல. அதையெல்லாம் அவர் தம் வாழ்க்கையில் கவனித்தவரே யில்லை. ஏதோ வருவார், உமா கொடுத்ததைச் சாப்பிடுவார், போய் விடுவார்.

தம்பதியின் அந்தரங்கமான பேச்சு அவர் மனத்தில் சலனத்தை எழுப்பியது. கன



வனும் மனைவியும் எத்தனை குழந்தைகளுக்குப் பெற்றோர் ஆயினும் தமக்குள்ளாக ரகசியம் பேசிக் கொள்வது சகஜம் என்பதைப் புதிதாக உணர்ந்தவர்போல் நடையைச் சற்றுத் தளர்த்தியவாறு வெளியே சென்றார்.

''அம்மாவ்! பெரியப்பா வந்துட்டா. பெரியப்பா வந்துட்டா'' என்று கத்தியவாறு மூன்று வயசுக் கண்ணன் கூடத்தில் கையைத் தட்டிக் கொண்டு குதித்தான்.

பாலகுருவும் விசுக்கென்று திரும்பிக் கூடத்துக்கு விரைந்தார். ஆனால் அவர் சமையலறை வரைக்கும் வந்துவிட்டுத் திரும்பிப் போகிறார் என்பதை வேகமாக



நடை போட்ட அவர் கால்கள் தெளிவு படுத்தின.

தியாகு விநாடியில் கொல்லைப் பக்கம் சென்று வாசல் வழியாகத் தோட்டத்துக்குள் புகுந்து கொண்டான்.

உமா போர்த்திய தலைப்புடன் சூடாகப் பால் எடுத்துக் கொண்டு வந்து மேஜைமீது வைத்துவிட்டு, ''உங்களுக்குச் சாயந்திரம் தபாலில் ஒரு கடுதாசி வந்திருக்கண்ணா'' என்றபடி மேஜை டிராயரை இழுத்துக் கடிதத்தை எடுத்து அவரிடம் கொடுத்தாள்.

கடிதம் வழக்கம் போல வியாபாரம் சம்பந்தப்பட்டதுதான். அவர் வைத்திருக்கும் கடைக்காகச் சரக்கைப் பற்றி யாரோ எழுதியிருந்தார்கள். ஒன்றும் சுவாரஸ்யப்படவில்லை. நாகசாமி கிளறிவிட்ட மனம் இன்னும் அடங்காமல் பரபரத்துக் கொண்டிருந்தது.

''ராத்திரிக்கு என்ன பண்ணட்டும்?'' உமா பரபரக்கும் அவர் பார்வையை வியப்புடன் பார்த்தவாறு கேட்டாள். பாலகுரு அப்படிப் பரபரத்து அவள் பார்த்தவளல்ல.

''என்னைக் கேட்டால் எனக்கு ஒன்றுமே வேண்டாம். எனக்குப் பசிக்கவில்லை.'' வார்த்தைகள் சுரத்தில்லாமல் வெளிவந்தன.

தெருவில் விளையாடிக் கொண்டிருந்த கண்ணன் உள்ளே ஓடி வந்து அவர் காலைக் கட்டிக் கொண்டான். ''எங்கே பெரியப்பா, எனக்குப் பப்பர்மிட்டு, சாக்லேட்டெல்லாம்? பெரிசாச் சொல்லிட்டுப் போனியே'' என்றவாறு, அவர் ஜேபிகளில் கைவிட்டுத் துழாவிப் பார்த்தான்.

மற்ற நாட்களாக இருந்தால் பாலகுரு அவனை அப்படியே அலாக்காகத் தூக்கிக் கொண்டு கடைத் தெருவுக்குப் போவார். இன்று அவர் மனம் உணர்ச்சிகளால் விம்மித் தூர்த்துக் கொண்டிருந்தது.

''போடா! உனக்கு எப்பப் பார்த்தாலும் தீனிதான்! போய் விளையாடு. இல்லே, உன் அப்பனை வாங்கித் தரச் சொல். இங்கே



என்ன கொட்டியா வச்சிருக்கு?'' என்று எரிந்து விழுந்தார்.

உமா ஒரு தினுசாக அவரைப் பார்த்துக் கொண்டு உள்ளே போனாள். போனவள் கதவை ஒருக்களித்து வைத்துக் கொண்டு கண்ணனைப் பார்த்துப் பல்லைக் கடித்து, ''இங்கே வாடா, சனியன்'' என்று உதட்டை மடக்கி அழுத்த வார்த்தைகளை விழுங்கியபடி வசவை முகத்தில் தேக்கி வெளியிட்டாள்.

கண்ணன் பெரியப்பாவை உதறிக் கொண்டு உள்ளே ஓடினான்.

பாலகுரு புறக்கடைப் பக்கம் சென்று கைகால்களைக் கழுவிக் கொண்டு உள்ளே வந்தார். வழியில் பூஜையறையில் முத்துப் போல் குத்துவிளக்குச் சுடர் பரப்பிக் கொண்டிருந்தது. சந்தன வத்தியின் புகை ஸ்ரீராமபிரானின் படத்துக்கு மேல் தவழ்ந்து மல்லிகைச் சரத்தின் வாசனையுடன் கலந்து மணத்தது.

மற்ற நாட்களில் பாலகுரு பூஜையறைக்குச் சென்று விபூதி அணிந்து அன்னபூர்ணாஷ்டகத்தைப் பாட ஆரம்பித்து விடுவார்.

அன்று அவர் மனம் குரங்கின் கை மாலை போல் சீரழிந்து கொண்டிருந்தது. கள்ள மற்ற பச்சைப் பாலகனாகிய கண்ணனிலிருந்து, தெருவில் படிக்கும் தம்பிப் பெண் பாப்பா, தம்பி மனைவி உமா மட்டும் அவர் மனத்தில் கசப்பை மூட்டவில்லை. தெய்வமும் கசந்து வழிந்தது அவருக்கு!

பூஜையறைக்கு முன்னால் தயங்கியபடி நின்றவர் ஏதோ ஒரு வைராக்கியத்துடன் வாசலுக்குச் சென்று சாய்வு நாற்காலியில் பொத்தென்று சாய்ந்து கொண்டார்.

எதிரே பாப்பா இருந்ததை அவர் கவனிக்கவில்லை. பள்ளிக்கூடப் பாடங்களை எழுதிக் கொண்டிருந்த அந்தச் சிறுமி பெரியப்பாவின் வழக்கத்துக்கு மாறான 'அமைதி'யைப் பார்த்து அதிசயித்தாள். பிறகு மெல்ல அவருடன் ஒட்டி உட்கார்ந்து சாக்லேட்டுக்காக அவர் ஜேபியைத் துழாவினாள்.

அவள் கைகளில் அந்தப் போட்டோ அகப்பட்டுக் கொண்டது. அதிலிருந்தவளை யாரென்று அவளுக்குப் புரியவில்லை.

''பெரியப்பா! இது யார் போட்டோ?'' என்று உரத்து அந்தப் பெண் கேட்டவுடன் உணர்வு திரும்பியவர் போல் பாலகுரு விழித்துக் கொண்டார்.

''போ....போட்டாவா? அதுவா? அது வந்து... ஒரு பொண்ணுது...''

''பொண்ணுதா?'' என்றவாறு கடகட வென்று சிரித்தாள் பாப்பா. ''இவ்வளவு பெரியவள் எப்படிப் 'பெண்ணாக' இருக்க முடியும்? மாமி மாதிரி இருக்கிறாளே!''

''ஆமாண்டி பாப்பா! அவ பொண்ணு தான். இன்னும் கல்யாணம் ஆகலே. கல்யாணம் ஆகாதவரை 'பொண்ணு'ன்னு தானே சொல்லுவா?''

பாப்பா போட்டோவை வியப்புடன் பார்த்துக் கொண்டே, ''இவளுக்கா இன்னும் கலியாணம் ஆகலே? ஊஹூம்! நான் நம்ப மாட்டேன் பெரியப்பா...எங்கம்மாவை விடப் பெரியவளா இருக்கா? ஏன் இன்னும் கல்யாணம் பண்ணிக்காம இருக்கா?'' என்று கேள்விகள் கேட்க ஆரம்பித்தாள்.

பாலகுருவுக்கு ஆத்திரமும் கோபமும் வந்தன. ''என்னடி கெக்கெ பிக்கென்னு சிரிப்பு? நான் அவளைத் தாண்டிக் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்... ஆமாம்...''

''ஹாய்யா! பெரியப்பாவுக்குக் கல்யாணம்! ஹாய்யா! பெரியப்பாவுக்குக் கல்யாணம்'' என்று குதித்துக் கத்தியவாறு உள்ளே போட்டோவுடன் ஓடினாள் பாப்பா.

பாப்பாவின் இரைச்சலைக் கேட்ட தியாகு புறக்கடைப் பக்கமாகவே உள்ளே வந்தான். இத்தனை நேரம் செடிகளைக் கிளறிக்கொண்டிருந்தான் என்பதற்கு அடையாளமாக அவன் கைகளில் மண் ஒட்டிக் கொண்டிருந்தது. அதைத் தட்டிவிட்டபடி பாப்பாவின் கையிலிருந்த போட்டோவை எட்டிப் பார்த்தான் ஆவலுடன்.

உமா உதட்டைச் சுழித்து முகத்தைத் தோளில் இடித்துக் கொண்டே கணவனைத் திரும்பிப் பார்த்தாள். அவனும் அவளைப் பார்த்துக் குறும்புத்தனமாகச் சிரித்தான். பிறகு, ''என்ன இது உமா? வேடிக்கையாக இல்லை?'' என்று கேட்டு வைத்தான்.

''வேடிக்கையா? நல்ல கூத்து போங்கள்! நாற்பதுக்கு மேலே நாய்க் குணம். உங் கண்ணாவுக்கு ஐம்பதுக்கு மேலே ஆச்சு. கொஞ்சம் அச்சுப் பிச்சுத்தான்!''

''கொஞ்சம் அச்சுப் பிச்சா? இதென்ன வெட்கக்கேடு. சேகர் கல்யாணத்துக்கு நிற்கிறான். அவனுக்குப் பெண் பார்த்துப் பண்ணி வைக்காமல் தமக்குப் போய்ப் பார்த்துக் கொண்டு வந்திருக்கிறாரே...''

இவ்வளவு பேச்சும் மிகவும் மெதுவாகப் பேசப்பட்டன. சில நயன பாஷைகளில் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

பாலகுருவுக்கு உலகமே புதுமையாகவும் விந்தையாகவும் காட்சி தந்தது. எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு மலர்ந்து, காய்த்துப் பழுத்திருக்க வேண்டிய எண்ணம் காலம் கடந்து தம் நெஞ்சில் விதைக்கப்பட்டுச் சடுதியில் வளர்ந்து பூத்துக் காய்த்து விட்டதே என்று அவர் வியந்து கொண்டே குறுகுறுப்புடன் உட்கார்ந்திருந்தார்.

கூடத்து மணி எட்டடித்து ஓய்ந்தது. தியாகு ஏதோ குற்றம் புரிந்தவன் போல் சுவரைப் பார்த்துக் கொண்டே வாசல் பக்கம் சென்றான். திரும்பவும் உள்ளே போனான். உமா உள்ளிருந்தபடி குழந்தைகளைச் சாப்பிட அழைத்தாள்.

பாப்பாவும் குழந்தைகளும் பெரியப்பாவை ஆசையுடன் பார்த்துக் கொண்டே உள்ளே சென்றார்கள். பெரியப்பா பெரிய மனசு பண்ணிக் கல்யாணம் பண்ணிக் கொள்கிற தனால்தானே அவர்களுக்குச் சமீபத்தில், மகிழ்ச்சிகரமான ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் வாய்ப்புக் கிட்டப்போகிறது?

தியாகு வழக்கம்போல் ''என்னண்ணா! நீ சாப்பிடவில்லையா?'' என்று அழைக்கவில்லை. உமா மிகுந்த சங்கோசத்துடன் பயத்தம் கஞ்சியை எடுத்து வந்து அவருக்கு அருகிலிருந்த 'மோடா'வை இழுத்து அதன் மேல் வைத்து விட்டு உள்ளே வேகமாகப் போகத் திரும்பினாள்.

''அம்மா உமா! நான்தான் ஒன்றும் வேண்டாம் என்றேனே? எதற்குப் பயத்தம் கஞ்சி போட்டாய்? இத்தனை வேண்டாம். குழந்தைகளுக்குக் கொடு...''

டபராவில் சிறிது ஊற்றிக் கொண்டு மிகுதியை டம்ளருடன் நகர்த்தி வைத்தார் பாலகுரு. மேலும் அவளைப் பார்த்து, ''தியாகு சாப்பிடுகிறானா?'' என்று கேட்டார்.

''ஆமாம்'' என்று ஒரு வார்த்தையில் பதில் கூறிவிட்டு டம்ளரை எடுத்துக் கொண்டு உள்ளே போய்விட்டாள் அவள்.

''ஆமாண்ணா'' என்று அண்ணா போட்டு அழைக்கும் அவள், 'ஆமாம்' என்று வார்த்தையைச் சுருக்கி விட்டது அவரை நறுக்கென்று தைத்தது.

உள்ளே படுரகசியமாகப் பேசும் குரல்கள் தெளிவற்றுக் கேட்டன. குழந்தைகள் சாப்பாடானதும் படுக்கப் போய்விட்டார்கள். தியாகு அந்தச் சாக்கில் அவர்கள் படுக்கையைத் தட்டிப் போடுவது போலத் தலை



''அவர் பேச்சு ருசியே இல்லாமல் 'சப்'னு இருக்கே ஏன் ?''

'' ஒரு வாரமா உப்பில்லாப் பத்தியமா இருக்கார்னு கேள்விப்பட்டேன்!''

யனைகளை டப் டப்பென்று அறைந்து தட்டிக் கொண்டிருந்தான்.

உமா தன் உணவையும் முடித்துக் கொண்டு விட்டாள் என்பதற்கு அடையாளமாகச் சமையலறையைப் பரட் பரட்டென்று தேய்த்துக் கழுவிக் கொண்டிருந்தாள்.

சேகருக்காக யாரும் சாப்பிடக் காத்திருப்பதில்லை அந்த வீட்டில். மேடைமீது அவன் சாப்பாட்டை மூடிவைத்து விட்டு வேலைகளை அவள் முடித்துக் கொள்ளவும் சேகர் செருப்புகளை வழக்கத்தைவிட அதிகமாகத் தேய்த்தபடி உள்ளே நுழைந்தான்.

பாலகுருவை ஓரக்கண்ணல் எடைபோட்டபடி உள்ளே சென்று உடை மாற்றிக்கொண்டு குழாயடிக்குச் சென்று கைகால்களைக் கழுவிக் கொண்டு கூடத்திநுள் நுழைந்தான் சேகர்.

''ஏண்டா இவ்வளவு தாமதம்? இந்த வேளையில் கடைக்கு யாரும் அந்தப் பிராந்தியத்தில் வர மாட்டார்களே? பொழுதோடு வந்து சேருவதுதானே?''

''நாகசாமி வந்திருந்தார்.'' சேகர் சொற்களை வீசி விட்டுச் சமையலறைக்குச் சென்று 'பொப்பே' முறையில் தட்டுகளில் வேண்டியவற்றை எடுத்துப் போட்டுக் கொண்டு குறுக்கும் நெடுக்குமாக உலாவிக் கொண்டே சாப்பிட ஆரம்பித்தான்.

''உட்கார்ந்துதான் சாப்பிடேன் சேகர்! எங்கோ ரயிலுக்குப் போகிற மாதிரி என்ன அவசரம்?'' என்று கேட்டாள் உமா.

''ஓ! எனக்கு என்ன அவசரம்? எனக்கு எதற்கு அவசரம்? எல்லாமே தாமதமாக நடக்கலாமே! சாப்பாட்டிலிருந்து கல்யாணம் வரை!''

''கல்யாணம்தானே? இந்த வருஷத்திலாவது சாப்பாடு போடப்பா. நாக்கு செத்துக் கிடக்கிறது'' என்றாள் மாமி என்கிற உரிமையுடன் உமா.

''ஆஹா!'' என்று சத்தம் போட்டுச் சிரித்தான் சேகர். ''எனக்குக் கல்யாணத்துக்கு என்ன மாமி அவசரம்? இன்னும் பத்து வருஷங்கள் போகலாமே? இப்போ வயசு மூப்பதாச்சு....''

பாலகுரு தம் அமைதியை இழக்காமல் இந்தச் சுடுசரங்களைத் தாங்கிக் கொண்டார். நாகசாமி வத்தி வைத்திருப்பார் என்பதும் அவருக்குப் புரிந்து விட்டது.

''நாகசாமி வந்திருந்தானா?'' என்று கேட்டார் பாலகுரு.

''வந்திருந்தார்.''

''என்ன சொன்னான்?''

''என்ன சொல்லியிருப்பார்?''

''உன்னைக் கேட்டால் என்னைக் கேட்கிறயே?'' என்று எரிந்து விழுவது போல் பேசினார் பாலகுரு.

''உங்களுக்குக் கல்யாணமென்று சொன்னார். நடக்க வேண்டியதுதான்! அவசியம் நடக்க வேண்டும் என்றேன்'' என்றான் சேகர், கதவுக்குப் பின்னால் ஒளிந்தபடியே.

பாலகுருவின் முதுகில் யாரோ சாட்டையால் ஒரு சொடுக்குச் சொடுக்கி விட்டு நிறுத்தியது போல் இருந்தது.

''ஏண்டா சேகர்! அப்படிக் கதவுக்குப் பின்னாடி ஒளிஞ்சிண்டு எதுக்கடா முணு முணுக்கறே. நேரே வந்துதான் பேசேன். எதையும் முகத்துக்கு முன்னாடி பேசித் தீர்த்துக்கணுமடா. முதுகுக்குப் பின்னாடி பேசப்படாது...'' பாலகுருவுக்குத் தம் குரலின் வேகத்தைக் கண்டு பயமே ஏற்பட்டது.

சேகர் விருட்டென்று வெளியே வந்து அவர் எதிரில் நின்றான். ''இதோ வந்திருக்கிறேன். உங்களுக்குக் கல்யாணம் என்று நாகசாமி சொன்னார். ஜாம் ஜாம்னு நடக்க வேண்டியதுதான் சுவாமி. இரட்டை நாயனம், மாப்பிள்ளை அழைப்புக்குப் பாண்டு வேண்டுமானாலும் வச்சுடலாம். கச்சேரி கிச்சேரி வைக்கச் சொல்லுங்கோ, ரிஸப்ஷனுக்குன்னேன்...'' சேகர் ஒரே மூச்சில் பேசி நிறுத்தியவுடன் அவனை விநோதமாகப் பார்த்தார் பாலகுரு.

'அட! பொடிப் பையன்! பேச்சு எவ்வளவு நீளத்துக்கு நீளறது பார்த்தியா? இவனைத் தோளிலேயும், மார்பிலேயும் தூக்கி வளர்த்தவன் நான். அம்மா, அப்பா முகம்கூட இவனுக்குத் தெரியாது. என்னவோ சொல்லுவாளே 'நாயை வளர்த்து நடுவீட்டிலே வைச்சாலும் எங்கோ போய், எதையோ தின்னுட்டு வரும்னு' அந்த மாதிரின்னா இருக்கு...'

விசித்திரமாகப் பார்க்கும் பாலகுருவின் பார்வையைச் சகிக்க முடியாமல் சேகர் சிறிது திணறினான்.

உள்ளே இருந்து உமா குரல் கொடுத்தாள்.

''சேகர்! பால் வச்சிருந்தேனே. சாப்பிட்டியோ?''

பேச்சை அத்துடன் நிறுத்த வேண்டுமென்றோ, மேலே ரசாபாசமாகிவிடக் கூடாதென்றோ உமா கூப்பிட்டதாகத் தோன்றியது.

குறைந்த செலவில் அதிக உற்பத்தி


டாடா ஸ்டீல் தொழிற்சாலையில் உள்ள ஆறு இரும்பு உருக்கு உலைகளையும் சில ஆண்டுகளுக்கு ஒரு முறை 'பழுது' பார்க்கவேண்டியுள்ளது. இரும்புத் தொழிற்துறையினர் இவ்வேலையை ரீலைனிங் என்று அழைக்கின்றனர். இது ஒரு முக்கியமான வேலையாகும், இவ்வேலைக்கு ஆயிரக்கணக்கான டன் உஷ்ணத்தால் பாதிக்கப்படாத செங்கற்களும், எஃகும், உருக்கு இரும்பும், பல மைல் நீளமுள்ள மின் கம்பிகளும் மற்றும் 'குழாய்களும்' தேவைப் படுகின்றன. மேலும் பல தொழிற்கலை வல்லுனர்களும் தேர்ச்சி மிக்கத் தொழிலாளர்களும் தேவைப்படுகிறார்கள். இவ்வேலைக்கான ஒவ்வொரு கட்டடமும், ஒவ்வொரு அம்சமும் முன்கூட்டியேத் திட்டமிடப்படுகிறது. பிறகு இவ்வேலையை விரைவாகவும் குறைந்த செலவிலும் முடிக்கும் பொருட்டு, தொழிற் கலைஞர்களும் தொழிலாளர்களும் இரவு பகலாக இணைந்து கருமமே கண்ணாகச் செயல் படுகின்றனர்.

கடந்த பல ஆண்டுகளாக டாடா ஸ்டீல் இந்தத்துறையில் மிகுந்த முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. 1957ல் ஓர் இரும்பு உருக்கு உலையை ரீலைனிங் செய்வதற்கு 99 நாட்கள் தேவைப்பட்டன. 1963ன் தொடக்க காலத்தில் இவ்வேலை 74 நாட்களில் செய்யப்பட்டது. இச்சாதனையை மிஞ்சுவது கடினம் என்று பலரும் அப்போது கருதினர். ஆனால் ஆறு மாதங்களுக்குள்ளாகவே இரும்பு உருக்கு உலை 64 நாட்களில் ரீலைனிங் செய்யப் பட்டது.

ஆனால் இத்தோடு முடிவு அடையவில்லை. 1957ல் 99 நாட்களில் இரும்பு உருக்கு உலையை ரீலைனிங் செய்யப்பட்ட வேலை 57 நாட்களிலேயே செய்யப் பட்டுள்ளது. இதன் விளைவாக, 'பழுது பார்ப்பதில் மிச்சப்படுத்தப்பட்ட நேரம்' இன்றியமையாத் தேவையான எஃகு உற்பத்தியை அதிகரிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு வேலையை மேலும் மேலும் குறைந்த நேரத்தில் செய்வதற்காக எடுக்கப் படுகின்ற இடைவிடாத இதயபூர்வமான முயற்சிகளும் இதர சாதனைகளும் செலவினங்களைச் சிக்கனமாக்கி உற்பத்தியைப் பெருக்குதல் என்று நிறுவனம் ஏற்றுக்கொண்டுள்ள அடிப்படை இலட்சியத்தை அடைவதற்காகப் புரியப்படுகின்றன.


டாடா ஸ்டீல்



The Tata Iron and Steel Company Limited

WTTN 2834A

சளியை அறவே அகற்ற புதிய சக்தி



அனோலியம்

மற்றெந்த மருந்தையும் விட அதிகப் பயன் தருவது

துரித நிவாரணம்
சருமத்தினுள் சீக்கிரத்தில் செல்கிறது

கறை ஏற்படுத்தாதது
பிசுக்குத் தன்மையும் குறைவே

மென்மை மிக்கது
பச்சைக் குழந்தைகளின் பூவுடலுக்கும் கூட உகந்தது

அனோலியத்தை உபயோகிக்கும் முறை

1. மார்பில் தடவித் தேய்க்கவும்
2. கழுத்தில் பூசிக்கொள்ளவும்
3. மூக்கின் இருபுறமும் தடவவும்
4. அனோலியத்தை வெந்நீரில் கரைத்து, அதன் ஆவியை உள்ளிழுக்கவும்

சளி பிடிக்கும்வரை காத்திராதீர் - இன்றே அனோலியம் வாங்குங்கள்

"போடா! மாமி கூப்பிடுகிறாள் பார். போய்ப் பாலைச் சாப்பிடு'' என்று அசதியுடன் கூறிவிட்டு வாசல் திண்ணைக்குச் சென்றார்.

விஷயத்தை இவ்வளவு அலட்சியமாக ஒதுக்கி விடுவார் என்று சேகர் எதிர்பார்க்கவில்லை. பாலகுருவையும் அவருடைய அசட்டுக் கொள்கையையும் எதிர்த்துப் போராட வேண்டும்என்று தீவிரமாகஇருந்தான் அவன்.

வாசல் சாய்மணையில் தலையைக் கையின் மேல் தாங்கியபடி உட்கார்ந்திருந்த பாலகுருவுக்கு ஒரே குழப்பம். இந்த வயதில் திருமணப் பேச்சை எடுத்தது தவறோ என்று கூட நினைத்தார்.

ஊர் அடங்கி விட்டது. [மாடியில் தியாகுவின் அறையில் விடி விளக்கு எரிகிறது. உமாவும் அவனும் ஏதோ பேசிக் கொண்டிருக்கிறார்கள். பேச்சு பாலகுருவின் விசித்திரமான ஆசையைப் பற்றியும் இருக்கலாம்.

'அட! பேசிவிட்டுப் போகட்டுமே! இவனுக்குப் பெண் பார்த்துக் கல்யாணம் பண்ணி வச்சேனே. ஜாம் ஜாம்னு பண்ணிண்டான். அட! அண்ணா ஒருத்தன் இருக்கானேன்னு யோசனை பண்ணினானோ? நான் படிப்பிலே மட்டம்தான். அதனாலேதான் கடை கண்ணி வைச்சுப் பொழைக்க ஆரம்பிச்சேன். படிச்சவன்னுத்தான் மதிப்பா என்ன? வியாபாரத்துலே, உத்தியோகத்துலே சம்பாதிக்கிறதை விட அதிகமாகத்தான் சம்பாதிச்சேன். ஒருத்தருக்கும் எனக்குக் கல்யாணத்தைப் பண்ணணும்னு தோணலை. எனக்கே தோணலை. பெரிய பாரத்தை என் தலையிலே சுமக்கிற மாதிரி சேகருடைய அம்மா கல்யாணத்தை நான்தான் நடத்தினேன். அப்புறம் தியாகு கல்யாணம் ஆச்சு. சேகருடைய அம்மா மொதல்லே போயிட்டா- இவனை இரண்டு வயசுக் குழந்தையா விட்டுட்டு. அப்புறம் அவன் அப்பாவும் போயிட்டான். இந்தப் பயலை எப்படியெல்லாம் வளர்த்திருப்பேன்!

'உமா நல்ல பெண்தான். பய பக்தியோடதான் என்னிடம் நடந்துக்கிறா. இருந்தாலும் இவா எல்லோருமே எனக்கு அசல் மனுஷா மாதிரி தோன்றுகிறது. எனக்கே எனக்குச் சொந்தமா ஒருத்தி வரப்படாதா என்ன?'

பாலகுரு பனியன் பாக்கெட்டில் கைவிட்டு நாகசாமி கொடுத்த புகைப்படத்தை வெளியே எடுத்துத் தெரு விளக்கின் ஒளி விழும் பக்கமாகப் பிடித்துப் பார்த்தார். புகைப்படத்தில் இருக்கிறவள் 'மூக்கும் முழியு'மாக நன்றாக இருந்தாள். இளமை குறுகுறுப்பு, அந்த வயசின் கவர்ச்சி எல்லாம் அடங்கி அமைதியாக இருந்தாள் அவள். அந்த வயசு இனிமேல் வருமா? போனது போனதுதான்! பாலகுருவுக்கே அந்தப் படத்தைப் பார்க்க வருத்தமாக இருந்தது. ஒரு பெண்ணின் இளமைக் காலம் வீணாகி விட்டதே யென்று வருந்தினார்.

அவளுடைய அந்தக் காலம் விரயமாகிப் போனதால்தான் தன்னால் அவளைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள முடிகிறது என்கிறதை நினைத்தபோது சிரிப்பு வந்தது. ஒருவருடைய நஷ்டம் இன்னொருவருடைய இலாபத்தில் வந்து முடிகிறது விந்தை!

'சரி, எப்படியும் நாளைக்கு நாகசாமியைப் பார்த்து விஷயத்தை முடிச்சுடச் சொல்லலாம்...'

பின்பு பொழுது விடிந்தது ஒன்றுதான் அவருக்குத் தெரியும். பாப்பா சமூகப் பாடத்தை இரைந்து படித்த சத்தத்தில் கண் விழித்தார்.

வழக்கம் போல் காப்பியை அன்று உமா கொண்டு வந்து வைக்கவில்லை. பையனிடம் கொடுத்தனுப்பினாள். 'என்னண்ணா! என்ன சமைக்கட்டும்?' என்றும் கேட்கவில்லை. அந்த விஷயங்களுக்கெல்லாம் தான் அன்னியமாகிவிட்டாற்போன்ற உணர்வில் அவள் திண்டாடிக் கொண்டிருந்தாள்.

''பெரியப்பா! காப்பிக்குச் சர்க்கரை போறுமா?'' என்று பையன் விசாரித்தான். உள்ளே யிருந்து வெந்தயக் குழம்பின் வாசனை கமகமவென்று அடித்தது. உமா ஏன் தன்னை மார்க்கெட்டுக்குப் போய்க் கறிகாய் வாங்கிக் கொண்டு வரச் சொல்லவில்லை? கடைக்குட்டிப் பையன் மரக் குதிரை மேல் ஏறி உட்காரப் பெரியப்பாவின் துணையை நாடவில்லை?

''இந்தாடா கண்ணா! குதிரை மேல் உன்னை ஏத்தி விடட்டுமா?'' என்று கேட்டார் பாலகுரு.

''வாந்தாம் பீப்பா! நானே ஏறிப்பேன்!'' என்று கீச்சுக் குரலில் சொன்னான் கண்ணன். குழந்தைக்கு என்ன புரியுமா? ஓ! அதுக்குப் புரியாதது எது? பெரியப்பாவைப் பற்றி அப்பாவும் அம்மாவும் ஒருபாட்டம் ரகசியம் பேசித் தீர்த்தால் அதுவும் அவரை வேண்டாமென்று தள்ளுகிறது போலும்!

பாலகுரு அந்தக் காலை வேளையில் ஷர்ட் அணிந்து கொண்டு யாரும் பார்த்ததில்லை. அரைக் கை பனியன் போட்டுக் கொண்டு தான் கடைத் தெருவுக்கே போகிற வழக்கம். தும்பைப் பூப்போன்ற வேட்டியும் ஷர்ட்டும் அணிந்து கொண்டு வாசனைத் தைலம் தடவித் தலை வாரிக் கொண்டார். புதுச் செருப்புகளைப் போட்டுக் கொண்டு வாசல் வராந்தாவில் வந்து நின்று, ''பாப்பா! நான் வெளியே போயிட்டு வரேம்மா. சாப்பாட்டுக்கு வர மாட்டேன். இந்தா, நீயும் தம்பிகளும் பிஸ்கோத்து வாங்கிக் கொள்ளப் பணம். அந்தக் கண்ணன் பயல் கூட சாக்லேட் வேண்டான்னுட்டான். போக்கிரிப் பயல்! என்ன புரிஞ்சுதோ அவனுக்கு. போய் வரட்டுமா?'' என்று கேட்டு ஒரு கணம் தயங்கி நின்றார் அவர்.

பாப்பாவோ, அவளுக்கு அடுத்தவனோ, குட்டிக் கண்ணனோ ''வாண்டாம் பெரியப்பா''ன்னு காலை வந்து கட்டிக் கொள்வார்கள் என்று ஓர் ஆதங்கம்.

பாப்பா தன் கண்களை மலர்த்தி அவரை வியப்புடன் பார்த்து விட்டு ரூபாய் நோட்டை வாங்கிக் கொண்டாள்.

உமாவின் உருவம் சமையற்கட்டின் 'டைனிங் ஹால்' கதவுக்குப் பின்னால் தெரிந்தது. பிறகு மறைந்து விட்டது. தியாகு ஏதோ தோட்டம் போடுகிறானாம். 'கிச்சன் கார்டன்' அதிகாரியை வரவேற்றுப்



''ஏம்பா, சோப்பு இருக்கா?''
'' 'அவுட் ஆப் ஸ்டாக்'குங்க!''
''அப்படியானால் சீப்பு இருக்கா?''
''இல்லீங்களே!''
''ம்.... கண்ணாடி....?''
''நாளைக்கு வருதுங்க!''
''பௌடர் டப்பா ?''
''இருந்தது ஒன்னுதான். அதைச் சற்று முன்னால்தான் ஒருத்தர் வாங்கிக்கிட்டுப் போயிட்டார்.''
''பின்னே எதுக்குத்தானய்யா, கடையைத் திறந்து வைச்சுக்கிட்டு இருக்கே? இழுத்துப் பூட்டிக்கிட்டுப் போவதுதானே?''
''அதுதான் பார்க்கிறேன்! பூட்டு கிடைக்கல்லே!''

- தி. ச. எஸ். பெருமாள்

பேசிக் கொண்டிருந்தாள். பாலகுரு உடுத்துக் கொண்டு எங்கோ கிளம்புவதை ஓரக் கண்ணால் அடிக்கடி பார்த்துக் கொண்டிருந்தாள்.

சேகர்? அவன் இன்னும் எழுந்திருக்கவேயில்லை. காலை ஒன்பது மணிக்குப் போய்க் கடையில் உட்கார வேண்டும். மற்றதை உதவியாளன் கவனித்துக் கொள்வான்.

பாலகுரு வேகமாகத் தெருவில் இறங்கி நடக்க ஆரம்பித்தார். வெய்யில் அதிகமில்லை. இருந்தாலும் 'சுர்ர்' என்று சுடுவது போல் தாக்கியது.

மனத்தின் கோளாறுதான். இதே பாலகுரு பொரிகிற வெய்யிலில் கண்ணனுக்குப் பால் டப்பா வாங்கத் தெருத் தெருவாக அலைந்திருக்கிறார்.

ஏதோ ஓர் அதிசயம் நிகழ்ந்து விட்டாற் போல் தியாகு பரக்கப் பரக்க அதிகாரிக்கு விடை கொடுத்து அனுப்பிவிட்டு உள்ளே வந்தான். உமாவுடன் மோதிக் கொள்ளாத குறைதான்.

''ஏன்னா! பார்த்தீர்களா அவரை?'' என்றாள் உமா வியப்புடன்.

''பார்த்தேன்.. பார்த்தேன்.. அந்த நாகசாமி வீட்டுக்கு ஓடுகிறான். போகிறதே புத்தி இந்த வயசில்?''

உமா களுக்கென்று சிரித்தாள். காலா காலத்தில் பூக்கிறதையும் காய்க்கிறதையுமே யாரும் விரும்புவார்கள் போலும்.

சேகர் மாடியிலிருந்து கீழே இறங்கி வந்தான். கொஞ்ச நேரம் அமைதி. பல் தேய்த்தாகி விட்டது. உமா காப்பி கொண்டு வந்து கொடுத்தாள். வீட்டைக் கண்களால் அளந்து விட்டு, ''பெரிய மாமா எங்கே மாமி?'' என்று கேட்டான் சேகர்.

உமா சிரித்தாள். ''கல்யாணம் பண்ணிண்டு வரப் போயிருக்கிறார் சேகர். போய்ப் பெரிய ஹோட்டலிலே ரிஸப்ஷனுக்கு ஏற்பாடு பண்ணு போ!''

சேகரின் முகம் கன்றியது. ரத்தச் சிவப்பாக மாறியது; வெளுத்தது.

'''சே! அவமானம். கல்யாணத்தை இந்த ஊரிலே நம்ம எதிரிலேயே வச்சுக்கப் போறார். வெளியே என்னாலே தலை காட்ட முடியாது. வெளியூரிலே கோவிலில் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லுங்கோ, மாமா.''

தியாகு சேகரை நிமிர்ந்து முறைத்துப் பார்த்தான். வயதில் மூத்தவன். தந்தையின் ஸ்தானத்தை வகிப்பவன். திருமணம் செய்து கொள்வது அவன் சொந்த விஷயம். இதற்குப் போய் அவன் தோள் மீது வளர்ந்தவன் பழிப்புக் காட்டுகிறானே! தூ! வெட்கக் கேடு. தியாகு சேகருடன் பேசாமல் சென்று விட்டான்.


பாலகுரு மீண்டும் வீட்டுக்கு மாலைதான் வந்தார். வந்தவர் தம் தோல் பெட்டியில் துணிமணிகளை அடுக்கி வைத்துக் கொண்டு பிரயாணத்துக்கு ஆயத்தப்படுத்திக் கொண்டார். ''தியாகு! நான் வெளியூர் போயிட்டு வருகிறேன். உனக்குப் பணத்தட்டு ஏற்பட்டால் சேகர்கிட்டே வாங்கிக்கோ. அநேகமாப் பத்துப் பதினைஞ்சு நாளிலே வந்துடுவேன். என்னைப் பத்தி என்னவோ ஏதோ என்று சந்தேகப்படாதீங்கோ. கவலைப்படாதீங்கோ. உமா! குழந்தைகளை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கோம்மா'' என்று கூறி விட்டுக் கிளம்பினார்.

அப்புறம் நாகசாமி கூறிய தகவலிலிருந்து புகைப்படத்திலிருந்த பெண் வீட்டார் திருச்சியில் இருப்பதாகவும் அங்கு போகத்தான் அவர் டிக்கட் வாங்கினார் என்றும் தெரிய வந்தன.

பாப்பாவும் அவள் தம்பிகளும் பெரியப்பாவுக்காக ஏங்கி விட்டார்கள். கல்யாணமென்றால் கொட்டு மேளம், பலகார வகைகள் என்று நினைத்துக் கொண்டிருந்த குழந்தை உள்ளங்கள் ஏமாற்றத்தை அனுபவித்தன. பெரியப்பா கல்யாணமே பண்ணிக் கொள்ள வேண்டாம். வீட்டுக்கு வந்து தங்களிடம் பழையபடி அன்பாக இருந்தால் போதும் என்று ஏங்கின.

அவர் கல்யாணம் கடைசியில் மாய மந்திரம் போல, புராணக் கதைகளில் வரும் மாயா பஜார் கல்யாணம் போல மாயமாக நடப்பதாகத்தான் அவர்களுக்குத் தோன்றியது. பாலகுரு எந்த ஊரில் இருக்கிறார், என்று வருவார் என்பது ஒருவருக்கும் தெரியவில்லை. உமா மைத்துனருக்குப் புதுக் குடித்தனம் வைக்க ஒரு வீட்டில் சின்ன போர்ஷனும் பார்த்து வைத்திருந்தாள்.

''இதெல்லாம் என்ன அசட்டுத்தனம் உமா? அவன் என்னிடம் ஊருக்குப் போய் வருகிறேன் என்று மட்டும் சொன்னான்.



திருப்தியளிக்கும் புது உலகம்

உற்சாகம் நிரம்பிய புது உலகத்திற்கு அழைத்துச் செல்லும் ப்ரூக் பாண்ட் A-1 தேயிலைத் தூள். ஒரு பாக்கெட்டிற்கு அதிக கப்புகள் சுவையுள்ள தேநீரைக் கொடுக்கும். மகிழ்ச்சியூட்டும் ப்ரூக் பாண்ட் A-1 தேயிலைத் தூளை வாங்குங்கள் - இன்சுவையும் நறுமணமும நிரம்பிய புது உலகத்திற்கு அழைத்துச் செல்லும்.

BB3441

அப்படி அவன் கல்யாணம் பண்ணிக் கொண்டு மனைவியோடு வரட்டும். பிறகு இந்தத் தனிக் குடித்தனத்தைப் பற்றி யோசனை பண்ணலாம்'' என்றான் தியாகு.

உமா உதட்டைப் பிதுக்கி ஒரு நொடிப்பு நொடித்தாள் அவனைப் பார்த்து.

''வருகிறவள் யார் தெரியுமா? உங்கள் மன்னி. தமையன் மனைவி. நான் இந்த வீட்டுக்கு வந்து பதினொரு வருஷங்களுக்கப்புறம் அவள் வந்தாலும் என்னை விட வயதில், ஸ்தானத்தில் அவள்தான் பெரியவள். ஒருத்தருக்கொருத்தர் எதற்குக் கசப்பு? முன்னாடியே விலகி யிருப்பது நல்லதுதானே?''

ஊரெல்லாம் பாலகுருவின் காலம் கடந்த திருமணத்தைப் பற்றிக் கசமுசவென்று பேசிக் கொண்டார்கள். உமாவும் சேகரும் எப்படியோ வந்தவர்கள் போனவர்களிடம் பாதி ஆத்மார்த்தமாகவும் பாதி கேலியாகவும் இவ்விஷயத்தைப் பற்றிப் பேசித் தீர்த்தார்கள்.

சேகர் இனிமேல் பாலகுருவின் கடையில் தனக்கு மானேஜர் பதவி இருக்காதென்று தீர்மானித்துப் பல வேலைகளுக்கு முயன்று கொண்டிருந்தான்.

''இதற்குத்தான் நான் அப்போதே அடித்துக் கொண்டேன், இந்தக் கடையில் வேலை வேண்டாமென்று. மாமாதான் ஏதோ புரட்டி விடுவதாகப் பீத்திக் கொண்டார்'' என்ற நிஷ்டூரம் வேறே அவனுக்கு.

பாலகுரு வீட்டை விட்டுப் போய் மூன்று மாதங்களுக்கப்புறம் ஒரு நாள் அதிகாலையில் வீட்டுக்குத் திரும்பி வந்தார்.

ஊர் இன்னும் விழித்துக் கொள்ளவில்லை. ரயிலடியிலிருந்து வழக்கமாக அவர் டாக்சியில்தான் வருவார். அன்று நடந்தே வந்தார். ரயிலடி நெடுஞ்சாலையில் அதிகக் கூட்டமில்லை. அடர்ந்த தூங்குமூஞ்சி மரங்களில் கிறு கிறுவென்று சிட்டுக்கள் உதயத்தின் வரவை அறிவித்தபடி சுற்றிச் சுற்றிப் பறந்தன.

பாலகுருவின் மனத்தில் என்றுமில்லாத நிறைவு ஏற்பட்டிருந்தது. தென்னிந்தியாவில் திவ்விய க்ஷேத்திரங்களுக்குப் போய்க் கடவுளைத் தரிசித்து விட்டு வந்த நிறைவு அது.

யோசித்தபடி நடந்தார் அவர்.

திருச்சியில் நாகசாமி கொடுத்திருந்த விலாசத்தில் பெண் பார்த்துவிட்டு வரும் உத்தேசத்துடன் அவர்கள் வீட்டை அடைந்தார். பெண் நன்றாக இருந்தாள். இருபதாவது வயதிலிருந்து பெண் பார்க்க வருபவர்கள் எதிரில் வந்து உட்கார்ந்து உட்கார்ந்து அவளுக்கு அலுத்துப் போய்விட்டதால் இப்போது பாலகுருவின் எதிரில் வந்து உட்காராமல் அவளே உணவு பரிமாறினாள்.

அவர் அங்கு போனபோது அவளுடைய பெற்றோர் இருவரும் வெளியூர் போய் விட்டார்கள். இவளுக்கு அடுத்த தங்கைக்குத் திருமணமாகிப் பிரசவத்துக்காக உதவி புரியப் பெற்றோரை அழைத்திருந்தாள். மற்றக் குழந்தைகளுக்கு ஒரு தாயைப் போல இருந்து அந்தக் குடும்ப நிர்வாகத்தை ஏற்று நடத்தி வந்தாள் அவள்.

''உனக்கு என்னைப் பிடிக்கிறதா? பிடிக்கிறதென்றால் இங்கே திருவானைக்காவிலோ, உச்சிப் பிள்ளையார் முன்போ திருமணம் செய்து கொள்ளுகிறேன்... எனக்கும்—பிரும்மச்சாரியாக இருந்தாலும் — குடும்பம் இருக்கிறது. என் தம்பிக்கு மூன்று குழந்தைகள். அந்தக் குழந்தைகளுக்கு என்னிடம் பிடிப்பு அதிகம். தங்கை பிள்ளை ஒருத்தனுக்கு நான் பார்த்துக் கல்யாணம் பண்ண வேண்டும்.''

அவளும் தைரியமாகப் பேசினாள். ''எனக்குக் கல்யாணத்திலேயே பிடிப்பு விட்டுப் போய்விட்டது. அதெல்லாம் ஒரு காலம். காலா காலத்தில் அந்த ஆசை அரும்பி மலர வேண்டும். அது மலர்ந்து காய்த்துப் பழுக்காமல் கருகி விட்டது. நான் வேலையில் இருக்கிறேன். மாசம் இருநூறு ரூபாய்க்கு என்னால் இந்தக் குடும்பத்துக்கு உதவ முடிகிறது. எனக்கென்று தனியாக இருந்த ஆசைகள் மடிந்துவிட்டன. தனிப்பட்ட ஆசைகளை மீறிக் கொண்டு இந்தக் குடும்பத்தின் ஆசைகள் என்னுள் செழித்து வளர்ந்து விட்டன. முன்னறையில் படிக்கிறாள் பாருங்கள், தள தளவென்று கொடிக்கால் வெற்றிலை மாதிரி; அவளுக்கு இப்பவே கல்யாணம் பண்ணிப் பார்த்துவிட வேண்டும். அந்த அரும்பு அவிழ்ந்து மலர்ந்து வாசம் வீசும்போதே அதை ஒருவனுக்கு உரிமையாக்க வேண்டும். இவ்வளவுதான் என் ஆசை—''

நியாயமான ஆசை! தியாகத்துக்கு ஒரு விளக்கம் என்று வேண்டுமானாலும் சொல்லலாம்.

ஒருவேளை அவளுடைய பெற்றோர் அங்கிருந்தால் பாலகுருவிடம் எப்படியாவது அவளை மணக்கும்படி வற்புறுத்தி யிருப்பார்களோ, என்னவோ!

''நான் வருகிறேன் அம்மா! உன் தங்கையின் ஜாதகத்தைக் கொடு. என் தங்கை பிள்ளையின் ஜாதகத்துக்குப் பொருந்துகிறதா பார்க்கிறேன்...''

பாலகுரு அந்தப் பெண்ணிடம் விடை பெற்றுக் கொண்டவர், க்ஷேத்திராடனம் போய்விட்டுத் தெளிந்த மனத்தினராக வீடு திரும்பிக் கொண்டிருக்கிறார்.

பாப்பா பாடம் படிக்க வாசல் தாழ்வாரத்தில் வந்து உட்கார்ந்தபோது கதவைத் திறந்து கொண்டு பெரியப்பா வருவதைப் பார்த்தாள்.

''பெரியப்பா வந்துட்டா! ஹையா! பெரியப்பா வந்துட்டா. பெரியப்பா, எங்கே பெரியம்மா?'' என்று சத்த மிட்டாள் குழந்தை.

பாலகுரு அவள் கன்னத்தில் வாஞ்சையுடன் தட்டிக் கொடுத்து விட்டுத் தனியாக வீட்டினுள் நுழைந்தபோது வீடே அதிசயித்தது.

''அண்ணா! என்னை மன்னித்துவிடு...'' என்று ஏதோ பேச ஆரம்பித்த தியாகுவிடம், ''ஏண்டா! சேகர் எங்கே? அவனுக்குப் பேஷான பெண்ணாகப் பார்த்து விட்டு வந்திருக்கேன். அவனுக்குப் பிடிச்சா கல்யாணம்தான்'' என்றார் பாலகுரு.

'ஹையா! சேகர் அத்தானுக்குக் கல்யாணம்!' என்று குழந்தைகள் குதித்து முழக்கினார்கள். அவர்களுக்கென்ன, யார் கல்யாணமாக இருந்தாலும் ஒன்றுதான்! கெட்டி மேளம், பட்டுப் பாவாடை, லட்டு உருண்டை கிடைக்கிறதல்லவா? பாலகுரு தாமும் குழந்தைகளோடு சிரித்து மகிழ்ந்தார்.

வட்ட மேஜை

காற்றினிலே வரும் கீதம் ☐

எம். ஜி. ஆர்.-பண்பின் உறைவிடம் ☐

தங்கப் பத்திரம் எங்கே? ☐

எவரெஸ்டுக்கும் மேலே! ☐

வெள்ளிக்கிழமை தோறும் எனக்குக் கல்கி கிடைக்கும். ''காற்றினிலே வரும் கீதத்தை'' நான் பூஜை வேளையில் படிப்பேன். சில நிமிஷங்களாவது கண்ணபிரானை உண்மையாகத் தியானித்து இந்த உலகத்தையே முற்றும் மறந்து வந்தேன். காதால்தான் கீதத்தைக் கேட்பார்கள். ஆனால் இதைப் படித்த போது இதயத்தில் பக்தியைக் கேட்க முடிந்தது. வினுவின் ஓவியங்கள் வெகு அற்புதமாக இருந்தன.

கொல்லம்
17—1—67 ராஜலக்ஷ்மி

ஃ ஃ ஃ

ஆன்மிகத் துறையில் இணையற்ற சேவை புரிந்து வரும் திரு ரா. கணபதிக்கும், தமிழ் கூறும் நல்லுலகத்துக்கு எல்லையற்ற பணி புரியும் கல்கிக்கும் இக்காவியம் மற்றொரு மாபெரும் வெற்றியாகும்.

நெய்வேலி—1
18—1—67 வெ. அவ்வயம்

ஃ ஃ ஃ

நான் எனது நண்பர்களுடன் எங்களது மன்றத்தின் ஆண்டு விழாவுக்குத் தலைமை தாங்குமாறு அழைக்க எம். ஜி. ஆர். தோட்டத்துக்கு அவரைப் பார்க்கச் சென்றிருந்தேன். அப்போது அவர் திருவான்மியூரில் நடைபெற்ற ஒரு குழப்பம் காரணமாக, அக்குழப்பத்தை ஏற்படுத்திய நபரையும், அப்பகுதி மக்களையும் காணப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். அதற்கு முன் எங்களைத் தமது இல்லத்தில் வரவேற்றுப் பேசினார். நான் எங்களது வாசகசாலையின் தோற்றம், இன்றைய நிலை ஆகியவற்றைக் கூறுமுன், நாங்கள் அரசாங்க ஊழியர்கள் எனவும், எங்கள் மன்றம் அரசியல் கட்சி சார்பற்றது என்றும் முன்னுரைகளோடு பேச்சை ஆரம்பித்தேன். உடனே மக்கள் திலகம் கழுத்தில் தாம் அணிந்திருந்த சிவப்பு — கறுப்பு நிறத் துண்டை எடுத்துக் கீழே வைத்து விட்டு எங்களுடன் மனம் மகிழப் பேசி எங்களின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டார். அவரது உயர்ந்த பண்பை எண்ணி எண்ணி என் மனம் இன்பமடைகிறது.

சென்னை—16 கே. பஞ்சாட்சரம்,
21—1—67 காரியதரிசி, இளைஞர் மனமகிழ் மன்றம்

ஃ ஃ ஃ

1965ல் பாகிஸ்தான் படையெடுப்பின் போது மக்கள் தங்களிடம் உள்ள தங்கத்தை [illegible]ம் அரசாங்கத்துக்குக் கொடுத்துவிட வேண்டும் என்று தலைவர்கள் கேட்டுக் கொண்டார்கள். அதற்குப் பதிலாகத் தங்கப் பத்திரம் வாங்கி வைத்துக் கொள்ளச் சொன்னார்கள்.

அந்த நெருக்கடி காலத்தில் தேசபக்தியினால் உந்தப்பட்டு நான் என் மனைவி மக்களைத் தங்க நகைகளைக் கொடுத்து விடுமாறு வற்புறுத்தினேன். 22 காரட் மதிப்புள்ள 539 கிராம் தங்கத்தை முதன்மந்திரியிடம் 1965 நவம்பர் 30ம் தேதி கொடுத்தேன். இது தாசில்தாரிடமும் பிறகு அவரிடமிருந்து ஸ்டேட் பாங்கினிடமும் சென்று எனக்கு நகைகளைப் பெற்றுக் கொண்டதாக ரசீது வந்துள்ளது.

ஆனால் இப்போது ஓராண்டுக்கு மேலாகியும் எனக்குத் தங்கப் பத்திரங்கள் இன்னமும் வந்து சேரவில்லை. ஸ்டேட் பாங்குக்கும் ரிஸர்வ் பாங்குக்கும் மத்திய நிதிமந்திரி சபைக்கும் பல முறைகள் கடிதம் எழுதியும் சரியான தெளிவான பதில் இதுவரை கிடைக்கவில்லை.

தங்கப் பத்திரம் கையில் இருந்தால் ஓர் அவசரத்துக்கு அதை அடகு வைத்துக் கடன் பெறலாம். அல்லது நகையாகவே என்னிடம் இருந்தாலும் எப்போது வேணுமானாலும் கடன் பெறலாம். இப்போது எதற்கும் வழியில்லை.

நகைகளை வாங்கிக் கொண்டு ஓராண்டு காலத்துக்கு மேலாகியும் அதற்குரிய பத்திரங்களை வழங்காத இந்தக் காங்கிரஸ் சர்க்காரிடம் மக்களுக்கு எப்படி நம்பிக்கை ஏற்பட முடியும்?

கும்பகோணம்
10—1—67 வி. ஆர். மூர்த்தி

ஃ ஃ ஃ

'**மு**ள்ளும் மலரும்' நாவலில் மங்காவைப் படைத்து அவள் வாயிலாக அதிசயமான கருத்துக்களை வெளியிட்டு வருகிறார் ஆசிரியர் உமாசந்திரன்.

''மெய்யாவாய்யா? வள்ளியக்காவா மூணு முடிச்சுப் போடும்? அப்ப நான் உன்னையே கட்டிக்கறேன்'' என்ற செப்படி வித்தை போன்ற வாக்கியத்தின் மூலம் மங்கா வள்ளியிடம் கொண்டிருக்கும் நட்பின் உயர்வு எவரெஸ்டு சிகரத்துக்கும் மேலே சந்திர சூரிய மண்டலங்களையேகூட எட்டி விட்டது!

நாகர்கோவில்
14—1—67 எம். முத்துப்பெருமாள்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor: T. Sadasivam.


ஆஹா...கோலினூஸ்



புதியது - தூயது...

கோலினூஸின் சுவை :
நாவில் புத்துணர்ச்சியூட்டும் இனிய சுவை.
கோலினூஸின் நுரை :
துலக்குவதை எளிதாக்கும், பூரணமாகத் தூய்மைப்படுத்தும்.
கோலினூஸ் கொடுக்கும் அந்த
இனிய சுவாசத்தை நீங்கள் விரும்புவீர்கள்.
மற்றவர்களும் விரும்புவார்கள்.

அந்த ஐந்தாவது பெண்ணிற்கு ஒரு அருமையான யோசனை. கோலினூஸ் உபயோகித்து மற்றவர்களைப்போல புன்னகைபுரியுங்கள். கோலினூஸ் கொண்டு காலையிலும் இரவிலும் பல்துலக்கி, புத்துணர்ச்சியும் தூய்மையும் பெறுங்கள். மற்றவர்கள் மத்தியில் மகிழ்வோடும் நம்பிக்கையோடும் உலவ உதவுவது கோலினூஸ்.



களிப்பில் மலரும் புன்னகை...அது கோலினூஸ் தரும் புன்னகை

பயன்படுத்த பதிவுசெய்யப்பட்டுள்ளோர்: ஜெப்ரி மானேர்ஸ் அண்ட் கம்பெனி லிமிடெட். ASP/GM/K-1K TAM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

இலங்கையில் 40 சதம்
தபால் செலவு தனி

